GEOLOGICAL SURVEY & MINES BUREAU



வருடாந்த அறிக்கை 2018

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்

வருடாந்த அறிக்கை

2018

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்

இல 569, எப்பிட்டமுல்ல வீதி, பிற்றகோட்டே

தொலைபேசி : 011 2886289/011 2886290
தொலைநகல் : 001 2886290
மின்னஞ்சல் : info@gsmb.gov.lk
வலைத்தளம் : www.gsmb.gov.lk

நோக்கு

“சமூக, கலாசார மற்றும் சுற்றாடல் விழுமியங்களை உறுதி செய்கின்ற அதேவேளை மக்களின் வாழ்க்கைத் தரத்தினையும் வாழ்வாதாரங்களையும் மேம்படுத்துவதன் பொருட்டு பூமி மற்றும் அதன் இயக்கவியல் என்பவற்றைப் புரிந்துகொண்டு முகாமை செய்வதன் மூலம் இலங்கையின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்பு நல்குதல்”

பணி

தொழில்நுட்ப பொருளாதார மற்றும் அறிவியில் ரீதியில் நிலைபெறு அபிவிருத்திக்கு அமைவாக புவிச்சரிதவியல் வளங்களுக்கான தேசிய மரபொழுங்குத் தொகுதியொன்றை வகுத்து, கனிம அகழ்வு, பதப்படுத்தல் மற்றும் ஆய்வுகளை ஒழுங்குபடுத்தி, நிலைபேறான உபாயமார்க்க சேவை வழங்கல்களை ஆய்வு செய்து, நிபுணத்துவ புவி அறிவியல் பற்றிய தகவல்களை வழங்கி மற்றும் இலங்கையின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு மூலோபாய ரீதியில் பங்களிப்பு நல்கி, பூமி மற்றும் அதன் இயக்கவியல் என்பவற்றைப் புரிந்துகொள்வதற்காக ஆராய்ச்சிகளில் முதலீடு செய்வதன் மூலம் இயற்கை வளங்களையும் சுற்றாடலையும் முகாமை செய்தல்.

செயல்துணுக்க நோக்கங்கள்

புவிச் சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தினால் நடைமுறைபடுத்தப்படுகின்ற பல்வகை நிகழ்ச்சித்திட்டங்களின் பரந்த தன்மையினையும் சிக்கல்தன்மையினையும் நோக்கும்போது புவிச் சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தினால் நடைமுறைபடுத்தப்படுவதற்காக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற சகல பணிகளுக்குமான நோக்கங்கள் மற்றும் முன்னெடுப்புக்கள் பற்றிய ஒரு ஆவணமாக இத்திட்டம் தொழிற்படவில்லை மாறாக, புவிச் சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தினால் அடைந்துகொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பெறுபேறுகள் மற்றும் மேற்கொள்ளப்படுதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற முக்கியமான மாற்றங்கள் பிரதிபலிக்கப்படுகின்ற முன்னுரிமையளிக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக புவிச் சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தினால் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பிரதான அணுகுமுறைகள் பிரதிபலிக்கப்படுகின்ற அடிப்படை மூலோபயங்கள் இத்திட்டத்தின் மூலம் முன்வைக்கப்படுகின்றன. புவிச் சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகமானது 10 நோக்கங்களையும் மூலோபாயங்களையும் கொண்டுள்ளதுடன் அடைந்துகொள்வதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற அவற்றுக்கான மூலோபாயங்களுடன் ஒவ்வொரு நான்கு மூலோபாய பணிச் சட்டகங்களின் கீழும் அவை கலந்துரையாடப்பட்டுள்ளன.

செயல்துணுக்க நோக்கங்கள்

01 - மூலோபாய நோக்கம் வெளிப்படையானதும், பாதுகாப்பானதும், விஞ்ஞான ரீதியானதும், நிலைபேறானதும், போட்டித்தன்மைமிக்கதுமான ஒழுங்குபடுத்தல் சூழலொன்றுக்காக சட்டக் கட்டமைப்பை மறுசீரமைத்தல்.

02- மூலோபாய நோக்கம் பௌதீக மற்றும் மனித வள ஆற்றல் விருத்தியினை மேம்படுத்துதல்.

03- மூலோபாய நோக்கம் ஆய்வுகள், கருத்திட்டங்கள் மற்றும் ஒத்துழைப்புகளை ஊக்குவிப்பதன் மூலம் புவி அறிவியல் ஆராய்ச்சியில் சிறந்து விளங்குதல்.

04 - மூலோபாய நோக்கம் வளங்களில் செழுமையான நாடுகளுடனான கூட்டினை விரைவுபடுத்தி ஆய்வுகளை முடுக்கிவிடுவதன் மூலம் வளங்கள் மற்றும் ஒதுக்கங்களை விரிவுபடுத்துதல்

05- மூலோபாய நோக்கம் புவி அறிவியல் ஆவணங்கள் மற்றும் தகவல்களைப் பெறுதல் மற்றும் பாதுகாத்தல் மற்றும் இலங்கையின் புவியியல் வளங்களின் தேசிய விபரக்கொத்தினைத் தொகுத்தல்

06 -மூலோபாய நோக்கம் கனிமத் துறையில் தொழில்நுட்ப-பொருளாதார, விஞ்ஞான மற்றும் நிலையான அபிவிருத்திக்கு வசதி வழங்குதல்

07 - மூலோபாய நோக்கம் பாதுகாப்பு மற்றும் சுரங்க மீட்பு

08 - மூலோபாய நோக்கம் பொதுக்களுக்கும் புவி அறிவியல் சமுதாயத்திற்கும் சேவை வழங்குதல் மற்றும் சமூகத் தொடர்புகளை ஏற்படுத்துதல்

09 - மூலோபாய நோக்கம் பணியின் நிலைபேறான அபிவிருத்திக்காக சேவை உருவாக்கும் வழிகளை மேம்படுத்துதல்

10 - மூலோபாய நோக்கம் பூமியின் இயக்கம் மற்றும் இயற்கை சூழலைக் கண்காணிப்பதன் மூலம் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக ஏற்படுகின்ற பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் பாதிப்புகளை மூலோபாய ரீதியில் குறைத்தல்

உள்ளடக்கம்

	பக்கம்
தலைவரின் செய்தி	08-10
பணிப்பாளர் நாயகத்தின் செய்தி	11-13
பணிப்பாளர் சபை	14
பணியகம் பற்றிய சில தரவுகள்	15-17
பணியகத்துடன் தொடர்புகொள்ளக்கூடிய விதம்	18-19
வரலாற்றுப்பின்னணி	20-21
புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப பணியகத்திற்கான எதிர்காலத்திட்டங்கள்	22-23
துறைசார் செயலாற்றுகை	
புவிச்சரிதவியல்பிரிவு	24-46
சுரங்கப் பிரிவு	47-64
நிதிமீளாய்வு	65
சட்டப்பிரிவு	66-68
மனிதவளமீளாய்வு	69
ஷதாபன நிருவாகம்	70-71
நிதி அறிக்கை	
கணக்கீட்டுக் கொள்கை	72-96
நிதி நிலைமை பற்றிய கூற்று	97-98
நிதிசார் செயலாற்றுகை பற்றிய கூற்று	99-100
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்	101-131
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	132-144
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்	145-153
கணக்காய்வுக் குழு அறிக்கை	154-159
நிறுவனத்தின் சமூகப் பொறுப்புகள்	160-169

தலைவரின் செய்தி

ஆரம்பத்தில் புவிச்சரிதவியல் அளவைத் திணைக்களமென அறியப்பட்ட இன்றைய புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகமானது 115 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டுள்ளது. ஜி.எஸ்.எம்.பி ஆனது 1992 ஆம் ஆண்டின் சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் தற்போது செயற்பட்டு வருகின்றது. பணியகத்தின் பெருநிறுவன இலக்குகளை அடைவதற்காக திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் அதன் பிரதான தொழில்நுட்பப் பிரிவுகளான புவிச்சரிதவியல் ஆய்வுப் பிரிவு மற்றும் சுரங்கப் பிரிவு ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. ஜி.எஸ்.எம்.பி. இன் முக்கியமான சக்திகளுக்கு மத்தியில் 35 விஞ்ஞானிகளையும் 40 பொறியியலாளர்களையும் உள்ளடக்கிய அதன் உயர்தகுதிவாய்ந்த மற்றும் திறமையான தொழில்சார் பதவியணி காணப்படுகின்றது.

தலைமையகம் மற்றும் 16 பிராந்திய அலுவலகங்கள் ஊடாக அதன் சேவைகளை வழங்கும் சுரங்கப் பிரிவானது பணியகத்தின் ஒழுங்குபடுத்தல் செயல்பாடுகளுக்கு பிரதானமாக பொறுப்பாகவுள்ளது. ஆய்வு, சுரங்க அகழ்வு, கனிமப் போக்குவரத்து மற்றும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதுடன் இணைந்துள்ள பன்முகத்தன்மை மற்றும் சிக்கலான தன்மையைக் கருத்திற்கொண்டு, இப்பிரிவானது ஒரு கடினமான சவாலை எதிர்கொள்ளுமென கருதப்படுகின்றது. தொலைதூரப் பகுதிகளுக்கு சேவைகளை மேலும் பரவலாக்கும் நோக்கில் பணியகத்தினால் மூன்று புதிய உப அலுவலகங்கள் ....., ... மற்றும் மன்னார் மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன. எங்கள் உடனடி கவனம் தேவைப்படும் இரண்டு பகுதிகளாக அனைத்து சுரங்க நடவடிக்கைகளையும் நெருக்கமாக கண்காணித்தல் மற்றும் சட்டவிரோத அகழ்வுகளைக் குறைத்தல் ஆகியவை அமைந்திருந்தன. 2018 ஆம் ஆண்டில், தேவையான பணியாளர்களை அதிகரிப்பதன் மூலமும், விசேட செயலணியின் ஆதரவோடு ஒரு திறமையான சட்ட அமுலாக்கப் பிரிவொன்றை நிறுவுவதன் மூலமும் இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண

நடவடிக்கை தொடங்கப்பட்டது. மேலும், மணல் அகழ்வுத் தொழிலாளர்களை சுற்றுச்சூழல் நட்புறவு மணல் அகழ்வுச் செயற்பாட்டில் இணைப்பதற்காக "கிரீன் ஃபெர்ரி" (பசுமை படகுத்துறை எண்ணக்கரு) கருத்தியல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கனிமப் போக்குவரத்தில் இடம்பெறுகின்ற முறைகேடுகளை கட்டுப்படுத்துவதற்காக வாகனக் கண்காணிப்பு முறைமையொன்றினை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் அது இறுதியில் சட்டவிரோத சுரங்க அகழ்வு நடவடிக்கைகளையும் குறைக்கும். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான சுரங்க அகழ்வு உரிமங்களை விநியோகிப்பதற்காக "வன் ஸ்டாப் ஷாப்" (ஓரிட சேவை நிலையம்) முறையையும் அறிமுகப்படுத்தியுள்ளோம். அந்த முறையியலானது 2018 ஆம் ஆண்டில் 4 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.

திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக்குத் தேவையான புவித் தரவுகளை சேகரிப்பது பணியகத்தின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்றாக அமைந்துள்ளது. இப்பயிற்சியை புவிச்சரிதவியல் பிரிவு அதன் விரிவான கள மற்றும் ஆய்வகப் பணிகள் மூலம் மேற்கொள்கின்றது. 2018 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்ட பகுதிகளில் மண் புவிவேதியியல் வரைபடமாக்கம், கட்டுமானப் பொருள் ஆய்வு மற்றும் அணு மூலப்பொருள் ஆய்வு ஆகியவை அடங்கும். பணியகத்தின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அம்சங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையை நாங்கள் தொடங்கியுள்ளதோடு அது தற்போது பெரும்பாலும் அகழ்வு மற்றும் கட்டுமானப் பொருட்களின் போக்குவரத்திற்கான உரிமம் வழங்கும் அலுவலகமாகக் காணப்படுகின்றது. நாட்டில் முறையான ஆராய்ச்சியினைத் திட்டமிடுவதற்காக நாடுதழுவிய ரீதியில் வான்வழி புவி இயற்பியல் ஆய்வினை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது ஜி.எஸ்.எம்.பி மற்றும் பிற நிறுவனங்களின் விஞ்ஞானிகளுக்கு மதிப்புமிக்க தரவுத் தொகுப்புகளை உருவாக்கும். புதிய ஆய்வகக் கட்டிடத்தினை மதிப்பீடு செய்யப்பட்ட 500,000,000 /=ரூபா செலவினத்தில் நிர்மாணிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. பூகம்பம் மற்றும் நிலநடுக்கம் ஆகியவற்றின் கண்காணிப்புத் திறனை வலுப்படுத்தி நாட்டின் கிழக்கு மாகாணத்தில் நில

அதிர்வு பற்றிய நிலையமொன்றை நிறுவ பெறுகை நடைமுறைகள் தொடங்கப்பட்டன.

பணியகமானது ஒரு சிறந்த நிதி நிலையைப் பேணிவந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு ஜி.எஸ்.எம்.பி. இனால் 02 பில்லியன் ரூபா பங்களிப்புச் செய்யப்பட முடிந்துள்ளதென்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இப்பின்னணியுடன் 2019 ஆம் ஆண்டில் மிகவும் வெற்றிகரமானதும் வளமானதுமான வகையில் பணியகத்தின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கும் என்பதனை எதிர்வுகூர்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

திரு.அசேல இத்தவல

தலைவர்

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் (ஜி.எஸ்.எம்.பி) பணிப்பாளர் நாயகம் என்ற வகையில் முகாமைத்துவத்தினையும் பணியாட்டொகுதியினரையும் பிரதிநிதித்துவப்படுத்தி 2018 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையின் பொருட்டு இச்செய்தியை எழுதுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த அறிக்கையானது 2018 ஆம் ஆண்டிற்கான பணியகத்தின் சில முக்கியமான சாதனைகளை உள்ளடக்கியுள்ளன.

2018 ஆம் ஆண்டில் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பிரிவுகளுக்கான புதிய விடயப்பரப்புகளின் மூலம் தொடர்ந்து முன்னேறி வருகின்றோம். பல மாற்றங்கள் இருந்தபோதிலும், ஜிஎஸ்எம்பிக்கு அதன் ஆரம்பத்திலிருந்து அதன் மிக உயர்ந்த பதிவு செய்யப்பட்ட இலாபத்தை அடைய முடிந்தது. பணியகமானது அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பொதுத் திறைசேரிக்கு 1,500 மி.ரூபா பங்களிப்புச் செய்தல் என்பவற்றுடன் இந்த ஆண்டின் பணியகத்தின் மொத்த இலாபமாக 391,019,539 ரூபாவையும் பெற்றுள்ளது. கடந்த நிதியாண்டில் ஈட்டிய 686,578,904 ரூபாவிலான மொத்த இலாபத்துடன் ஒப்பிடுகையில் இது ஒரு கணிசமான வெற்றியாகும்.

கொள்கை வகுப்பாளர்களுக்கும் சமூகத்திற்கும் புவிசார் அறிவியல் தகவல்கள், ஆலோசனைகள் மற்றும் சேவைகள் என்பவற்றை வழங்குவதும், சுற்றாடல் ரிதியான நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை பொருளாதார அபிவிருத்திக்காக நாட்டின் கனிம வளங்களை மேம்படுத்துவதும் முகாமைசெய்வதும் எமது நோக்குப் பணியாகும். இது கனிமங்களின் ஆய்வு, பிரித்தெடுத்தல், பெறுமதி சேர்க்கப்படுதல், போக்குவரத்து மற்றும் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துகின்றது.

ஜி.எஸ்.எம்.பியின் புவிச்சரிதவியல் பிரிவு 2018 பெப்ருவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட கட்டுமான மூலப்பொருள் ஆய்வினைப் பூர்த்தி செய்துள்ளது. இலங்கையில் இடம்பெற்று வரும் விரைவான அபிவிருத்திக்

கருத்திட்டங்களின் காரணமாக ஏற்படுகின்ற கட்டுமான மூலப்பொருட்களின் பெரும் தேவையை பூர்த்தி செய்வதற்கும் அவற்றுக்கான எதிர்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமாக இந்த ஆய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அறுபது மில்லியன் (60 மி.ரூபா) ரூபா நிதி அனுசரணையுடனான வேண்டுகோளின் பேரில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மண்ணின் புவி இரசாயனவியல் பண்புகளை ஆய்வு செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட நாடு தழுவிய ரீதியான புவி இரசாயனவியல் வரைபடமாக்கல் நிகழ்ச்சித்திட்டம் ஜி.எஸ்.எம்.பி. யினால் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இந்த வரைபடங்கள் கனிம ஆய்வு, சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் புவி-சுகாதார அபாய ஆய்வுகளில் பயனுள்ளதாக இருக்கும்.

வட மத்திய மாகாணத்திற்கான புதிய மாகாண கனிம வரைபடத்தை வெளியிடுவதன் பொருட்டு கனிமங்களுக்கான புதிய அமைவிடங்களை அடையாளங்காணப்பதற்காக வட மத்திய மாகாணத்தை (NCP) உள்ளடக்கியதாக ஒரு ஆரம்ப மாகாண கனிம ஆய்வினை ஜி.எஸ்.எம்.பி மேற்கொண்டுள்ளது. இந்த ஆய்வானது 2018 இன் பிற்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டது. ஐ.ஏ.இ.ஏ உதவி வழங்கும் கார் மூலம் பரவும் காமா கதிர் ஸ்பெக்ட்ரோமீட்டரைப் பயன்படுத்தி அணுக்கரு மூலப்பொருள் ஆய்வு அலுத்கம - காலி 1: 100,000 வலயத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு ஏற்கனவே மூன்று முக்கிய ஒழுங்கற்ற கதிரியக்க வலயங்களைக் கண்டறிந்துள்ளதுடன் அவை மேலும் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றன. 2017 ஆம் ஆண்டு தலைமன்னார் தொடக்கம் காலி வரை கடலோரப் பகுதியில் அணுக்கரு மூலப்பொருள் ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் ஏனைய முன்னுரிமைப் பணிகளுக்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டதால் சில பின்னடைவுகள் ஏற்பட்டன. ஆய்வானது 2018 ஆம் ஆண்டில் தொடரும்.

2018 ஆம் ஆண்டிற்கான பணியகத்தின் மொத்த வருமானம் சுமார் 5188 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன் வருமானத்தின் பெரும்பகுதி சுரங்கப்

பிரிவினரால் பெற்றுத்தரப்பட்டது. சுரங்கப் பிரிவின் முக்கிய பணிகளில் தள ஆய்வு, வெடிக்கச் செய்தல்களுக்கான சோதனை, பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரித்தல், சுரங்க அகழ்வுக்கான உரிமங்களை விநியோகித்தல், வர்த்தகம், ஆய்வு மற்றும் போக்குவரத்து மற்றும் சட்டவிரோத அகழ்வு நடவடிக்கைகளை தடுத்தல் ஆகியவை அடங்கும். முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது வருவாய் அதிகரிப்பு 150% ஐத் தாண்டியுள்ளதுடன் அதற்கான முக்கிய காரணம் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் குறைப்பதற்குமான பணியகத்தின் முயற்சிகள் ஆகும்.

புவிச்சரிதவியல் ஆய்வு, சுரங்கப் பணியகம் அதன் இலக்குகளை அடைவதில் 2018 ஆம் ஆண்டில் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்பதையும், அந்த ஆண்டில் பெறப்பட்ட அனுபவம் எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதையும் ஆவணப்படுத்துவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். எங்கள் நடவடிக்கைகள் முழுவதிலும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஆதரவானது குறிப்பாக, சுற்றாடலைப் பாதுகாத்துக்கொண்டு கனிமத் துறையை வளர்த்தல் மற்றும் இலங்கையில் உள்ள அனைத்து உயிர்களையும் பாதுகாத்தல் எனும் அம்சங்களில் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

இலங்கையின் தேசிய அபிவிருத்திக்கான ஒரு முக்கிய பங்களிப்பாளராக அடையாளமிடுவதன் பொருட்டு இந்த வெற்றிகளை அடைவதில் மேற்கொண்ட அர்ப்பணிப்புக்காக தலைவருக்கும், பணிப்பாளர் சபைக்கும் ஜி.எஸ்.எம்.பி. ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டாக்டர் சி.எச்.இ.ஆர். சிறிவர்தன
பணிப்பாளர் நாயகம்

பணிப்பாளர் சபை

தலைவர் - திரு.டப்ளியூ.எம்.ஏ.எஸ்.இத்தவல

உறுப்பினர்கள் : திரு.எம்.பீ.டீ.யூ.கே. மாபா பத்திரண

திருமதி.பியங்கா என்.கமகே

திரு.மசங்க எச்.லியனகே

திரு.இ.எம்.ஏ.ஏக்கநாயக்க

திரு.டப்ளியூ.கே.பீ.எம்.பிரேம்

சபையின் செயலாளர்/சட்ட அலுவலர் : திருமதி. எம்.எஸ்.கே. பெர்னாந்த

சிரேஸ்ட முகாமைத்துவம்

தலைவர் : திரு.டப்ளியூ.எம்.ஏ.எஸ்.இத்தவல

பணிப்பாளர் நாயகம் : டாக்டர் சீ.எச்.இ.ஆர். சிறிவர்தன

பொது முகாமையாளர் : திரு எம்.டப்ளியூ. ஜயமான்ன

சிரேஸ்ட பணிப்பாளர் (புவிச்சரிதவியல்: சீ.எச்.இ.ஆர். சிறிவர்தன

சிரேஸ்ட பணிப்பாளர் (சுரங்கங்கம்): பொறியியலாளர் டீ. சஜ்ஜன டி சில்வா

பணிப்பாளர்(சுற்றாடல் தாக்க மதிப்பீடு

மற்றும் பிராந்தியங்கள்) : திரு.எல்.ஏ.பர்னாந்து

பணிப்பாளர்(ஆய்வுகூடம் மற்றும் கனிம பரிசோதனை) :
திரு.வை.பீ.எஸ்.பீ.சிறிவர்தன

பணிப்பாளர் (வரைபடமாக்கல் மற்றும் புவிச்சரிதயவியல் தகவல்கள்)

: திரு.டப்ளியூ.எம்.ஜே.பீ.அஜித் பிரேம

பணிப்பாளர்(கனிம பெயரிடல்) : டாக்டர்திருமதி.கே.ஏ.பீ.ஹேமலதா

பணிப்பாளர்(நிதி) : திரு.என்.பீ.சீ.ஏக்கநாயக்க

பணியகம்

இலங்கையில கனிப்பொருள்சார் கைத்தொழிலின் முன்னோடி.

1992 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் சேவைகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகமானது கனிம அபிவிருத்தித் தொடர்பான முன்னணி நிறுவனமாக விளங்குவதுடன், கனிம அடிப்படையிலான கைத்தொழில்களை மேம்படுத்துவதில் அரசாங்கத்தின் ஈடுபாட்டினைக் கோடிட்டுக்காட்டுகின்றது.


இலங்கையில் கனிப்பொருள் அபிவிருத்திக்கான அதிகாரம்பெற்ற நிறுவனமாக விளங்கும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகமானது இதுவரை கனிம ஆய்வுகளை மேற்கொண்டதும் நாட்டுக்கு நன்மைகளைப் பெற்றுத்தந்துள்ளதுமான அமைப்பாகும்.

இலங்கை ஒரு சிறிய நாடு என்பதால், அதன் உப மேற்பரப்புக் கனிம வளமும் அதற்கு நிகராக சிறிதாகவே காணப்படுகின்றது. எனவே, இந்த அமைப்பானது கனிம அடிப்படையிலான தொழில்கள் நிறுவப்படுவதனை ஊக்குவிக்கும் அதேவேளை கனிமங்களின் சிக்கனமான பயன்பாட்டை வலியுறுத்துகின்றது. அத்தோடு கனிமங்கள் புதுப்பிக்க முடியாத பொருட்கள் என்பதால் விரயமின்றி அவற்றைப் பயன்படுத்த வேண்டும் எனவும் எச்சரிக்கின்றது.

பணியகமானது பிரதானமாக நான்கு தொழிற்பாடுகளைக் கொண்டுள்ளன. அவையாவன, புவிச்சரிதவியல் தேசப்படங்களைத் தயாரித்தல், கனிம ஆய்வு, சுரங்க அகழ்வு உரிமைகள் மற்றும் சுரங்க அகழ்வு ஒழுங்குபடுத்தல் (பிரதான செயற்பாடு) சேவைப்பயனர் பதிற்செயற்பாட்டு நடவடிக்கைகள் (கனிம வள ஆய்வுகள், ஆய்வக சேவைகள், புவி இயற்பியல் மற்றும் துளையிடல் பற்றிய ஒப்பந்தங்கள்) மற்றும் புவி-விஞ்ஞான தகவல்கள் (வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்படாத அறிக்கைகள், வரைபடங்கள் மற்றும் அதன் நூலகத்திலுள்ள பிற காப்பகங்களுக்கான அணுகல்) ஆகும்.

சுரங்கப் பிரிவானது தற்போது கண்டி, மாத்தறை, குருநாகல், பதுளை, இரத்தினபுரி, அநுராதபுரம், அம்பாறை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, களுத்துறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கம்பஹ, பொலனறுவை கொழும்பு ஆகிய 15 பிராந்திய அலுவலகங்களுடன் ஹசலக்க, கந்தளாய் ஆகிய 2 உப அலுவலகங்களில் செயற்பட்டு வருகின்றது. தொடர்புடைய மாகாணங்களில் பல்வேறு சுரங்கத் தொழில்களில் ஈடுபட்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதும், சட்டவிரோத சுரங்க நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதும் இந்த பிராந்திய அலுவலகங்களின் முக்கிய நடவடிக்கைகளாகும்.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தனது சேவைகளை நாடு பூராகவும் விஸ்தரித்துள்ளது.



GSMB widen its service over the country
60000
160000
260000
450000
350000
250000
150000
N
W
E
S
Jaffna
Trincomalee
Anuradhapura
Kantale
Polonnaruwa
Batticaloa
Kurunegala
Ampara
Kandy
Gampaha
Badulla
Colombo
Monaragala
Ratnapura
Kalutara
Hambantota
Matara
25 12.5 0 25
Kilometers
Digital Cartography by Paditha Priyanga Maddumage (GSMB- Cartography Division)

பணியகத்துடள் தொடர்புகள்னாத் னவிபரங்கள்

எமது அலுவலகம்	முகவரி	அலுவலகத் தலைவர்	தொலைபேசி / தொலைநகல்
தலைமையகம்	எபிட்டமுல்ல வீதி, பிற்றகோட்டே.	பணிப்பாளர் நாயகம்	+94-11-2886289 +94-11-2886290
அம்பாறை	இல 669, புதிய நகர், அம்பாறை.	திரு.எச்.ஏ.சீ.கே.டப்ளியூ பண்டார	+94-63-2223385
அநுராதபுரம்	இல 596/69, பண்டாரநாயக்க மாவத்தை அநுராதபுரம்.	திரு.சீ. கே. கருணானந்த	+94-25-2224388
பதுளை	இல 52/A, ரத்வத்த மாவத்தை, பதுளை	திரு.டப்ளியூ.கே.ஏ.எஸ்.ரூபவன்ச	055-2225210 +94-55-2222787
மட்டக்களப்பு	இல 239, பார் வீதி, மட்டக்களப்பு	ஜனாப்.எம்.ஆர்.எம்.பரீஸ்	+94-65-2222266
கொழும்பு	இல 569, எபிட்டமுல்ல வீதி, பிற்றகோட்டே.	திரு.என்.ரமேஷ்	+94-11-2869478 +94-11-2869479
அம்பாந்தோட்டை	இல 21, டெரஸ் வீதி, அம்பாந்தோட்டை.	திரு.யூ.எச். ரி .பிரியந்த	+94-47-2222477
கம்பஹ	இல 06, வெரல்லவத்தயக்கல	திரு.எஸ்.ஏ.ஐ.ஜே றொட்ரிகோ	+9433-2231430
யாழ்ப்பாணம்	இல 170, கொழும்புத்துறை வீதி	திரு.டீ.ஜயரூபன்	+94-21-2224595

	யாழ்ப்பாணம்		
களுத்துறை	இல 9 A, பள்ளிவாசல் வீதி, வெத்துமகட களுத்துறை – தெற்கு	திரு.டப்ளியூ.ஏ.ஏ.சீ.வன்னிஆரச்சி	+94-34-2225580
கண்டி	இல 21, ஜனசவிகம, பல்லேகலே, கண்டி	திரு.ஏ.பீ.விமலசேன	+94-81-2421294 +94-81-2421474
குருநாகல்	இல 15/B, நீர்கொழும்பு வீதி, மல்கடவெவ, குருநாகல்.	திரு.கே.என்.டப்ளியூ.விமலரத்ன	+94-37-2230858 +94-37-2232542
மாத்தறை	இல 224, சுனந்த மாவத்தை, வல்கம, மாத்தறை	திரு.டீ.எல்.ரீ.எம்.டக்ளஸ்	+94-41-2236765
மொனராகலை	இல 190/6, வெல்லவாய வீதி, மொனராகலை.	திரு.ரி.எம்.டப்ளியூ பண்டார	+94-55-2277392 +94-55-2276882
இரத்தினபுரி	இல 66, ஸ்ரீ சரணங்கர மாவத்தை, ஹிதல்லன, இரத்தினபுரி	திரு.ரீ.எஸ்.குமார	+94-45-2228117
திருகோணமலை	பிரதேச செயலகம், 4ஆம் கட்டை கச்சேரி திருகோணமலை	திரு பீ.ஏ.எஸ். குமாரசிங்க	+94-26-3202411
பொலனறுவை	பிரதேச செயலகம், புதிய நகர் பொலனறுவை	திரு.டப்ளியூ.ஜீ.பீ.ரீ.குமார	027-2226366

வரலாற்றுப் பின்னணி



புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகமானது 1903 ஆம் ஆண்டில் கலாநிதி ஆனந்த குமாரசாமி அவர்களின் தலைமையில் இலங்கைக்கான கனிம ஆய்வு (எம்.எஸ்.சி) என்ற பெயரில் ஆரம்பமாகி ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இயங்கிவந்துள்ள பல புவி-அறிவியல்சார் திணைக்களங்களின் பெருமை வாய்ந்த வாரிசு ஆகும். குறிப்பிட்ட திணைக்களங்கள் வரலாறு முழுவதும் நாட்டின் கனிம வளங்களைப் பற்றிய தரவுகளைக் கண்டுபிடித்தல், ஊக்குவித்தல் மற்றும் பெற்றுக்கொள்ளல் போன்ற தனிச்சிறப்பு வாய்ந்த பதிவைக் கொண்டிருந்ததுடன் தற்போது இயங்கும் கனிப்பொருள் சார்ந்த சகல கைத்தொழில்களும் அவற்றின் இருப்புக்காக மேற்படி திணைக்களங்களுக்கு கடமைப்பட்டுள்ளன.

1939 ஆம் ஆண்டில் எம்.எஸ்.சி ஆனது கனிமவியல் திணைக்களம் என அழைக்கப்பட்டதோடு 1962 இல் மீண்டும் புவிச்சரிதவியல் அளவைத் திணைக்களமாக பெயரிடப்பட்டது. 1993 மார்ச் 18 ஆம் திகதி 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டத்தின் மூலம் புவிச்சரிதவியல் ஆய்வுப் பணிகளை நவீன சுரங்கத் திணைக்களத்தின் புதிய பொறுப்புகளுடன் இணைப்பதற்காக பணியகமானது தாபிக்கப்பட்டது.

கனிம வளர்ச்சியில் முன்னணி நிறுவனமாக பணியகம் நிறுவப்பட்டிருப்பதன் மூலம் கனிம அடிப்படையிலான கைத்தொழில்களை மேம்படுத்துவதில் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டுத் தன்மை கோடிட்டுக் காட்டப்படுகின்றது. கனிப்பொருட்களானவை கூடிய விலைகொண்ட இறக்குமதிகளுக்கான பதிலீடுகளை வழங்குதல், கட்டிட மற்றும் நிர்மாணத் துறைக்கான பொருட்களை வழங்குதல், ஏற்றுமதி கைத்தொழிலுக்கான மூலப்பொருட்களை வழங்குதல், தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மட்டுமன்றி நாட்டுக்கு வருவாயையும் ஈட்டித்தருகின்றன. தேசிய புவி-அறிவியல் தரவுத்தளத்தைப் பேணிச்செல்வதற்கும், குறிப்பிட்ட தகவல்கள் பொதுமக்களுக்கு கிடைப்பதனை உறுதி செய்வதற்கும் பணியகம் பொறுப்பினைக்கொண்டுள்ளது.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் எதிர்காலத் திட்டங்கள்

புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் ஆகிய இரு பிரதான பிரிவுகளில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள முக்கிய செயற்பாடுகளாக பின்வரும் திட்டங்கள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

1. PWC (ப்ரைஸ்வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ்) கம்பெனியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளின் அடிப்படையில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மீளுருவாக்கம் செய்தல்.
2. நவீன பொறியியல் சார்ந்த புவிச்சரிதவியல் ஆய்வுகூடமொன்றை நிறுவுதல்.
3. பாறையியல் ஆய்வக உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்.
4. பகுப்பாய்வு ஆய்வக வசதிகளை மேம்படுத்துதல்.
5. நவீன புவிச்சரிதவியல் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
6. துளை கருவிகளுக்கான களஞ்சியசாலை வசதிகளை ஏற்படுத்துதல்.
7. பொறியியல் திட்டவமைப்பு அலகு உருவாக்கப்படுதல்.
8. சுரங்கங்களை மூடும்போதான மீட்டளிப்பு நடவடிக்கைகளை விருத்தி செய்தல்.
9. சுற்றாடல் தாக்க மதிப்பீடு/ பூர்வாங்க சுற்றாடல் ஆய்வு சார்ந்த பணிகளை மேம்படுத்துதல்.
10. சந்தைப் பெறுமதி தொடர்பான மதிப்பாய்வுகளை நடாத்துதல்.
11. புதிய பிராந்திய அலுவலகங்களை நிறுவுதல்
12. பிராந்திய அலுவலகங்கள் அமைப்பதற்கான காணி சுவீகரிப்பு
13. TPL கண்காணிப்பு முறைமையொன்றை அறிமுகம் செய்தல்


14. GPR கட்டமைப்பை அறிமுகம் செய்தல்
15. 5 **S** மற்றும் **ISO** தரங்களைப் பெறுவதன் மூலம் செயல்முறை தரப்படுத்தல்
16. நான்காம்நிலை அமைப்பு படமாக்கல்
17. மண்புவியிரசாயன படமாக்கல்
18. ஆண்டறிக்கைகளை வெளியிடுதல்
19. ஆற்று படுக்கைகளின் அடையல்களை சோதனையிடல்
20. அணு சார்ந்த மூலப்பொருட்களை பரிசோதனை செய்தல்
21. நில நடுக்க அளவீடு
22. பெருநகரப் பிரதேசங்களில் மேற்பரப்பு அடுக்குகளில் - புவிப் பொறியியல் பண்புகள், எப்பாவல பொசுப்பேற்று படிவு பரவியிருக்கத்தக்க பிரதேசங்கள் தொடர்பான புவி இயற்பியல் ஆய்வு

பிரிவு ரீதியான செயலாற்றுகை

1.0 புவிச்சரிதவியல் பிரிவு (GD)

1.1 2018 ஆம் ஆண்டில் புவிச்சரிதவியல் பிரிவின் முன்னேற்றம்

1.1.1செயற்பாட்டுத்திட்டத்திற்கான செயற்பாடுகள் (GSMB நிதி)



(அ) புவிச்சரிதவியல் வரைபடங்களின் அச்சிடுதல்:


முழு இலங்கையையும் உள்ளடக்கிய புவியியல் வரைபடங்களை வெளியிடுவது பணியகத்தின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாகும். நிலப்பரப்பின் புவித்தகவல்களைக் கொண்ட புவியியல் வரைபடங்களானவை கனிம மற்றும் நிலத்தடி நீர் பற்றிய ஆய்வு, பிரதான நிர்மாண மற்றும் சிவில் பொறியியல் பணிகள் மற்றும் மண்சரிவு அபாய வரைபடங்கள் போன்றவற்றைத் தயாரித்தல் உட்பட பல்வேறு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுகின்றன. 2014 ஆம் ஆண்டில் முழு நாட்டையும் உள்ளடக்கிய வகையில் ஜி.எஸ்.எம்.பி ஆனது 21 புவியியல் வரைபடங்களையும்(1: 100,000 அளவுத்திட்டம்) அச்சிட்டுப் பூர்த்தி செய்தது. 1: 250,000 அளவிலான 04 புவியியல் வரைபடங்கள் 2017 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன. முழு நாட்டுக்குமான 1: 500 000 அளவிலான வரைபடம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.


(ஆ) நான்காம்நிலை படமாக்கல் (கரையோர வலயம்) நிகழ்ச்சித்திட்டம்

புவியியல் சார்ந்த கால அடுக்குகளின் நான்காம்நிலை காலப்பகுதியானது இற்றைக்கு சுமார் 02 மில்லியன் ஆண்டுகால வரலாறு வரை நீண்டு செல்கின்றது. இலங்கையின் நான்காம்நிலை அமைப்புகள் ஆனவை கரையோர அடையல்கள், வெள்ள சமவெளிகளின் வண்டல் அடையல்கள் மற்றும் மண் அமைப்புக்கு வரையறுக்கப்பட்டதாக காணப்படுகின்றன. இந்த அமைப்புகளில் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த களிமண், மணல் படிவுகள், பவளப் படிவுகள், வளமான மண் போர்வை மற்றும் நிலக்கீழ் நீர்நிலைகள் என்பன அடங்குவதால் இவை மிகுந்த சிறப்பினைப் பெறுகின்றன. புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் 2008ஆம் ஆண்டில் "நான்காம்நிலை புவியியல்சார் படமாக்கல்" என்ற பெயரில் கருத்திட்டம் ஒன்றை ஆரம்பித்தது.

நான்காம்நிலை படமாக்கல் திட்டத்தின் அச்சிடுதல்

மாத்தறை, களுத்துறை மற்றும் அம்பலாங்கொடை-பலப்பிட்டிய வலயம் உள்ளிட்ட 1: 50 000 அளவிலான நான்காம்நிலை வரைபடங்களின் களப்பணி மற்றும் தொகுப்புப் பணிகள் முந்தைய ஆண்டுகளில் முடிக்கப்பட்டு குறிப்பிட்ட 3 வரைபடங்களும் 2017 அக்டோபர் மாதம் வெளியிடப்பட்டன.





நான்காம்நிலை படமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் அலுவலக ரீதியான பணிகள்

புத்தளம் மற்றும் சிலாபத்துறை, அம்பாந்தோட்டை மற்றும் திஸ்ஸமஹாராம வலயங்களின் வரைபட தொகுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

புத்தளம் மற்றும் கற்பிட்டி மற்றும் சிலாபத்துறை பகுதியில் விரிவான துளையிடும் பணி


புத்தளம், கற்பிட்டி மற்றும் சிலாவத்துறை வலயங்களில் விரிவான துளையிடல் மெற்கொள்ளப்பட்டதுடன் மீதமுள்ள 04 துரப்பணத் துளையிடல் நடவடிக்கைகள் 2019 இல் நடத்தப்படும்.

இ) மண் புவியிரசாயன படமாக்கல் நிகழ்ச்சித்திட்டம்

மண்ணின் புவியிரசாயனப் பண்புகளை ஆய்வு செய்வதற்காக 2008 ஆம் ஆண்டில் மண் புவியிரசாயன நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கனிப்பொருள் ஆய்வு, சுற்றாடல் கண்காணிப்பு மற்றும் விவசாய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகவும், புவி – சுகாதார ஆப்பத்துகளை ஆராய்வதற்காகவும் இந்த வரைபடங்கள் பயனுள்ளதாக அமையும். 1: 50,000 அளவிலான அடிப்படை வரைபடங்களில் புவியிரசாயன படமாக்கல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு 04 சதுர கிலோ மீற்றர் பரப்பு கொண்ட பிரதேசத்தின் 01 சதுர கிலோமீற்றர் பரப்பின் மேற்பரப்பிலும், 02 மீற்றர் ஆழத்திலும் இரண்டு மண் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன. அணு உறிஞ்சல் நிறமாலைக் காட்டி மற்றும் இன்டக்டிவ்லி கப்பிள்ட் பிளாஸ்மா ஆப்டிகல் எமிஷன் ஸ்பெக்ட்ரோமீட்டர் (ICP-OES) ஆகியவற்றைப் பயன்படுத்தி இந்த மாதிரிகளின் இரசாயனப் பண்புகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

மண் புவியிரசாயன படமாக்கல் திட்டத்தின் தொகுப்பு மற்றும் அச்சிடல்

திம்பொல்கெட்டிய, மாத்தறை, இறக்குவானை, தங்காலி, மொறவக்க மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய 1,50,000 ஆறு வலயங்களின் பகுப்பாய்வு தரவுகளைப் பயன்படுத்தி வலய இலக்கம் 20 (இறக்குவானை - தங்காலி) இன் புவிஇரசாயன நிலப்பட அச்சிடுதல் முந்தைய ஆண்டுகளில் முடிக்கப்பட்டு, வலய இலக்கம் 20, 2017 அக்டோபர் இல் வெளியிடப்பட்டது. வலய இலக்கம் 08 இன் தொகுப்புப் பணிகள் நடந்து கொண்டிருந்தன.



> **மண் புவியிரசாயன படமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஆய்வுக்கூட பணிகள்.**

வலய இலக்கம் 08 (அனுராதபுரம் - பொலனறுவை) மற்றும் வலய இலக்கம் 06 ஆகியவையின் பகுப்பாய்வுப் பணிகள் குறிப்பிட்ட காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.

- **மண் புவியிரசாயன படமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் களப் பணிகள்.**
  வலய இலக்கம் 23: நிலாவேலி மற்றும் வலய இலக்கம் 6: பங்குளம் ஆகியவற்றின் களப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் வலய இலக்கம் 28: திருகோணமலைக்கான களப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

(ஈ) வருடாந்த கனிம நூல்கள் 2015 மற்றும் 2016

2015 ஆம் ஆண்டின் கனிம நூல் வெளியிடப்பட்டது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.


(உ) செங்கல் மற்றும் ஓட்டுக் கைத்தொழில்துறைக்குப் பொருத்தமான இடங்களை அடையாளம் காண்பதற்காக மாஓயா (நெடுக) ஊடாக செங்கல் மற்றும் ஓட்டுக் களிமண் ஆய்வு

செங்கல் மற்றும் ஓட்டுக் களிமண் அமைந்துள்ள பகுதிகளை அடையாளம் காண்பதற்காக மாஓயா ஊடாக செங்கல் மற்றும் ஓட்டுக் களிமண் ஆய்வு 2017 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் தொடங்கப்பட்டதுடன் 90% வீதமான களப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பணியின் நிமித்தம் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் நாட்டின் பரந்த கட்டுமான மூலப்பொருள் ஆய்வில் கலந்து கொள்ள வேண்டியிருந்ததால் இந்த களப்பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

(ஊ) மாகாண கனிம ஆய்வுகள் மற்றும் மாகாண கனிம வரைபடங்கள்

சப்ரகமுவ, ஊவா மற்றும் வட மத்திய மாகாணங்களின் களப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

ஊவா மாகாண கனிம வரைபடம் பற்றிய தரவுத் தொகுப்பு பூர்த்தி செய்யப்பட்டதுடன்




மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த இரண்டு வரைபடங்களும் 2019 ஆம் ஆண்டில் வெளியிடப்படும்.


(எ) சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் (IAEA) அணுசக்தி மூலப்பொருள் ஆய்வு மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளுகள்.

கார் வண்டியிலிருந்து இயக்கப்படும் காமா கதிர் ஸ்பெக்ட்ரோமீட்டர் ஆய்வு நாவுல பகுதியில் அடையாளம் காணப்பட்ட கதிரியக்க ஒழுங்கின்மை பற்றிய விரிவான புவியியல் ஆய்வு நடத்தப்பட்டதுடன் தரவு பகுப்பாய்வு இடம்பெற்று வருகின்றது.

தலைமன்னார் முதல் காலி வரையிலான கரையோரப் பகுதி நெடுகிலுமான அணு மூலப்பொருள் ஆய்வு



மன்னார் முதல் காலி வரை கரையோரப் பகுதியில் அணுசக்தி மூலப்பொருள் ஆய்வு தொடங்கப்பட்டு களப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அலுத்கம - காலி வரையிலான களப்பணிகளும் நிறைவடைந்துள்ளன. இந்த ஆய்வுகளின்போது கதிரியக்க ஒழுங்கின்மை வலயங்களின் 4 வலயங்கள் அடையாளம் காணப்பட்டன. மேலும் மேற்படி அடையாளம் காணப்பட்ட வலயங்களில் விரிவான ஆய்வானது எதிர்வரும் காலப்பகுதியில் நடத்தப்படும்.








(ஏ) நில அதிர்வு பற்றிய தரவுகள் மற்றும் சுனாமி எச்சரிக்கை நிலையம் என்பவற்றுக்கான மேம்பாடுகளும் மூன்று நில அதிர்வு நிலையங்களின் பராமரிப்பும்

ஏனைய நன்கொடை நிறுவனங்களுடன் இணைந்து GSMBஆல் நிறுவப்பட்ட மூன்று நில அதிர்வு நிலையங்கள் சீராக இயங்கி வருவதுடன் இந்த நிலையங்களிலிருந்து தரவுகள் பிரச்சனைகள் எதுவுமின்றி GSMB இன் தலைமை அலுவலகத்தில் உள்ள தரவு மையத்திற்கு அனுப்பப்பட்டன. மூன்று நில அதிர்வு நிலையங்களின் தரவு கிடைக்கும் தன்மை 2018 இல் திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.





GSMBயில் சுனாமி எச்சரிக்கை நிலையம்

பல்லெகலே நில அதிர்வு நிலையத்தில் நில அதிர்வுப் பதிவு (அண்மையில் 2018செப்டம்பர்14 ஆம் திகதி திருகோணமலையில் பூகம்பம்

2018 ஆம் ஆண்டிலும் நில நடுக்கம், நில அதிர்வுகள் மற்றும் இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட பூகம்ப நிகழ்வுகள் குறித்த பொதுமக்களின் புகார்களுக்கு தரவு நிலையம் வெற்றிகரமாக பதிலளித்துள்ளது.

பூகம்ப கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, நில அதிர்வு பற்றிய தரவுகள் மற்றும் சுனாமி எச்சரிக்கை நிலையமானது 011 2 862 862 மற்றும் 1921 ஆகிய இலக்கங்களின் மூலம் ஜி.எஸ்.எம்.பி தொடர்பான சுரங்க நடவடிக்கைகள் குறித்த பொதுமக்களின் புகார்களைப் பெறும் இடமாகவும் செயற்படுகின்றது. தரவு நிலையத்தைச் சேர்ந்த கடமை அதிகாரிகள் புகார்களைப் பதிவுசெய்து சுரங்கப் பிரிவுக்கு அனுப்புகின்றனர்.

(i) GSMB- நூலகம் தரமுயர்த்தப்படுதல்

நூலகத்திற்கு பாடநூல்கள் கொள்வனவு செய்யப்படுதல்

2018 ஆம் ஆண்டிற்காக கொள்வனவு செய்யப்பட வேண்டிய பாடநூல்களின் பட்டியலை நூலகக் குழு பூர்த்தி செய்துள்ளதுடன் மொத்தம் ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், ஈ-புக் (மின் புத்தக) கருத்தியல் தொடர்பாக முகாமைத்துவம் கருதியதால் புத்தகம் எதுவும் கொள்வனவு செய்யப்படவில்லை.

அருங்காட்சியக அபிவிருத்தி - 2018

அருங்காட்சியக அபிவிருத்திக்கான முன்மொழிவானது பிரதிப் பணிப்பாளர் (புவிச்சரிதவியல்) மூலம் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. நூலக மற்றும் அருங்காட்சியகக் குழுவானது அமெரிக்காவின் WARD இன் இயற்கை விஞ்ஞான ஸ்தாபனதிற்கான பட்டியலிலிருந்து (85 மாதிரிகள்) படிகங்கள், கனிமங்கள் மற்றும் பாறை மாதிரிகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்த்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகள் கொள்வனவு செய்யப்பட்டன. அருங்காட்சியக மேம்பாட்டுக் குழுவின் பல உறுப்பினர்கள் தேசிய அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டதோடு காட்சிப்படுத்தல் அலுமாரிகளை அமைக்கும் முறை மற்றும் அவற்றுக்கான ஒளியூட்டல் கட்டமைப்பை நிர்மாணிக்கும் விதம் பற்றிய ஆலோசனைகளையும்

பெற்றுக்கொண்டனர். இந்த அறிவுறுத்தல்கள் அருங்காட்சியக அபிவிருத்திக் குழுவுடன் விவாதிக்கப்பட்டு ஒப்புதலுக்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது.

நூலக டிஜிட்டல்மயமாக்கக் கருத்திட்டம் 2016-2019

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் 2016 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஒத்துழைப்போடு டிஜிட்டல் நூலக கருத்திட்டத்தைத் தொடங்கியது. இக்கருத்திட்டத்தின் மூன்றாம் கட்டம் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

<u>கட்டம் iii</u>

1. ஸ்கேனிங்கிற்காக ஆவணங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன (ஆவண வகைகள்: தொழில்நுட்ப அறிக்கைகள் மற்றும் பிற அறிக்கைகள், செய்தித்தாள் துணுக்குகள்) மற்றும் ஸ்கேன் செய்வதற்காக 50200 பக்கங்கள்.
   தேர்ந்தெடுக்கப்பட்டன.
2. 50200 பக்கங்களுக்கு மேல் குறிச்சொல் முறைமைகள் உருவாக்கப்பட்டன.
3. ஆவணங்களுக்கான ஸ்கேனிங் செயன்முறை இடம்பெற்றுக்கொண்டிருந்தது.


புதிய நூலக மென்பொருள் (கொஹா) 2017

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகமானது 2010ஆம் ஆண்டு தொடக்கம் மாலம்பேவில் அமைந்துள்ள இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட "தானியங்கி ஒன்லைன் (இணைப்பில்) நூலக முறைமை"யை நூலக மென்பொருளாக பயன்படுத்தி வருகின்றது. இது ஒரு வணிக மென்பொருளாக (மென்பொருளின் விலை ரூபாய் 8,000,000/-) காணப்படுவதோடு அதனுடைய வருடாந்த பராமரிப்புச் செலவு ரூபா 84,000/- ரூபாவாகும். எவ்வாறாயினும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள "தானியங்கி ஒன்லைன் (இணைப்பில்) நூலக முறைமை"யாக அறியப்படும் இந்த வணிக மென்பொருள் வரையறுக்கப்பட்ட மாற்றங்களையும் தனிப்பயனாக்கப்பட்ட சேவைகளை மட்டுமே அனுமதிக்கின்றது.

எனவே, உலகத்திலும் இலங்கையிலும் காணப்படுகின்ற பல்வேறு பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் மிகவும் பிரபலமானதாக உள்ள ஒருங்கிணைக்கப்பட்ட திறந்த ஆதாரமூலமான "கொஹா" என அறியப்படுகின்ற இந்த மென்பொருளை அறிமுகப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. இந்த மென்பொருள் சர்வதேச நூலக சட்ட விதிகளுக்கு அமைவானது.(Z39.50, MARC, UNIMARC). இந்த ஆண்டில் "கொஹா" மென்பொருளை கொள்வனவு செய்யுமாறு நூலகத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருளை கொள்வனவு செய்வதற்காக ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஒ) நாடுதழுவிய ரீதியான கட்டுமான மூலப் பொருள் ஆய்வு

இலங்கையில் இடம்பெற்றுவரும் விரைவான அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக ஏற்படுகின்ற கட்டுமான மூலப்பொருட்களின் பெரும் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், அவற்றின் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், ஜி.எஸ்.எம்.பியின் புவிச்சரிதவியல் பிரிவு, தரம்சார் மற்றும் அளவுசார் கட்டுமான மூலப்பொருள் ஆய்வொன்றை 2017 பெப்ருவரி இறுதி தொடக்கம் ஆரம்பித்தது. தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் வேண்டுகோளின் பேரில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக அவர்கள் வழங்கிய



நிதி அனுசரணை அறுபது மில்லியன் ரூபாவாகும். நாடு முழுவதும் தரம்சார் மற்றும் அளவுசார் வகையில் மதிப்பீடு செய்து கருங்கல் சல்லி / பாறைகள், சரளை, மண் மற்றும் மணல் ஆகியவற்றை அகழ்வு செய்வதற்காக பொருத்தமான இடங்களை அடையாளம் காண்பதே ஆய்வின் நோக்கமாகும். குடியிருப்புப் பகுதிகள், நீர் ஆதாரங்கள், மண்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகள் ஆகியவற்றுக்கான சுற்றாடலைக் கருத்தில் கொண்டு பொருத்தமான தளங்களுக்கு பரிந்துரைகள் வழங்கப்படும். கண்டி அதிவேகப் பாதை, குருநாகல் முன்மொழியப்பட்ட வீதி, மாத்தறையிலிருந்து நீடிக்கப்பட்ட தெற்கு அதிவேகப் பாதை, நீர்கொழும்பினை நோக்கியதாக நீடிக்கப்பட்ட அதிவேகப் பாதை மற்றும் மாநகர அமைச்சின் கீழ் கொழும்பில் மேற்கொள்ளப்படும் கட்டுமானங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டன. 19 மாவட்டங்களின நடவடிக்கைகள் நிறைவடைந்து இறுதி அறிக்கைகள் அனைத்தும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

(✶) ஆற்றுப்படுக்கையின் நீரோடை வண்டல் ஆய்வு

வலவே கங்கையில் நீரோடை வண்டல் ஆயுவு மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு களப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அறிக்கை தயாரித்தல் பணி இடம்பெற்று வருகின்றது

1.1.2 பாறையியல் ஆய்வகம்

1. தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட சோதனையிலிருந்து கிடைத்த நேரடி வருமானம்

மாதிரிகளின் எண்ணிக்கை	வருமானம் (ரூபா)
579	3,764,183.00

1. ஜி.எஸ்.எம்.பி அதிகாரிகளின் வேண்டுகோளின் பேரில் கருத்திட்டங்கள் மற்றும் களப்பணிகள் என்பவற்றுக்காக மேற்கொள்ளப்பட்ட ஏனைய பகுப்பாய்வுகள் (கட்டணமின்றி)

மாதிரிகளின் இயல்பு	மாதிரிகளின் எண்ணிக்கை	பகுப்பாய்வின் மதிப்பு (ரூ.)
பாறை	25	81,000.00
மணல்	59	294,500.00
மொத்தம்		375,500.00

2. கண்காட்சிகள் மற்றும் பாடசாலை விஞ்ஞான நிகழ்ச்சிகளில் பங்கேற்றல் மற்றும் மாதிரி தொகுப்புகளைத் தயாரித்தல் (இலவசமாக)

i. ஜுவல்ஸ் 2018 கண்காட்சி 2018 நவம்பர் 17 மற்றும் 18 ஆகிய திகதிகளில் தாஜ் சமுத்திராவில் நடத்தப்பட்டது.

ii. "எக்ஸ்-பான் கல்வி- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பக் கண்காட்சி 2018 கம்பஹ பண்டாரநாயக்க கல்லூரியில் நடத்தப்பட்டது.

iii. கல்விக் கண்காட்சி 2018 நவம்பர் 2 - 3 ஆகிய திகதிகளில் கேகாலை பாலிகா வித்யாலயாவில் நடத்தப்பட்டது.

iv. 20 வது ஆண்டு கல்விக் கண்காட்சி லீட்ஸ் சர்வதேச பாடசாலையில் 2018 அக்டோபர் 25 மற்றும் 26 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்டது.

v. வலய மட்ட விஞ்ஞானக் கண்காட்சி 2018 அக்கரைப்பற்று முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 2018 அக்டோபர் 10 தொடக்கம் 14 வரை நடத்தப்பட்டது.

vi. கல்விக் கண்காட்சி பாணந்துறை புனித ஜோன் கல்லூரியில் 2018 அக்டோபர் 5 ஆம் திகதி நடத்தப்பட்டது.

vii. கல்விக் கண்காட்சி மீரிகம டீ.எஸ்.சேனாநாயக்க மத்திய கல்லூரியில் 2018 பெப்ருவரி 28 மற்றும் மார்ச் 01,02 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்டது.

viii. கல்விக் கண்காட்சி 2018 ஜூன் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் குருநாகல் மலியதேவ பாலிகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது.

ix. வருடாந்த அறிவியல் தினம் கண்காட்சி கொழும்பு 10 கோதமி பாலிகா வித்தியாலயத்தில் 2018 ஜூன் 29 ஆம் திகதி நடத்தப்பட்டது.

x. "கித்துதெவ் ஷில்ப பிரபா - 2018" கல்விக் கண்காட்சி கிறிஸ்துதேவ பாலிகா வித்தியாலயத்தில் 2018 ஜூலை 6 - 9 நடத்தப்பட்டது.

xi. கல்விக் கண்காட்சி கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தில் 2018 மார்ச் 7 மற்றும் 8 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்டது.

- சுமார் 75 மாதிரி தொகுப்புகள் தயாரிக்கப்பட்டு பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.









3. நீதவான் நீதிமன்றம் மற்றும் இலங்கை சுங்கம் என்பவற்றுக்காக மேற்கொள்ளப்பட்ட ஏனைய பகுப்பாய்வுகள்

பகுப்பாய்வு கோரப்பட்டது	மாதிரி வகை	மாதிரிகளின் எண்ணிக்கை	பகுப்பாய்வின் மதிப்பு ரூபா
நீதவான் நீதிமன்றங்கள்	மணல்/பாறை	17	110,500.00
சுங்கம்	மணல்	14	56,000.00
மொத்தம்			166,500.00

1.1.3 பகுப்பாய்வு ஆய்வு கூடம்

வெளிச் சேவை பயனர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட இரசாயன பகுப்பாய்வுகள்-

- பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களின் வேண்டுகோளின் பேரில் சுண்ணாம்புக்கல், படிகக்கல், காரீயம், களிக்கல், மண், மணல், சீமெந்து, மைக்கா, கனிய மணல், களிமண், நீர், சிதைவடைந்த பாறைகள், மற்றும் ஏனைய உலோகக் கலவைகள் அத்துடன் தரை ஓடுகள் மற்றும் பீங்கான் பொருள் கலவைகள் அடங்கிய 244 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இதன் மூலம் ரூபா 2,144,500.00 (வரியல்லாத) தொகை பகுப்பாய்வு ஆய்வுக்கூடத்திற்கு வருமானமாகக் கிடைத்தது.

- **புவிச்சரிதவியல் பிரிவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகள்.**

** புவிச்சரிதவியல் பிரிவின் கருத்திட்ட வருமானம் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கருத்திட்டத்தின் பெயர்	**மாதிரிகளின் எண்ணிக்கை**	**வருமானம் (ரூபா)**
1. டோக்கியோ சிமென்ட் லயிம்ஸ்டோன் கருத்திட்டம்	83	581,000.00
2. எம்.ஜீ.எம். மயின்ஸ் அன்ட் மினரல்ஸ் பிரைவெட் லிமிரெட்/மணல்	50	300,000.00
3. டோக்கியோ சிமென்ட் லங்கா பிரைவேற் லிமிடெட் சார்பாக மேற்கொள்ளப்பட்ட சீமேந்து மூலப்பொருள் ஆய்வு	110	1,320,000.00
4. தென்மேற்கு கடலோர அபவிருத்தி திட்டத்திற்கான தெதுவ பகுதியின் நீரின் தரப் பரிசோதனை	31	704,000.00
	மொத்தம்	**2,905,000.00**

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியக உத்தியோகர்தர்களின் ஆராய்ச்சி/கருத்திட்டங்களுக்காக அவர்களின் வேண்டுகோளின் பேரில் மேற்கொள்ளப்பட்ட இராசாயனப் பகுப்பாய்வுகள்

பகுப்பாய்வுக்கான கோரிக்கை விடுத்தது/கருத்திட்டம்	மாதிரிகளின் தன்மை / எண்ணிக்கை	மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு வகை	பகுப்பாய்வின் பெறுமதி
1. செம்மண் மாதிரி பகுப்பாய்வு	களிமண்/எண்ணிக்/01 கை செம்மன்/03	பூரண பகுப்பாய்வு	48,000.00
2. பொல்கொட மணல் ஆய்வு	மணல்/04	Pb,Cd,As,Hg	9,000.00
3. நீரோடை வண்டல் ஆய்வு	வண்டல்/ எண்ணிக்கை 12	தங்கம், வெள்ளி உள்ளிட்ட கன உலோகங்கள்	144,000.00
4. பரிகரிப்பின் பின்னர் குடிப்பதற்கான நீரின் தரத்தை பரிசோதிப்பதற்காக	நீர் / எண்ணிக்கை 05	பூரண பகுப்பாய்வு	45,000.00
5. கட்டுமானப் பணிகளுக்கான பொருத்தத்தை பரிசோதிப்பதற்காக	மணல்/ எண்ணிக்கை 05	உப்புத்தன்மை, குளோரைடு, கரிமப் பொருட்கள் மற்றும் கார்பனேட்டுகள்	20,000.00
6. பெறுமதி சேர்க்கப்பட்ட பணிகள்	பாறை / எண்ணிக்கை 2 இல்மனைற்/ 05	பூரண பகுப்பாய்வு	99,000.00

	எண்ணிக்கை 05		
7. ஏற்றுமதி மாதிரிகளுக்கான பகுப்பாய்வு	படிகக்கல்/ எண்ணிக்கை 02	பூரண பகுப்பாய்வு	12,000.00
8. கல் உடைத்தலினால் நிலக்கீழ் நீரில் ஏற்படும் நீரியல் தாக்கங்கள்	நீர்/ எண்ணிக்கை 14	பூரண பகுப்பாய்வு	63,000.00
9. இலங்கை சுங்கத்திலிருந்து ஜி.எஸ்.எம்.பி குழு சேகரித்த மாதிரிகள்	மண்கலவை/ கரிமப் பொருள்/14 மாதிரிகள்	தங்கம் மட்டும்	28,000.00
பகுப்பாய்வின் மொத்தப் பெறுமதி			**450,000.00**

ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளுக்காக இலவசமாக பரிசோதனை செய்யப்பட்ட மாதிரிகள்

பகுப்பாய்வுக்கான கோரிக்கை விடுத்தது/கருத்திட்டம்	மாதிரிகளின் தன்மை / எண்ணிக்கை	மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு வகை	பகுப்பாய்வின் பெறுமதி
1. பாறையியல் ஆய்வகம்/ நீதிமன்ற மாதிரிகள்	மணல்/ எண்ணிக்கை 10	உவர்தன்னமை	Rs 10,000.00
2. இலங்கை சுங்கம்	மண் / எண்ணிக்கை 10	தங்கத்திற்காக	Rs 10,000.00
3. அரசாங்கக் கணக்காய்வுத் திணைக்களம்	மண்/ எண்ணிக்கை 4	தங்கத்திற்காக	Rs 8000.00
பகுப்பாய்வின் மொத்தப் பெறுமதி			**Rs 28,000.00**

செயற்பாட்டுத் திட்டப் பணிகள் - புவியிரசாயன படமாக்கல்

(அ) வலய இலக்கம் 20: இறக்குவானை - தங்காலை

தீம்பொல்கெட்டிய, மாத்தறை, இறக்குவானை, தங்காலை, மொறவக்க மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய ஆறு வலயங்களில் 1:50,000 அளவு திட்டத்தின் பகுப்பாய்வுத் தரவுகளைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட வலய இலக்கம் 20 (இறக்குவானை - தங்காலை) நிலப் படத்தை அச்சிடும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதோடு அது விற்பனைக்காக கிடைக்கின்றது.

(ஆ) வலய இலக்கம் 08: அநுராதபுரம் - பொலனறுவை

புவியிரசாயண வலய இலக்கம் 08 (அநுராதபுரம் - பொலனறுவை நிலப்படத்தை தயாரிப்பதற்காக கெக்கிராவ வலயத்தில் சேகரிக்கப்பட்ட 250 மாதிரிகளின் பகுப்பாய்வுப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

(இ) வலய இலக்கம் 6: வவுனியா - திருகோணமலை

புவியிரசாயண வலய இலக்கம் 06 நிலப்படத்தை தயாரிப்பதற்காக மதவாச்சி மற்றும் ஹொரவ்பொத்தானை 1:50,000 அளவுத் திட்டத்தின் வலயத்தில் சேகரிக்கப்பட்ட 500 மாதிரிகளின் பகுப்பாய்வுப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதுடன் வவுனியா மற்றும் பன்குளத்திற்கான இரசாயன பகுப்பாய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆய்வுக்கூட ஏற்றங்கீகாரம் - ISO 17025

தேவையான ஆவணங்களுக்கான (தரக்கட்டுப்பாட்டு கைந்நூல், நடவடிக்கைமுறை கைந்நூல், வழிமுறைக் கைந்நூல் மற்றும் கணக்காய்வு அறிக்கைகள்) தயார்படுத்தல் முடிவுறுத்தப்பட்டது. பகுப்பாய்வு ஆய்வுக்கூடத்திற்கான ISO – 17025 ஐ பெற்றுக்கொளவதற்குத் தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பம் இலங்கை ஏற்றங்கிகாரச் சபைக்கு அனுப்பப்பட்டது.

2 வது சர்வதேச கனிம கருத்தரங்கு – 2018

கனிமத் துறையின் சவால்மிகு பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பிற்கு பதிலளிக்கும் விதமாக, இலங்கையின் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் ஒத்துழைப்புடன் இரண்டாவது சர்வதேச கனிம கருத்தரங்கினை ஆரம்பித்தது. கனிமத் துறையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி இது 2018 நவம்பரில் பயனுள்ள வகையில் முடிவுறுத்தப்பட்டது.

எதிர்கால இலங்கை - நீல பசுமை யுகம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒருங்கமைவாக 2018 கனிம கருத்தரங்கானது நடத்தப்பட்டதோடு பொருளாதார நன்மைகள் மற்றும் சுற்றுச்சூழல் தாக்கத்தை சமநிலையான முறையில் பேணிக்கொண்டு தேசத்தின் பூமி வளங்களுக்கு முழுமையான அணுகுமுறையை வழங்குவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. கனிமத் துறையின் வளர்ச்சிக்கு பெறுமதியான பல சிறிய அளவிலான ஆராய்ச்சிகள் நாடு முழுவதும் வியாபித்துள்ளன என்பது புரிந்து கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், இரண்டு ஆண்டுகளுக்குப் பின் திரும்பிப் பார்க்கும்போது, கடந்த ஆண்டுக்கான கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட சில ஆராய்ச்சிகள் நாடுகளின் பொருளாதாரத்தின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படுவதையும், மற்றவை மேலும் ஆராய்ச்சிக்காக நீடிக்கப்பட்டுள்ளதையும் காண முடிகின்றன. எனவே, பங்குதாரர்கள் மற்றும் நாடு என்பவற்றுக்கு மன்றத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தி, ஆரம்ப கட்டத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் மேம்பட்ட முறையில் வருடாந்த அடிப்படையில் இந்த செயல்முறையைத் தொடர அமைச்சானது ஆர்வமாக உள்ளது.









கனிமக் கொள்கை வகுக்கப்படுதல்

கனிமக் கொள்கையை வகுப்பதானது 2017/18 ஆம் ஆண்டில் ஜி.எஸ்.எம்.பி ஈடுபட்டிருந்த பிரதான மற்றும் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும். விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவால் தயாரிக்கப்பட்ட ஆரம்பக் கொள்கை வரைபு ஆனது மேலும் மேம்படுத்தப்பட்டு இச் செயல்பாட்டில் தேவையான கூறுகள் சேர்க்கப்பட்டன. கனிமக் கொள்கையின் இறுதி வரைவு மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு இரண்டு அமைச்சுக்களினதும் மேல்மட்ட நிர்வாகம் கொள்கை அடிப்படையில் அதற்கு இணங்கியுள்ளன. இது விரைவாக பொதுமக்களிடம் சமர்ப்பிக்கப்படும். வரைவு செய்யப்பட்ட கனிமக் கொள்கை தொடர்பான பங்குதாரர் கூட்டமொன்றை ஜி.எஸ்.எம்.பி 2018 அக்டோபர் 18 ஆம் திகதி மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கேட்போர்கூடத்தில் நடத்தியது.

புவிப் பௌதீகப் பணிகள்:

இக்காலப்பகுதியில் ஆய்வு புவிப் பௌதீகப் பிரிவானது பின்வரும் கருத்திட்டங்களில் ஈடுபட்டன.

வகை.	கருத்திட்டம்	நோக்கம்	முன்னேற்றம்
01	மணல் அகழ்வு வலயங்களில் மகாவலி நதியின் அடியில் நிலப்பாறை பண்புகள் **AP/2018/ EGPY/** மகாவலி	வெள்ள சமவெளிகளில் மணல் அகழ்வினால் ஏற்படக்கூடிய தாக்கத்தை அடையாளம் காணுதல்	இப் பணிக்காக 08 நாட்கள் செலவிடப்பட்டதோடு 16 வி.இ.எஸ்.பூர்த்தி செய்யப்பட்டன. சுமார் 30%வீத களப்பணி முடிவுறுத்தப்பட்டது.
02	இலங்கையின் டொலரைட் டைக் வரைபடமாக்கல் **AP/2018/EGPY/Dykes**	கல்வி மற்றும் புவிவெப்ப சாத்தியமான முன்னோக்குகளில் டைக் வரைபடத்தை பூர்த்திசெய்தல்	மாதுரு ஓயா, கோமரங்கடவல பகுதிகள் வரைபடமாக்கப்பட்டு காந்த வரைபடமாக்கத்திற்கான இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன - 20% வீத களப்பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. (08 நாட்கள்)
03	புவிப் பௌதீகவியல் கருவி சோதனை தளத்தின் அபிவிருத்தி **AP/2018/GEPY/**	புவிப் பௌதீகவியல் உபகரணங்களின் சோதனை மற்றும்	ஃபாக்ஸ் ஹில்லில் சாத்தியமான தளத்திற்காக இராணுவத்துடன்

	சோதனை தளம்	அது தொடர்பான அறிவை பரப்புவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கான மைய வசதிகளை வழங்குதல்	கலந்துரையாடல்கள் தொடங்கப்பட்டன.
04	படிகக்கல் படிமங்கள் தொடர்பான பொருட்பதிவேடு **AP/2018/GEPY/VQ**	கிடைக்கக்கூடிய ஒதுக்கங்கள் உட்பட படிமங்கள் மற்றும் அவற்றின் தரம் தொடர்பாக விபரமான தரவுத் தளத்தை உருவாக்குதல்	தளங்கள் பார்வையிடப்பட்டன மற்றும் கைத்தொழில்களிடமிருந்து தகவல்களைப் பெற ஒரு கேள்விக்கொத்து தயாரிக்கப்பட்டுள்ளது. - 04 நாட்கள்
05	எப்பாவல ஆய்வு **AP/2018/GEPY/**எப்பாவல	வரைபடத்தைத் தயாரித்தல்	எப்பாவல வரைபடமாக்கல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. டோலோரைட் மாதிரிகள் கால அளவீட்டுக்காக அனுப்பப்பட்டன.

1.1.5 வாடிக்கையாளர் பதிற்செயற்பாட்டுக் கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் (வருமானப் பிறப்பாக்கம்)

அட்டவணை 1: 2018 ஆம் ஆண்டில் பல்வேறு கருத்திட்டங்களிலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் சுருக்கம்

கருத்திட்டம் மற்றும் வாடிக்கையாளரின் பெயர் (கம்பெனி)	வருமானம் (மி)
முன்மொழியப்பட்ட தெத்துவ அபிவிருத்தி கருத்திட்டத்தின் புவி தொழில்நுட்ப ஆய்வு தென் பிராந்திய அபிவிருத்திச் சபை	6.7
மதுரங்குலிய புபுதுகம ஸ்ரீ ஜினராஜ பன்சாலையின் முன்மொழியப்பட்ட புத்தர் சிலையின் தரை நிலைமைகள்	நன்கொடை
லங்கா பீங்கான் பி.எல்.சி.க்கான அக்குரெஸ்ஸ பகுதியில் உருண்டைக் களிமண் ஆய்வு	1.1
சீகிரியா பாதுகாப்புத் திட்டம் மத்திய கலாசார நிதியம்	5.1
துளையிடல் ஆய்வு - பலப்பிட்டி மருத்துவமனையில் முன்மொழியப்பட்ட கட்டிடம் தென் மாகாண சுகாதார அமைச்சு	0.6
துளையிடல் ஆய்வு - எல்பிட்டி மருத்துவமனையில் முன்மொழியப்பட்ட கட்டிடம் தென் மாகாண சுகாதார அமைச்சு	0.7
ஜின் நில்வலா கருத்திட்டத்தில் புவி தொழில்நுட்ப ஆய்வு நீர்ப்பாசனத் திணைக்களம்	3.0

2. சுரங்கப் பிரவு

சுரங்கப் பிரிவின் பிரதான பணிகள்

தற்போது பதினாறு பிராந்திய அலுவலகங்களுடன் சுரங்கப் பிரிவு செயற்பட்டு வருகின்றது. பல்வேறு சுரங்கத் தொழில்களில் ஈடுபட்டுள்ள எமது சேவைப் பயனர்களுக்கு அவசியமான சேவைகளை வழங்குவதற்காக இந்த அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1992ஆம் ஆண்டில் 33ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்திற்கு அண்மையில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தினால் பணியகத்திற்கு சட்டவிரோதமான சுரங்கம் தோண்டும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான அதிகளவான அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஸ்தல ஆய்வுகளை மேற்கொள்ளுதல், பரிசோதனை வெடி வைப்புகளை மேற்கொள்ளுதல், பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்தல், கனிப்பொருட்களை தோண்டுதல், வியாபாரம் செய்தல், கனிப்பொருட்களை அகழ்ந்தெடுத்தல் மற்றும் போக்குவரத்து போன்ற நடவடிக்கைகளுக்கான உரிமங்களை வழங்குதல் அத்துடன் சட்ட விரோதமாக மேற்கொள்ளப்படும் சுரங்கம் தோண்டும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல் என்பன இப் பிரிவின் முக்கிய பணிகளாகும். இப்பிரிவுக்கான முதன்மைப் பணிகளுள் பின்வருவனவும் உள்ளடங்குகின்றன.

- 1992ஆம் ஆண்டில் 33ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின்படி பதனிடுதல் மற்றும் ஏற்றுமதி செய்வதற்காக சுரங்கங்கள் தோண்டப்படுவதன் வர்த்தக ரீதியான சாத்தியவளம் மதிப்பீடு செய்யப்படுதல்.

- கனிமங்களுக்கான ஆய்வு மற்றும் சுரங்க அகழ்வு மற்றும் உரிமங்களை வழங்குவதன் மூலம் அவற்றை பதனிடுதல், வியாபாரம் செய்தல், ஏற்றுமதி செய்தல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல்.

- மேலும், வர்த்தக அடிப்படையில் கனிப்பொருட்களை பிரித்தெடுத்தல், உற்பத்தி செய்தல் என்பவற்றை மேம்படுத்துவதற்காக பின்பற்றவேண்டிய நடவடிக்கைமுறை தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

வழங்கப்படும் சேவைகள்

- சுரங்கங்களை சோதனையிடல் (நடமாடும் சேவை - உரிமங்களை வழங்குதல், தொழில்நுட்ப ஆலோசனைகள்)

- நிபுணத்துவ சேவைகள் (வெடி வைத்தல் நுட்பங்கள், உரிமங்களைப் புதுப்பித்தல், பாதுகாப்பு வழிமுறைகள், பரிசோதனை வெடி வைத்தல், வெடிப்புகளை ஆராய்தல்)

- விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் (அரசாங்க அலுவலர்கள் மற்றும் உரிமம் பெற்றவர்களுக்காக நடத்தப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், சுரங்கம் தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான செயலமர்வுகள், கண்காட்சிகள்)

- மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் (சுரங்கம் தோண்டும் நபர்களை சுற்றாடல் பாதுகாப்பினை முன்னிட்டு ஊக்கப்படுத்தல், சுரங்கங்களில் மேற்கொள்ளப்படுகின்ற சுற்றாடல் பாதுகாப்பு
- மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்)

உரிமங்கள் விநியோகிக்கப்பட்டதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம்

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் 1992ஆம் ஆண்டில் 33ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின்படி பின்வரும் உரிமங்களை விநியோகிக்கின்றன.

- ஆய்வுக்கான உரிமங்கள்
- சுரங்க உரிமங்கள் (கைவினைஞர்சார்,கைத்தொழில்சார், ஒதுக்கப்பட்ட கனிப்பொருட்கள்)
- வர்த்தக உரிமங்கள்
- ஏற்றுமதி உரிமங்கள்
- போக்குவரத்து உரிமங்கள்

விநியோகிக்கப்படும் உரிமங்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- **ஆய்வுக்கான உரிமம் (EL) - (வருமானம்)**

- இந்த உரிமத்தை பெற்றுக் கொள்பவர்களுக்கு அதனால் அனுமதி அளிக்கப்பட்டுள்ள அனைத்து விதமான கனிப்பொருட்களையும் ஆய்வு செய்வதற்கான முழு உரிமையும் உண்டு.

- **சுரங்க உரிமங்கள்**

- கைவினைஞர்சார் சுரங்கம் தோண்டுதல் (AML) - (வருமானம்)

இந்த உரிமத்தை பெற்றுக் கொள்பவர்களுக்கு அதனால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளவாறு **10** ஹெக்டயர் நிலப்பரப்பை விஞ்சாத ஒரு பிரதேசத்தில் அல்லது **25** மீற்றருக்கு மேற்படாத ஆழத்தில் காணப்படும் அனைத்து விதமான கனிப் பொருட்களை தோண்டி எடுத்தல், பதனிடுதல் மற்றும் வியாபாரம் செய்வதற்கான உரிமை உண்டு.

வகுதி அ - கீழே தரப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்டவை இதில் அடங்கும்.

- ✓ துளையின் ஆழம் 1.5 மீற்றருக்கு மேற்பட்டதாக இருத்தல் ஆகாது.
- ✓ உற்பத்திஅளவு மாதம் ஒன்றுக்கு 100 m^3 குறையாமலும் 600 600 m^3 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
- ✓ பொறித்தொகுதி எதனையும் பயன்படுத்தக்கூடாது.

வகுதி ஆ - கீழே தரப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்டவை இதில் அடங்கும்.

- ✓ துளையின் ஆழம் **1.5** மீற்றருக்கு மேற்பட்டதாக இருத்தல் ஆகாது.
- ✓ உற்பத்திஅளவு மாதம் ஒன்றுக்கு100 m^3 இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- ✓ பொறித்தொகுதி எதனையும் பயன்படுத்தக்கூடாது.

கைத்தொழில்சார் சுரங்க உரிமங்கள் (IML) - (வருமானம்)

இந்த உரிமத்தை பெற்றுக் கொள்பவர் குறித்துரைக்கப்பட்ட பிரதேசத்தில் காணப்படும் கனிப்பொருட்களை ஆய்வு செய்தல், தோண்டி எடுத்தல் மற்றும் வியாபாரம் செய்வதற்கான உரிமை உடையவராவார். கைத்தொழில்சார் உரிமங்கள் மூன்று வகைகளில் காணப்படுகின்றன.

வகுதி அ - கீழே தரப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்டவை இதில் அடங்கும்.

- வெடிவைத்தல் முறை **–** தாமதப்படுத்தும் மூலப்பொருள்களைப் பயன்படுத்தி பல்வகை துளையிடல் துளைகள்
- துளையின் ஆழம் - **3** மீற்றருக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- உற்பத்தி அளவு - மாதம் ஒன்றுக்கு1500 m^3 இற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

  பயன்படுத்தப்பட வேண்டிய இயந்திரங்கள் - சுவடு துரப்பணம், பாறைத்துரப்பணம், பாறை உடை கருவி, முகப்பு முனை அகழ்கலன் உட்பட ஏனைய இயந்திரங்கள்

- **<u>வகுதி ஆ</u>** - (கீழே தரப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்டவை இதில் அடங்கும்.)
- வெடிவைத்தல் முறை – ஒரு துளை வெடிப்பு
- துளையின் ஆழம்– 1.5 மீற்றருக்கு குறையாமலும் 3.00 மீற்றருக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
- உற்பத்தி அளவு - மாதம் ஒன்றுக்கு அளவிலும் 1500 m^3 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
- பயன்படுத்தும் இயந்திரங்கள் - பாறைத்துரப்பணம் மட்டும்

<u>வகுதி இ</u> - (கீழே தரப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்டவை இதில் அடங்கும்.)

- வெடிவைத்தல் முறை – ஒரு துளை வெடிப்பு
- துளையின் ஆழம் – 1.5 மீற்றருக்கும் குறைவாக இருத்தல் வேண்டும்.
- உற்பத்தி அளவு - மாதம் ஒன்றுக்கு 600 m^3 இற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.
- பயன்படுத்தும் இயந்திரங்கள் - பாறைத்துரப்பணம் மட்டும்

<u>ஒதுக்கக் கனிம உரிமங்கள் (RML)</u> – (வருமானம்)

கனிப்பொருட்களை ஆய்வு செய்தல், தோண்டி எடுத்தல், பதனிடுதல் மற்றும் வியாபாரம் செய்வதற்கான உரிமத்தினை அமைச்சரின் அங்கீகாரத்துடன் வழங்கலாம்.

வியாபார உரிமம் (TDL) - (வருமானம்)

பணிப்பாளரின் விசேட அங்கீகாரத்துடன் உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள கனிப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கும், களஞ்சியப்படுத்தவும், வியாபாரம் செய்யவும் தனியுரிமையற்ற அனுமதி வழங்கப்படும். மேலும், உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள கனிப்பொருட்களை ஏற்றுமதி செய்யவும் அனுமதி வழங்கப்படும்.

வகுதி அ - ஏற்றுமதிக்கான கனிப்பொருட்கள் வியாபாரம்

வகுதி ஆ - உள்நாட்டு ரீதியில் கனிப்பொருள் வியாபாரம்

வகுதி இ - கையாள் உற்பத்தி செய்யப்படும் செங்கற்கல் மற்றும் சுண்ணாம்பு விற்கனை

போக்குவரத்து உரிமங்கள் - (வருமானம்)


உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள கனிப்பொருட்கள் அல்லது கனிமங்கள் அடங்கிய பொருட்களை உரிமத்தில் சொல்லப்பட்டுள்ள அளவுகளை மற்றும் குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்தினுள் போக்குவரத்துக்கு இதன் மூலம் அனுமதியளிக்கப்படும். கனிப்பொருட்களை ஆய்வு செய்தல், தோண்டி எடுத்தல் மற்றும் வியாபாரம் செய்வதற்கான உரிமங்களானவை கனிப்பொருட்கள் அல்லது கனிமங்கள் அடங்கிய பொருட்களை ஏற்றிச் செல்ல போக்குவரத்து உரிமம் இருத்தல் வேண்டும்.

கனிப்பொருள் ஏற்றுமதி - (வருமானம்)

கனிப்பொருட்களை ஆய்வுசெய்தல், தோண்டி எடுத்தல் மற்றும் வியாபாரம் செய்வதற்கான உரிமங்களைப் பெற்றுள்ளோர் உரிமம் விநியோகிக்கப்பட்டுள்ள கனிப்பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளரிடம் விசேட அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

அரசுரிமைக் கட்டணம் - (வருமானம்)

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தால் அறவிடப்பட்டுள்ள அரசுரிமைக் கட்டணங்கள் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. அறவிடப்பட்டுள்ள அரசுரிமைக் கட்டணங்களில் சாதாரண அதிகரிப்பினைக் அது காட்டுகின்றது.




படம் 1: 2005 முதல் 2018 வரையிலான காலகட்டத்தில் அரசுரிமை மூலம் ஈட்டப்பட்ட வருமானம்

வருடம்	அரசுரிமை வருமானம்(மி.ரு)	வருடம்	அரசுரிமை வருமானம்(மி.ரு)
2005	143.06	2012	732.71
2006	150.26	2013	681.27
2007	199.66	2014	1,128.46
2008	284.05	2015	1,293.43
2009	378.29	2016	1,578.58
2010	453.85	2017	2,569.32
2011	586.89	2018	4202.44

<u>சுரங்கங்கள் சோதனையிடப்பட்டதன் மூலம் ஈட்டுப்பட்ட வருமானம்</u>

பின்வரும் வரைபடத்தில் காட்டப்படுகின்ற சுரங்கங்கள் சோதனையிடப்பட்டதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானத்தின் விரைவான அதிகரிப்பானது நாட்டின் கனிமத் தொழிலின் விரைவான வளர்ச்சியைக் காட்டுகின்றது.



படம் 2: 2005 முதல் 2018 வரையிலான காலகட்டத்தில் சுரங்கங்கள் பரிசோதனை செய்யப்பட்டதன் மூலம் கிடைத்த வருமானம்

கட்டணம்(ரூ.மி)		கட்டணம்(ரூ.மி)	
2005	5.25	2012	142.52
2006	4.43	2013	153.23
2007	5.61	2014	140.15
2008	30.07	2015	182.94
2009	52.76	2016	247.95
2010	95.45	2017	260.66
2011	128.42	2018	243.54


உரிமங்களை விநியோகிப்பதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம்

2018 ஆம் ஆண்டில் பணியகம் பல்வேறு கனிமங்களுகாக விநியோகித்த உரிமங்களின் எண்ணிக்கை கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை **1:** 2018 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்டுள்ள உரிமங்கள்

உரிம வகை	**உரிம வகையினம்**	**அலகு உரிமக் கட்டணம்**	**விநியோகிக்கப்பட்டுள்ள உரிமங்களின் எண்ணிக்கை**	**மொத்தக் கட்டணம்**
ஆய்வு	EL		34	6,247,000.00
சுரங்க அகழ்வு	IML/A	20000	378	7,560,000.00
	IML/B	8000	1900	15,200,000.00
	IML/C	4000	493	1,972,000.00
	AL/A	3000	1747	5,241,000.00
	AL/B	1250	2395	2,993,750.00
வணிக	TDL/A	7500	10	75,000.00
	TDL/B	5000	3729	18,645,000.00
	TDL/C	1000	6	6,000.00
போக்குவரத்து	TPL	90	936511	84,285,990.00
ஏற்றுமதி		5000	649	3,245,000.00
மொத்தம்			**947,852**	**145,470,740.00**

கனிமங்களை ஆய்வு செய்தல், சுரங்க அகழ்வு, வர்த்தகம், போக்குவரத்து மற்றும் ஏற்றுமதி செய்வதற்கான உரிமங்களை வழங்குவதன் மூலம் கிடைத்த வருமானத்தை பின்வரும் விளக்கப்படம் காட்டுகின்றது.



படம் 3: 2005 முதல் 2018 வரையிலான காலகட்டத்தில் உரிமங்களை விநியோகிப்பதன் மூலம் கிடைத்த வருமானம்

வருடம்	உரிமக் கட்டணம்(ரூ.மி)	வருடம்	உரிமக் கட்டணம்(ரூ.மி)
2005	36.05	2012	69.82
2006	47.04	2013	91.15
2007	48.04	2014	75.60
2008	41.90	2015	80.00
2009	45.07	2016	224.80
2010	57.64	2017	176.40
2011	79.46	2018	145.47

புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம் – சுரங்கப் பிரிவு

செயலாற்றுகை சுருக்கம் (நிதி மற்றும் பௌதீக) 2018 ஆம் ஆண்டு

ரூ.மிலல்மியன்

கூறுகள்/தொழிற்பாடுகள்	* நி பௌ	நிதி வகை	அலகு	வருடாந்த ஒதுக்கீடும் இலக்குகளும்	நிதி, பௌதீக முன்னேற்றம்
1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின்படி உரிமம் வழங்கல்					
கைவினைஞர்சார் சுரங்க அகழ்வு உரிமம் (AML)					
கைவினைஞர்சார் சுரங்க அகழ்வு உரிமம் - A	நி	வருமானம்	ரூ.மி.	4.998	5.241
	பௌ		இல.	1666	1747
கைவினைஞர்சார் சுரங்க அகழ்வு உரிமம் - B	நி	வருமானம்	ரூ.மி.	3.000	2.994
	பௌ		இல.	2400	2395
கைத்தொழில் சுரங்கம் அகழ்வு உரிமம் (IML)					
கைத்தொழில் சுரங்கம்	நி	வருமானம்	ரூ.மி.	20.000	7.560

அகழ்வு உரிமம் - A					
	பௌ		இல.	1000	378
கைத்தொழில் சுரங்கம் அகழ்வு உரிமம் - B	நி	வருமானம்	ரூ.மி.	42.496	15.200
	பௌ		இல.	5312	1900
கைத்தொழில் சுரங்கம் அகழ்வு உரிமம் - C	நி	வருமானம்	ரூ.மி.	20.000	1.972
	பௌ		இல.	5000	493
வர்த்தக உரிமம் (TDL)					
வர்த்தக உரிமம் - A	நி	வருமானம்	ரூ.மி.	0.495	0.075
	பௌ		இல.	66	10
வர்த்தக உரிமம் - B	நி	வருமானம்	ரூ.மி.	15.275	18.645
	பௌ		இல.	3055	3729
வர்த்தக உரிமம் - C	நி	வருமானம்	ரூ.மி.	0.006	0.006
	பௌ		இல.	6	6
போக்குவரத்து உரிமம் (TPL)	நி	வருமானம்	ரூ.மி.	75.000	72.769 (இறுதிக் கணக்கு)
	பௌ		இல.	833,333	808544
ஹாட்வெயர் TPL	நி	வருமானம்		23.350	33.947 (இறுதிக் கணக்கு)
ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்கள்	நி	வருமானம்	ரூ.மி.	3.000	3.245
	P		இல.	600	649

ஆய்வுக்கான உரிமங்கள் (EL)	நி	வருமானம்	ரூ.மி.	15.000	6.247
அரசுரிமை சேகரிப்பு (இறுதிக் கணக்கு)	நி	வருமானம்	ரூ.மி.	8372.7477	4202.44
அகழ்வுக்கான சோதனைக் கட்டணங்கள்	நி	வருமானம்	ரூ.மி.	286.505	243.540
பரிட்சார்த்த வெடி வைத்தல்	நி	வருமானம்	ரூ.மி.	6.100	4.827
மீளளிப்பு உரிமங்கள் மீதான அலுவலகக் கட்டணங்கள்	நி	வருமானம்	ரூ.மி.	0.200	0.443
சுவரொட்டிகளின் விற்பனை	நி	வருமானம்	ரூ.மி.	0.293	0.022
பரிமாற்ற கட்டணம் _ சுரங்க அகழ்வு	நி	வருமானம்	ரூ.மி.	0.015	0.0055
சுரங்க வருமானம் - நானாவித	நி	வருமானம்	ரூ.மி.	0.500	0.568
முந்தைய உரிமத்தினை சமர்ப்பிக்காதமை மீதான அபராதம்	நி	வருமானம்	ரூ.மி.	44.250	0.001
முந்திய உரிமத் பத்திரங்கள் இன்மை மீதான தண்டங்கள்	நி	வருமானம்	ரூ.மி.		45.253
மாதிரி ஏற்றுமதிக்கான கடிதம்	நி	வருமானம்	ரூ.மி.	0.081	0.536
வங்கி உத்தரவாதம் மீளளிப்பு மீதான	நி	வருமானம்	ரூ.மி.	0.350	0.615

அலுவலகக் கட்டணங்கள்					
புகைப்பட நகல் கட்டணங்கள் (சேகரிப்பு)	நி	வருமானம்	ரூ.மி.		0.021
பயிற்சிப் பாடநெறி கட்டணம்	நி	வருமானம்	ரூ.மி.		0.513
ஆய்வு உரிமத்திற்கான தொடர்பாடல் கட்டணம்	நி	வருமானம்	ரூ.மி.	0.400	0.120
TPL - SLLRDC மீதான சேவைக் கட்டணங்கள்	நி	வருமானம்	ரூ.மி.	3.100	3.004
பிரதேச செயலகத்திலிருந்தான வருமானம்	நி	வருமானம்	ரூ.மி.	3.100	18.925
அகழ்வு உரிமங்களுக்கா தகவல் சபை	நி	வருமானம்	ரூ.மி.		2.350
மாதிரிகளுக்கான ஏற்றுமதி	நி	வருமானம்	ரூ.மி.	0.781	0.0595
மொத்தம்				**8941.0427**	**4691.144**

பிராந்திய அலுவலகங்கள்

அம்பாறை, அநுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, கம்பஹா, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, குருநாகல், மாத்தறை, மொனராகலை, பொலனறுவை, இரத்தினபுரி, திருகோணமலை ஆகிய நகரங்களில் அமைந்துள்ள 16 பிராந்திய அலுவலகங்களுடனும் ஹசலக்க மற்றும் கந்தளாய் நகரங்களில் அமைந்துள்ள இரண்டு உப அலுவலகங்களுடனும் சுரங்கப் பிரிவு தற்போது இயங்கி வருகின்றது. அந்தந்தப் பிரதேசங்களில் சுரங்கம் தோண்டும் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சிறந்த சேவையினை வழங்குதல் அத்துடன் சட்ட விரோதமாக மேற்கொள்ளப்படும் சுரங்கம் தோண்டும் பணிகளைக் கட்டுப்படுத்தல் பிராந்திய அலுவலகங்களின் முக்கிய பணியாகும்.

2018ஆம் ஆண்டில் பிராந்திய அலுவலகங்களில் பணியாற்றிய பிராந்திய சுரங்கப் பொறியியலாளர்களின் விபரங்கள் பின்வருமாறு


பிராந்திய அலுவலகங்கள்	**பிராந்திய சுரங்கப் பொறியியலாளர்/ சுரங்கப் பொறியியலாளர்**
அம்பாறை	பொறி.எச்.ஏ.சீ.கே.பண்டார , பொறி.எச்.எம்.ஜே.சீ.வீரசூரிய
அநுராதபுரம்	பொறி.சீ.கே.கருணானந்த , பொறி.ஜே.எம்.ஈ.பீ.கே.ஜயசேகர , பொறி.எஸ்.ஏ.ஜே.குமாரசிறி
பதுளை	பொறி.டப்ளியூ.ஏ.எஸ்.ரூபவன்ச , பொறி.ஈ.எம்.கே.பீ.ஏக்கநாயக்க
மட்டக்களப்பு	பொறி.எம்.ஆர்.எம்.பாரீஸ்
கொழும்பு	பொறி.கே.டீ.பீ.கருணாநாயக்க , பொறி.ஐ.ஜீ.வீ.சந்தமாலி
கம்பஹா	பொறி.எஸ்.ஜே.ஐ.ரொட்ரிகோ , பொறி.டப்ளியூ.கஜசிங்க
அம்பாந்தோட்டை	பொறி.யூ.எச்.ரீ.பிரியந்த , பொறி.எஸ்.பீ.கே.பத்திரண
யாழ்ப்பாணம்	பொறி.டீ.மயூரன் , பொறி.சீ.ஜெயரூபன் , பொறி.ஆர்.ஆர்.குலாஸ்
களுத்துறை	பொறி.டப்ளியூ.ஏ.ஏ.வன்னியாரச்சி , பொறி.யூ.எல்.எச்.சத்துராணி
கண்டி	பொறி. ஏ.பீ.விமலசேன, பொறி.ஏ.எம்.எச்.வீ.அதிகாரி, பொறி.ஜீ.வீ.ஏ.சீ.கொடகம
குருநாகல்	பொறி. கே.என்.டப்ளியூ.கே.விமலரத்ன , பொறி.ஆர்.எம்.சீ.பீ.ராஜபக்ஷ , பொறி.டப்ளியூ.எம்.என்.ரீ.வர்ணசூரிய
மாத்தறை	பொறி.டீ.எல்.பீ.எம்.டக்ளஸ்
மொனராகலை	பொறி.ரீ.எம்.டப்ளியூ.பண்டார , பொறி.எஸ்.எஸ்.ஹேவாவசம்
பொலனறுவை	பொறி.கே.ஜீ.ஜீ.கும்புருஹேன , பொறி.டப்ளியூ.ஜீ.பீ.ரீ.குமார , பொறி.டப்ளியூ.எம்.ரீ.யூ.ஜயசிங்க
இரத்தினபுரி	பொறி.ரீ.எஸ்.குமார , பொறி.ஆர்.எம்.டீ.ரத்நாயக்க
திருகோணமலை	பொறி.பீ.ஏ.எஸ்.குமாரசிங்க , பொறி.கே.விக்னேசமூர்த்தி

03. நிதி மீளாய்வு

2018 ஆம் ஆண்டுக்கான புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் தமது வருமானம் மற்றும் செலவினம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவான பெறுமதியை வெளிப்படுத்துகின்றது. அதற்கமைய 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கு ரூபா மில்லியன் 391 (2017 : ரூ.மி. 687) ஆன தேறிய இலாபத்தைப் பெற்றுக் கொள்ள பணியகத்திற்கு இயலுமாயிற்று. மீளாய்வு ஆண்டினுள் பணியகத்தின் வருமானம் 144% இனால், அதாவது ரூபா மில்லியன் 4918.62 ஆக அதிகரித்தது. (2017 ரூ.மி. 5288.69)

ஆக்கவுரிமை வருமானம் (2018 : ரூ.மி. 4336 – 2017 ரூ.மி. 4626), உரிமப்பத்திரக் கட்டணம் (2018 ரூ.மி. 182 – 2017 : ரூ.மி. 275.6) பரிசோதனைக் கட்டணம் (2018 : ரூ.மி. 244 – 2017 : ரூ.மி. 260), ஆய்வுகூட வருமானம் (2018 : ரூ.மி. 4.1 – 2017 ரூ.மி. 2.5), கருத்திட்ட வருமானம் (2018 : ரூ.மி. 323 – 2017 ரூ.மி. 281), ஆகயி வருமானங்கள் பணியகத்தின் வருமானங்களில் உள்ளடங்கும். மேலும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் புதிய கருத்திட்டங்களின் பணிகளிலும் பணியகம் ஈடுபட்டுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்களவு இலாபம் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், இதன் தாக்கம் ரூபா மில்லியன்



04. சட்டப் பிரிவு

பணியகத்தாலும் பணியகத்திற்கு எதிராகவும் தொடரப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பில் பணியகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திச் செயற்படுதல் சட்டப் பிரிவின் பிரதான பணியாக அமைகின்றது.

உயர் நீதிமன்றம், மேன் முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றில் 46 வழக்குகள் நிலுவையில் இருந்தன. அங்கீகரிக்கப்படாத சுரங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக 09 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சட்ட அமலாக்கப் பிரிவு மற்றும் 1921 ஹாட்லைன் இலக்கத்தை தொழிற்படுத்தவதற்கான பணி என்பன தற்காலிகமாக நியமிக்கப்பட்ட அதிகாரிகளுடன் சட்டப் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளன. அதன்படி 14 முற்றுகைகள் /புலனாய்வுகள் நடத்தப்பட்டு சட்டவிரோத சுரங்கத் தொழிலாளர்கள் மீது 7 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ரூ. 610,000 / - அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்குகள் தொடர்பாக கலந்தாலோசிப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் 16 கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டத்தில் காணப்படுகின்ற சட்டப் பிரச்சினைகள் தொடர்பாக அறிவூட்டுவதன் பொருட்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள், விசேட அதிரடிப்படையினர் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்காக கட்டான தேசிய பொலிஸ் கல்லூரியிலும், கொழும்பு மருதானையில் அமைந்துள்ள போலிஸ் கல்லூரியிலும் அநுராதபுரம், அம்பாறை, மாத்தறை மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களிலும் ஒன்பது விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன

உயர் நீதிமன்ற வழக்கு இலக்கம் 81/2004 இன் தீர்ப்பின் மூலம் பணிக்கப்பட்டுள்ள வகையில் மா-ஓயா முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தில் சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டாளர்ளுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலை ஒருங்கிணைக்கும் பணியை சட்டப்பிரிவு மேற்கொண்டது. மேலும், மா- ஓயா ஆற்றின் குறுக்கே உள்ள உணர்திறன் வலயத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக புவியியல் பிரிவால் பூர்த்தி செய்யப்படாத வரைபடத் தயாரிப்பு நடவடிக்கைகள் மற்றும் தொடர்புடைய பிரச்சினைகள் சம்பந்தமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம், வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மையம், பிரதேச செயலகங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களுடன் இணைப்பாக்க நடவடிக்கைகளை சட்டப்பிரிவு மேற்கொண்டது.

முகாமைத்துவச் சபையின் கூட்டங்கள் நடத்தப்பட்டு, கூட்டக்குறிப்புகள் தயாரிக்கப்பட்டதுடன் முகாமைத்துவச் சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் பின்தொடர் நடவடிக்கைகள் சட்டப் பிரிவினால் பகிர்ந்தளிக்கப்பட்டன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டு, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மற்றும் பணிப்பாளர் சபை என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் சட்டப் பிரிவினரால் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல், ஏனைய சட்டங்கள் மற்றும் காணி உரித்து தொடர்பான பல்வேறு விடயங்கள்

சம்பந்தமாக சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொளவதற்காக 2176 கடிதங்களும் 242 உரிமக் கோப்புகளும் சட்டப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அரசுரிமை கட்டண நிலுவை தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் மறுசீரமைக்கப்பட்ட காணிகள் மற்றும் கருத்திட்ட கடன்படுனர்கள் தொடர்பாக ஆராய்ந்து பாரக்கப்பட்டு தனியான கோப்புக்கள் தயாரிக்கப்பட்டு பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கதிர்காமம் சுற்றுலா விடுதி, அம்பாறை பிராந்திய அலுவலகம், இரத்தினபுரி பிராந்திய அலுவலகம் மற்றும் பொலனறுவை பிராந்திய அலுவலகம் என்பவற்றுக்காக ஒதுக்கப்பட்ட காணிகளின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.


பிராந்திய அலுவலகங்களுக்கான ஆதனங்களின் உரித்துறுதி பரிசீலிக்கப்பட்டுள்ளதுடன் பிராந்திய அலுவலகங்களுக்காக 5 குத்தகை ஒப்பந்தங்களை நடைமுறைப்பத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், புவிச்சரிதவியல் பிரிவினால் பொறுப்பேற்கப்பட்ட துளையிடல் கருத்திட்டங்களுக்காக நான்கு உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் கருத்திட்டங்கள், கனிப்பொருள் ஆய்வுப் பிரிவு, தூய்மைப் பணியாளர்கள், பாதுகாப்புச் சேவைகள், வாகன ஒப்பந்தங்கள் மற்றும் ஏனைய ஒப்பந்தங்கள் என்பன நொத்தாரிசின் பங்களிப்பின்றி தயாரிக்கப்பட்டு ஒப்பமிடப்படுதல் மற்றும் தேவையான ஆலோசனைகள் வழங்கப்படுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


மனித வளம் பற்றிய மீளாய்வு

ஊழியர்கள்	
[illegible]	364
[illegible]	201
ஒப்படை அடிப்படை	43
[illegible]	34
பயிற்சியாளர்கள்	146




ஊழியர் பட்டியல் – தலைமையகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள்

ஊழியர் பட்டியல் – தலைமையகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள்	
[illegible]	197
பிராந்திய அலுவலகம்	167



நிரந்தர ஊழியர்கள் பற்றிய விபரங்கள்	
[illegible]	236
[illegible]	128
மொத்தம்	364



தாபன நிருவாகம்

தாபனப் போட்டி, வளர்ச்சி மற்றும் ஸ்தீரத் தன்மைக்காகத் தாபன நிருவாகம் முக்கியமானதோர் தேவையென ஒட்டுமொத்தமான உலகிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டதோர் விடயமாகும். நல்லாட்சி நடைமுறை தொடர்பாகத் தமது கடமைப் பொறுப்புக்கள் சம்பந்தமாக உயர் மட்டத்திலான தார்மீகப் பெறுமதி மற்றும் பொறுப்புடன் தமது கடமைகளை மேற்கொண்டு முகாமைத்துவ சபை நடவடிக்கை எடுக்குமா என்பது தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

எமது நிறுவனம் நீண்டகால அடிப்படையில் வெற்றி அடைவிற்கும் தமது வாடிக்கையாளர்களுக்குப் பெறுமதி மிக்க நிறுவனமாக மாறுவதற்கும் அது சமூகத்துக்கான பெறுமதி வாய்ந்த நிறுவனமாக இருக்க வேண்டும். சமூகத்துக்குப் பெறுமதியான நிறுவனமாக விளங்குவதற்கான எமது அணுகு முறை பணிப்பாளர் சபையினால் வடிவமைக்கப்பட்ட பலமான கொள்கைகள் மற்றும் பெறுமதியின் அடிப்படையில் இருக்க வேண்டும். சட்டப்படியான தேவை மற்றும் சிறந்த வழிமுறையின் அடிப்படையில் எம்மால் எமது நிர்வாகம் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படும்.

நிறுவனத்தின் அனைத்துக் கட்டமைப்புக்களையும் தொலைநோக்குச் சிந்தனைகளையும் பாதுகாப்பது முகாமைத்துவச் சபையின் கடமைப் பொறுப்பாகும் என்பதுடன் பணியகத்துக்கு வழிகாட்டல் மற்றும் பரிந்துரைகள் என்பன வழங்கப்படுகின்றன. பிரதானப் பணிகள், நிதி, சட்டங்கள், சேவை பெறுனர்களுக்கான பணிகள், பணியகத்தின் பல்வேறு பிரிவுகள் தொடர்பாகக் கூட்டங்கள் நடத்துதல், நிறுவனம் தொடர்பாகத் தொடர்ச்சியான புரிந்துணர்வுடன் இருத்தல் போன்ற காரியங்கள் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்படுகின்றன.

புவிச்சரிதவியல் சுரங்க அகழ்வுப் பணியகம் முகாமைத்துவச் சபையினால் நிர்வகிக்கப்படுகின்றது. விடயப் பொறுப்பு அமைச்சரினால் சுரங்கக் கனிமச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி முகாமைத்துவச் சபை உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றனர். முகாமைத்துவச் சபை பின்வருமாறு 07 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் சட்ட உத்தியோகத்தர் முகாமைத்துவச் சபையின் செயலாளராகச் செயற்படுவார்.

- **கைத்தொழில் அமைச்சின் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி.**
- **சூழல் அமைச்சின் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி.**
- **புவிச்சரிதவியல், சுரங்க அகழ்வு துறை, வர்த்தக முகாமைத்துவம், நிதி, சட்டம் போன்ற துறைகள் தொடர்பாக அனுபவம் உள்ள அல்லது அது தொடர்பான அறிவுள்ளவரென அமைச்சரினால் கருதப்படும் மூன்று பேர்.**
- **நிதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி அமைச்சரினால் நியமிக்கப்படும் ஒருவர்.**
- **புவிச்சரிதவியல், சுரங்க அகழ்வுப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம்.**

சபைக் கூட்டங்கள்

முகாமைத்துவச் சபை மாதாந்தம் கூடுவதுடன் சுரங்கப் பணியகத்தினால் பொருத்தமானதெனக் கருதப்படும் சந்தர்ப்பங்களில் பொருத்தமானதெனக் கருதும் விதத்தில் மேலதிகக் கூட்டங்கள் நடத்தப்படும்.

2018 நிதி ஆண்டில் 14 முகாமைத்துவச் சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. எடுக்கப்பட்ட தீர்மானங்கள், முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் மற்றும் முன்வைக்கப்பட்ட மாற்றுக் கருத்துக்கள் என்பவற்றை உள்ளடக்கி முகாமைத்துவச் சபைச் செயலாளர் தனது ஒழுங்குப் பத்திரத்தைத் தயாரிப்பார். அத்துடன் கூட்டக் குறிப்புக்கள் அடங்கிய ஆவணமும் தயார் செய்யப்படும். அவை முகாமைத்துவச் சபைக் கூட்டம் நடைபெறுவதற்குள்ள திகதிக்கு முன்னர் 3 கடமை நாட்களுக்குள் பணிப்பாளர் சபைப் பத்திரங்களுடன் அனைத்து உறுப்பினர்கள் மத்தியிலும் வினியோகிக்கப்படும். நாளாந்தம் நடைபெறும் ஒவ்வொரு கூட்டங்களின் போதும் பணியகத்தின் செயற்திறன் மற்றும் நிதிச் செயற்பாடு என்பன உள்ளடங்கிய பல்வேறு பிரிவுகள் தொடர்பாகப் பணியகத்தின் ஒவ்வொரு பிரிவுகளுக்குமுரிய தலைமை அதிகாரிகள் முகாமைத்துவச் சபையிடம் விளக்கமளிக்கப்படும்.

கலந்துரையாடல்களின் போது தமது தொழிற்துறை சார்ந்த கருத்துக்களை முன்வைத்தல் மற்றும் செயற்படு ரீதியிலான பங்களிப்பினை வழங்குதல் மூலம் பணியகத்தின் கூட்டங்களில் கலந்து கொள்ளல் தொடர்பாகப் பணியகத்தின் முகாமைத்துவச் சபையானது பெரும் பணியினை ஆற்றிவருகின்றது.

நிதி அறிக்கை

புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1.1 அறிக்கையிடும் நிறுவனம்

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் (ஜீஎஸ்எம்பீ) ஆனது 1992 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நியதிச்சட்ட நிறுவனமாகும். அதன் பிரதான வர்த்தக நிலையமானது இலக்கம் 569, எப்பிட்டமுல்ல வீதி, பிற்றகோட்டே எனும் இடத்தில் அமைந்துள்ளது. கண்டி, மாத்தறை, குருனாகல், பதுளை, இரத்தினபுரி, அனுராதபுரம், அம்பாறை, மொனராகலை, அம்பாந்தோட்டை, திருகோணமலை, களுத்துறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கம்பஹா, பொலனறுவை மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ள 16 பிராந்திய அலுவலகங்களுடன் ஜீஎஸ்எம்பீ தற்போது இயங்கி வருகின்றது.

1.1.2 துணை மற்றும் உப துணை நிறுவனங்கள்

புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியக தொழில்நுட்பச் சேவைகள் தனியார் லிமிடெட் வழங்கிய பங்கு மூலதனத்தில் 66% (400,000 பங்குகள்) பணியகம் முதலீடு செய்துள்ளது. மேலும், குறிப்பிட்ட பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலக்கம் 190/ஏ, ஸ்டான்லி திலக்கரத்ன மாவத்தை, நுகேகொடையில் அமைந்துள்ளது.

சந்தையில் மணல் விலையை கட்டுப்படுத்துதல் மற்றும்

ஒழுங்குபடுத்தல் என்பவற்றுக்காக வர்த்தக நடவடிக்கைகளையும் கருத்திட்ட வர்த்தக நடவடிக்கைகளையும் மேற்கொள்வது ஜி.எஸ்.எம்.பி தொழில்நுட்பச் சேவைகள் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் முதன்மை நடவடிக்கைகள் ஆகும். அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானமாக கட்டுமானத் துறைக்கு ஆதரவளிப்பதற்காக மானிய விலையில் மணல் விற்பனை செய்யப்படுவதோடு முக்கியமாக, வர்த்தக நடவடிக்கைகளுக்கான இடங்களை கம்பெனி அமைத்துமுள்ளது. தனியார் கம்பெனி தனது வாடிக்கையாளர்களுக்கான கருத்திட்டங்களாக தொழில்நுட்ப ஆதரவு சேவைகளை மேற்கொண்டுள்ளதுடன் ஜி.எஸ்.எம்.பி ஆணைக்கு உட்படாத வாடிக்கையாளர்களுக்கு ஆள்வலம் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் தொடர்பான பணிகளை வழங்குகின்றது.

ஜி.எஸ்.எம்.பி.யின் தலைவர் ஜி.எஸ்.எம்.பி தொழில்நுட்பச் சேவைகள் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் தலைவராகவும் உள்ளதுடன் ஜி.எஸ்.எம்.பி.யின் வேறு பணிப்பாளர்கள் அல்லது ஊழியர்கள் துணை நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்படமாட்டார்கள்.

1.1.3 ஒருங்கிணைந்த கணக்குகளைத் தயாரித்தல்

துணை நிறுவனத்தின் கணக்கீட்டு ஆண்டு ஆனது தாய் நிறுவனத்தின் கணக்கீட்டு ஆண்டிலிருந்து வேறுபடுகின்றது. எனவே ஒருங்கிணைந்த கணக்குகளைத் தயாரித்து சமர்ப்பிக்கக்கூடிய வகையில் ஜி.எஸ்.எம்.பியின் கணக்கு ஆண்டுடன் பொருந்தக்கூடிய வகையில் கணக்கீட்டுக் காலத்தை சட்டபூர்வமாக மாற்ற துணை நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. தாய்க் கம்பெனி, அதாவது ஜி.எஸ்.எம்.பி மற்றும் துணை நிறுவனம், அதாவது ஜி.எஸ்.எம்.பி தொழில்நுட்பச் சேவைகள் (பிரைவேட்) லிமிடெட்

ஆகிய இரண்டு நிறுவனங்களினதும் கணக்காய்வாளர்களாக கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம் இருப்பதால் துணைக் கம்பெனிக்கான கணக்கீட்டுக் காலப்பகுதியை சட்டபூர்வமாக மாற்றியமைப்பதற்காக கம்பெனிப் பதிவாளரினதும் இறைவரித் திணைக்களத்தினதும் அனுமதி கிடைக்கப்பட்டவுடன் ஒருங்கிணைந்த கணக்குகள் தயாரிக்கப்படும்.

1.1.4 வெளியீட்டுக்கான அங்கீகாரத் திகதி

நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்காக 2019 பிப்ரவரி 21 ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் அதிகாரமளிக்கப்பட்டது.

1.1.5 பிரதான நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

இலங்கையின் முறையான வரைபடமாக்கல் மற்றும் புவியியல் வரைபடங்களைத் தயாரித்தல், இலங்கையின் கனிய வளங்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல், அத்தகைய கனிமங்களை அகழ்வு செய்தல், பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதிக்காக வணிக ரீதியான சாத்திய வளத்தினை மதிப்பீடு செய்தல், அனுமதிப்பத்திரங்களை வழங்குவதன் மூலம் கனிம ஆய்வு மற்றும் அகழ்வு, கனிம பதப்படுத்தல், வர்த்கம் மற்றும் ஏற்றுமதி செய்தல் என்பவற்றை ஒழுங்குபடுத்தல், வர்த்தக அடிப்படையில் கனிமங்களைப் பரித்தெடுத்தல் மற்றும் உற்பத்தி செய்தல், மேம்படுத்துதல் என்பவற்றுக்காக பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனைகளை வழங்குதல், சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பெற்றுக்கொள்ளப்படும் தகவல்கள் மற்றும் தரவுகள் என்பவற்றை பொருத்தமான ஊடகங்களில் பிரச்சாரம் செய்தல், பொறியியல்சார் புவியியல் தொடர்பான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பொறுப்பேற்றல் மற்றும்

புவியியல் அபாயங்கள் மற்றும் பேரழிவுகள் தொடர்பாக ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

1.1.6 தயாரிப்பின் அடிப்படை

(அ) இணக்கக் கூற்று

நிதிக் கூற்றுக்களில் நிதிநிலை அறிக்கை, விரிவான வருமான அறிக்கை, உரிமை மாற்றல் கூற்று, பணப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ஆகியவை அடங்கும். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின்படி இந்த கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) அளவீட்டுக்கான அடிப்படை

தொடர்புடைய குறிப்புகளில் சீர் மதிப்புப் பெறுமதிக்கான பொருத்தமான வெளிப்பாடுகள் செய்யப்படும் சந்தர்ப்பங்களைத் தவிர, வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(இ) ஒப்பீட்டுத் தகவல்கள்

நடப்புக் காலத்திற்கான நிதிக் கூற்றுக்கள் பற்றிய புரிதலை மேம்படுத்துவதற்கும், காலப் பகுதிகளுக்கு இடையிலான ஒப்பீடுகளை மேம்படுத்துவதற்குமாக நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள அனைத்துத் தொகைகளுக்கும் கடந்த காலத்தைப் பற்றிய அளவுசார், விவரிப்பு மற்றும் விளக்கத் தகவல்கள் உள்ளிட்ட ஒப்பீட்டுத் தகவல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

துறைமுக நகரத்திற்கான அரசுரிமை செலுத்தல்கள் மற்றும்

திறைசேரி அரசுரிமை செலுத்தல்கள் முன்னர் நிதிநிலை அறிக்கையில் தடுத்துவைத்தல் வருவாயின் கீழ் சீர்செய்யப்பட்டன. இருப்பினும், அது நிதி செயலாற்றுகை பற்றிய கூற்றில் சீர்செய்யப்பட வேண்டுமென கணக்காய்வாளர் தலைமையதிபதி தெரிவித்திருந்தார். எனவே, இது தொழிற்பாட்டுச் செலவுகளின் கீழ் சீர்செய்யப்பட்டுள்ளது. அதன்படி, மீண்டும் குறிப்பிடப்பட்ட ஒப்பீட்டுத் தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

	2017 உண்மையான (மீள்குறிப்பிடப்பட்ட)	2017
	ரூ	ரூ
வருமானம்	5,188,535,575.16	5,188,535,575.16
ஏனைய வருமானம்	100,148,439.17	100,148,439.17
தொழிற்பாட்டுச் செலவினம்	(325,780,790.51)	(4,391,480,394.31)
நிருவாகச் செலவினம்	(415,920,677.96)	(415,920,677.96)
தொழிற்பாட்டு இலாபம்	**4,546,982,545.86**	**481,282,942.06**
தேறிய நிதி வருமானம்	281,010,362.65	281,010,362.65
வரிக்கு முந்திய இலாபம்	**4,827,992,908.51**	**762,293,304.71**
வருமானவரி செலவினம்	75,714,400.00	75,714,400.00
வருடத்திற்கான இலாபம்	**4,752,278,508.51**	**686,578,904.71**

கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனத்துக் காலப்பகுதிகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் 1, 11 மற்றும் 111 ஆகிய தொகுதிகள் அறிக்கையிடும்போது தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களில் விடயங்கள் முன்வைக்கப்படுதல் அல்லது வகைப்படுத்தப்படுதல் என்பன திருத்தப்பட்டபோது, ஒரு சிறந்த முன்வைத்தலை மேற்கொள்வதற்காக தற்போதைய

நாணயங்களுக்கு ஏற்ப ஒப்பீட்டுத் தொகைகளும் மீண்டும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. எனவே நிலையான சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் உரிமை முதல் வகைப்படுத்தல் தவறுகள் இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் திறைசேரி வழிகாட்டல்கள் என்பவற்றின் பிரகாரம் சரிசெய்யப்பட்டுள்ளன.

(ஈ) நிதிசார் மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்திற்கான தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பண நாணயமாகிய இலங்கை ரூபாவினால் இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை ரூபாவினால் வழங்கப்பட்டுள்ள அனைத்து நிதிசார் தகவல்களும் வேறு வகையில் குறிப்பிடப்படாத பட்சத்தில், அண்மித்த ரூபாவிற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

(உ) மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்கள் பயன்படுத்தப்படுதல்

பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் மூலம் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் மதிப்பீடுகள் என்பவற்றுக்கான அறிக்கையிடப்பட்ட தொகைகள் பயன்படுத்தப்படுதல் மீது தாக்கம் ஏற்படுத்தும் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்வதற்காக முகாமைத்துவத்தைத் தேவைப்படுத்துகின்றன. மதிப்பீடு மற்றும் தீர்மானங்கள் என்பவற்றிலிருந்து உண்மையான பெறுபேறுகள்

மாற்றமடையலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை ஊகங்கள் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். சிராய்வானது குறிப்பிட்ட காலப்பகுதியை மட்டும் பாதிக்குமானால் அல்லது சீராய்வு காலப்பகுதி மற்றும் எதிர்கால காலப்பகுதிகளை பாதிக்குமானால், நிகழ்கால மற்றும் எதிர்கால காலப்பகுதி ஆகிய இரண்டினையும் சீராய்வு பாதிக்குமானால் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான சீராய்வுகள் திருத்தப்படும்.

நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகள் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தும் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்துதல் சம்பந்தமான முக்கியமான தீர்மானங்கள், நிச்சயமற்ற தன்மைகள், தனித்துவமான மதிப்பீட்டுத் துறைகள் பற்றிய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் உள்ளடக்கப்படுகின்றன.

1.1.7 நிதிக் கூற்றுக்களில் வரவு செலவுத்திட்ட தகவல்களை வழங்குதல்

ஆண்டுக்காக பணிப்பாளர் சபையால் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டமானது குறித்த வரவுசெலவுத்திட்டத்தில் நிதியை மீண்டும் ஒதுக்க வேண்டியதன் காரணமாகவும், சில சந்தர்ப்பங்களில் பணியகத்தின் செயற்பாடுகளை மேற்கொள்ள எடுக்கப்பட்ட முடிவுகளின் காரணமாகவும் திருத்தப்பட்டது.

1.2 சொத்துக்களும் அவற்றுக்கான மதிப்பீட்டின் அடிப்படையும்

1.2.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

(அ) இனங்காணலும் அளவீடும்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் அல்லது அவற்றின் சீர்மதிப்பிலிருந்து திரண்ட தேய்மானம் அல்லது சேத இழப்பு நட்டங்கள் கழிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளன.

ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள பத்தரமுல்லை மற்றும் ஒருகொடவத்தையில் அமைந்துள்ள சொத்துக்கள் அமைச்சரவை முடிவின் பிரகாரம் கணக்கீட்டு வருடத்தில் சீர்செய்யப்பட்டன.

அவ்வகையில் பொறி மற்றும் இயந்திரங்கள், துளையிடும் உதிரிப்பாகங்கள் மற்றும் கள உபகரணங்கள் ஆகியவற்றின் கீழ் முன்னர் துளையிடுதல் மற்றும் பிற நுகர்வு பொருட்கள் காட்டப்பட்டமையானது ஒரு வகைப்படுத்தல் தவறு என்பதுடன் நடப்பு நிதியாண்டில் நடைமுறைச் சொத்துக்கள் "துளையிடுதல் மற்றும் பிற நுகர்வுப் பொருட்கள்" என்பதன் கீழ் மீண்டும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

நிலையான சொத்துகளின் குறைந்தபட்ச பெறுமதியை 5,000 ரூபாவாக ஜி.எஸ்.எம்.பி கருதுவதோடு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ள அனைத்துப் பொருட்களும் ஆரம்பத்தில் திரண்ட தேய்மானம் அல்லது சேத இழப்புகள் கழிக்கப்பட்டு கிரயத்தில் பதிவு செய்யப்படுகின்றன. ஒரு சொத்தின் குறிப்பிடத்தக்க கூறுகள்

தனித்தனியாக அடையாளம் காணப்பட்டு தேய்மானம் செய்யப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் குறிப்பிடத்தக்க பகுதிகள் கால இடைவெளிகளில் மாற்றப்பட வேண்டியிருக்கும் போது, அந்த நிறுவனம் மாற்றப்பட்ட பகுதியை ஏற்பிசைவிலிருந்து விலக்கி, புதிய பகுதியை அதன் சொந்த பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மானத்துடன் ஏற்பிசைவு செய்கின்றது. ஏனைய அனைத்து திருத்த மற்றும் பராமரிப்புச் செலவுகளும் அவை மேற்கொள்ளப்பட்ட விதத்தின்படி வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

(ஆ) கிரயம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்தில் அதன் கொள்முதல் விலை மற்றும் குறிப்பிட்ட சொத்தினை அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் பயனைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பணி நிலைக்குக் கொண்டு வருவதற்கான எந்தவொரு நேரடியாகக் கூறத்தக்க செலவும் அடங்கும்.

சொத்துக்களின் ஈட்டல் திறனைத் தொடர்ச்சியாகப் பேணிச் செல்லல் அல்லது அதிகரிப்பதற்காக நிரந்தர இயல்புடைய சொத்துக்களைப் பெறுதல், விரிவாக்குதல் அல்லது மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான அடுத்தடுத்த செலவுகள் மூலதனச் செலவாகக் கருதப்படுகின்றன.ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றில் உள்ளடங்கியுள்ள ஒரு கூறின் எதிர்கால பொருளாதார நன்மைகள் ஜி.எஸ்.எம்.பி கிடைக்கப்படுமானால் அதன் கிரயத்தினை நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியுமானால் மட்டும் முக்கியமான பரிசோதனை மற்றும் பழுதுபார்ப்புச் செலவுகள் உள்ளிட்டதாக தனித்தனியாக கணக்குப்பதியப்படும். மேற்படி கூறினை மீள்நிலைபடுத்தலுக்கான செலவுகள் மூலதனமாக்கப்படும்.

(இ) மீள்நிலைப்படுத்தல் கிரயம்

முதலில் மதிப்பிடப்பட்ட செயல்திறனிலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதார நன்மைகளை மீள்நிலைப்படுத்துவதற்காக அல்லது பேணிச் செல்வதற்காக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை பழுதுபார்ப்பது அல்லது பராமரிப்பதில் ஏற்படும் செலவானது செலவு மேற்கொள்ளப்படும்போது ஒரு செலவாக இனங்காணப்படுகின்றது.

(ஈ) தேர்ந்தெடுக்கப்பட்ட சில வகை சொத்துக்களின் மீள்மதிப்பீடு

தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த நிலையான சொத்துக்களை மட்டும் மீள் மதிப்பீடு செய்ய பணியகம் முடிவு செய்ததுடன் ஆரம்பத்தில் கள உபகரணங்கள், பொறி மற்றும் இயந்திரங்கள் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதான மதிப்பீட்டாளரால் மீள் மதிப்பீடு செய்யப்பட்டன.

எவ்வாறாயினும், மதிப்பீடு செய்யப்பட்ட பொருட்களின் வகைப்படுத்தல் விபரமொன்றை எங்களுக்கு அனுப்புமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு நாங்கள் எழுதியுள்ளோம். இந்த கணக்கீட்டு ஆண்டின் இறுதியில் ஒரு சுருக்கம் மட்டுமே ஜி.எஸ்.எம்.பி.க்கு அனுப்பப்பட்டிருப்பதால், அத்தகைய விவரங்கள் கிடைத்த பின்னர் மட்டுமே மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் பற்றிய குறிப்புக்களை கணக்குப் புத்தகங்களில் உள்ளடக்க முடியும்.

எதிர்காலத்தில் இதுபோன்ற சொத்துக்களை ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒருமுறை மீள் மதிப்பீடு செய்வதனை ஒரு கொள்கையாக ஜி.எஸ்.எம்.பி ஏற்றுக் கொள்வதோடு அடுத்த

நிதியாண்டின்போது மோட்டார் வாகனங்களையும் மற்றும் தொடர்பாடல் சாதனங்களையும் அது மீள் மதிப்பீடு செய்யும்.

(இ) தேய்மானம்

பின்வரும் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தின் மீது இறையிலி நிலங்களைத் தவிர அனைத்து ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்தினைப் பதிவழிப்பதற்காக அவற்றுக்கான கிரயத்தின் மீது நேர் கோட்டு முறையின் அடிப்படையில் விரிவான வருமான கூற்றிற்கு தேய்மானம் அறவிடப்படும்.

ஒரு சொத்தின் தேய்மானம் ஆனது அது பயன்பாட்டிற்குக் கிடைக்கும்போது தொடங்குவதுடன் ஒரு சொத்து விற்பனைக்கு வைத்திருப்பதாக வகைப்படுத்தப்பட்ட திகதி மற்றும் ஒரு சொத்து குறிப்புக்களில் இனங்காணப்படுதல் நிறுத்தப்படுகின்ற திகதி ஆகிய இரண்டு திகதிகளில் முதலில் வரும் திகதியில் தேய்மானம் நிறுத்தப்படும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு பொருள் அகற்றப்பட்டவுடன் அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது அகற்றப்படும். சொத்துக்கள் அகற்றப்படுகின்ற ஆண்டின் விரிவான வருமானக் கூற்றில் சொத்துக்களை அகற்றுவதன் மீதான ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் உள்ளடக்கப்படும்.

பயன்படுத்தப்படும் பிரதான வருடாந்த விகிதங்கள்:

சொத்து வகை	பயனுள்ள ஆயுட்காலம்	தேய்மானத்தின் வீதம்
கட்டிடங்கள்	20 வருடங்கள்	5%
பொறி & இயந்திரங்கள்	8 வருடங்கள்	12.5%
ஆய்வுகூட உபகரணங்கள்	5 வருடங்கள்	20%
மோட்டார் வாகனங்கள்	5 வருடங்கள்	20%
தளபாடங்களும் பொருத்திகளும்	10 வருடங்கள்	10%
அலுவலக உபகரணங்கள்	5 வருடங்கள்	20%
கள உபகரணங்கள்	5 வருடங்கள்	20%
வரைபட உபகரணங்கள்	5 வருடங்கள்	20%
தொடர்பாடல் உபகரணங்கள்	8 வருடங்கள்	12.5%
நூலக நூல்களும் வரைபடங்களும்	20 வருடங்கள்	5%

1.2.2 இடம்பெற்று வரும் வேலைகள்

வெரெல்லவத்த தளத்தின் கட்டுமானப் பணிகள், பிற்றகோட்டையில் ஆய்வகக் கட்டடப் பணிகள், அநுராதபுரயில் உள்ள பிராந்திய அலுவலகம், இரத்னபுரி பிராந்திய அலுவலகப் பணிகள் மற்றும் பொலனறுவை பிராந்திய அலுவலகப் பணிகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. ஆகவே, கணக்காண்டின் இறுதியில் ஒவ்வொரு கட்டுமானத் தளத்திலும் பூர்த்தி செய்யப்பட்ட சதவீதத்தையும் பெறுமதியையும் உறுதிப்படுத்தும் சான்றிதழொன்றை தகுதிவாய்ந்த சிவில் பொறியியலாளர் திரு. கே.ஏ. முனசிங்க (பட்டயப் பொறியாளர்) அவர்களிடமிருந்து நாம் பெற்றுக்கொண்டுள்ளோம்.

1.2.3 பொருட் பட்டியல்

குறைந்த கிரயம் மற்றும் நிகர தேறிய பெறுமதி மீது சரக்குத் தொகைகள் குறிப்பிடப்படுகின்றன. நிகர தேறிய பெறுமதி என்பது மதிப்பிடப்பட்ட பூர்த்தி செய்வதற்கான கிரயம் மற்றும் விற்பனைச் செலவுகள் கழிக்கப்பட்ட சாதாரண வணிக நடவடிக்கைகளின்போது மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனை விலையாகும். வழக்கற்றுப்போன மற்றும் மெதுவாக நகரும் பொருட்களின் சேதம் கழிக்கப்பட்ட பொருட்களைக் கைப்பற்றுதல் மற்றும் அவற்றை தற்போதுள்ள இடத்திற்கும் நிலைமைக்கும் கொண்டுவருதல் என்பவற்றுக்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவினம் கிரயத்தில் உள்ளடங்கும். ஜி.எஸ்.எம்.பி இருப்புக்களை வழங்கும்போது முதல் கிடைக்கப்படும் பொருட்களை முதல் விநியோகிக்கும் முறையைப் பயன்படுத்துகின்றது.கடந்த ஆண்டு சில துளையிடல் மற்றும் நுகர்வுப் பொருட்கள் "நுகர்வு பொருட்கள்" என்பதன் கீழ் தவறாக வகைப்படுத்தப்பட்டன என்பதும் தெரியவந்துள்ளதுடன், குறிப்பிட்ட வகைப்படுத்தல் தவறு இப்போது சரி செய்யப்பட்டுள்ளது.

1.2.4 சொத்துக்களின் சேத இழப்பு

ஏதேனும் சேத இழப்புத் தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ளதா என்பதை தீர்மானிக்க ஒவ்வொரு சொத்தும் பற்றிய அறிக்கையிடல் தேதியிலும் சொத்துக்களை முன்னெடுத்துச் செல்லும் தொகை மீளாய்வு செய்யப்படும். அத்தகைய ஏதேனும் சேத இழப்புத் தொடர்பாக பதிவாகும் பட்சத்தில், சொத்தின் வசூலிக்கக்கூடிய தொகை மதிப்பீடு செய்யப்படும். ஒரு சொத்து அல்லது பணத்தை உருவாக்கும் அலகு முன்னெடுத்துச் செல்லப்படும் தொகை அதன் வசூலிக்கக்கூடிய தொகையை விட கடந்து செல்லுமானால் ஒரு சேத இழப்பு இனங்காணப்படும். வசூலிக்கக்கூடிய தொகையை தீர்மானிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மதிப்பீடுகளில் மாற்றம் ஏற்பட்டால் சேத இழப்பு எதிர்மறையாகும்.

1.2.5 நிதிச் சொத்துக்கள்

குறிப்பிட்ட தொகைகளை ஈடுசெய்ய ஜி.எஸ்.எம்.பி.க்கு சட்டப்பூர்வ உரிமை உள்ள மற்றும் சொத்தினை கைகூடச் செய்து பொறுப்புகள் தீர்க்கப்படுவது ஒரே தடவையில் மேற்கொள்ளப்படுதல் அல்லது நிகர அடிப்படையில் தீர்க்கப்படுதல் ஆகிய இரண்டில் ஒன்றினை மேற்கொள்வதற்குக் கருதும் சந்தர்ப்பத்தில் மற்றும் சந்தர்ப்பத்தில் மட்டும் நிதிநிலைக் கூற்றில் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தீர்க்கப்பட்டு தேறிய தொகை சமர்ப்பிக்கப்படும்.

ஜி.எஸ்.எம்.பி. இன் நிதி சொத்துக்களில் பணம் மற்றும் குறுகிய கால முதலீடுகள் மற்றும் வர்த்தகம் மற்றும் பிற வரவேண்டியவைகள் அடங்கும்.

(அ) கடன்களும் வரவேண்டியவைகளும்

கடன் மற்றும் வரவேண்டியவைகள் என்பதில் வர்த்தக வரவேண்டியவைகள், பணியாளர் கடன்கள், வைப்புத்தொகைகள், முற்பணம், பிற வரவேண்டியவைகள் மற்றும் காசும் காசுக்குச் சமமானவைகளும் உள்ளடங்கும்.

ஒப்பந்தத் தொகையின் மீதுள்ள பணியாளர் கடன்களை பதிவு செய்து சமர்ப்பிக்க ஜி.எஸ்.எம்.பி தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகின்றது.

(ஆ) முதிர்வடையும் வரை தடுத்து வைக்கப்பட்ட முதலீடுகள் (HTM)

நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய செலுத்தல்கள் மீது நிலையான முதிர்வுகளுடன் கூடிய நேரிலி அல்லாத நிதிச் சொத்துக்களை முதிர்வடையும் வரை தடுத்துவைப்பதற்கு ஜி.எஸ்.எம்.பி.க்கு துல்லியமான எண்ணம் அல்லது இயலுமை உள்ளபோது முதிர்வடையும் தடுத்துவைக்கப்பட்டவைகளாக வகைபடுத்தப்படும். அரசாங்கப் பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகள் எச்.ரீ.எம் முதலீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1.2.6 **நிதிச் சொத்துக்களின் சேத இழப்பு**

ஒவ்வொரு அறிக்கையிடல் தேதியிலும் ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக்களின் ஒரு தொகுதி சேத இழப்புக்கு உள்ளாகியுள்ளதா என்பதற்கு ஏதேனும் விடய அடிப்படையிலான சான்றுகள் உள்ளதா என ஜீ.எஸ்.எம்.பீயால் மதிப்பீடு செய்யப்படுவதோடு, அத்தகைய சேத இழப்பு ஏற்பட்டிருப்பின், சொத்தின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள எதிர்கால நிதிப் பாய்ச்சலின் தற்போதைய பெறுமதி என்பவற்றுக்கு இடையிலான வித்தியாசத்தை எடுத்துக்கொள்வதன் மூலம்

சேத இழப்பு கணக்கிடப்படும்.

1.2.7 காசும் காசுக்குச் சமமானவைகளும்

கையில் உள்ள பணம் மற்றும் வங்கியில் உள்ள வைப்பு ஆகியவை காசும் காசுக்குச் சம்மானவைகளில் அடங்கும்.

1.3 பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

நிதி நிலைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைபடுத்தப்பட்டிருப்பது கோரிக்கை விடுக்கப்படக்கூடிய சந்தர்ப்பத்தில் அல்லது அறிக்கையிடல் தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய பொறுப்புக்களாகும். அறிக்கையிடல் தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்த வேண்டிய நிலுவைகள் நடைமுறையல்லா பொறுப்புக்கள் ஆகும்.

இந்த நிதிநிலைக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் அறியப்பட்ட அனைத்து பொறுப்புகளும் கணக்கிடப்பட்டுள்ளன. கடந்த நிகழ்வின் விளைவாக ஜி.எஸ்.எம்.பி.க்கு சட்டரீதியான அல்லது அமைப்பு வழி பொறுப்பு காணப்படுகின்ற மற்றும் பொறுப்பினைத் தீர்ப்பதற்கு பொருளாதார நன்மைகள் வெளியில் செல்ல வேண்டிய சந்தர்ப்பத்தில் ஏற்பாடுகளும் பொறுப்புகளும் இனங்காணப்படுகின்றன.

1.3.1 அறவிடமுடியாக் கடன்களும் ஐயக் கடன்களுக்குமான ஏற்பாடுபாடுகள்

கடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதனை பணியகம் மட்டுப்படுத்தியுள்ள போதிலும் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் மீது பொறுப்பேற்கப்படுகின்ற கருத்திட்டப் பணிகள் தொடர்பில் நீண்டகாலமாக ஜி.எஸ்.எம்.பிக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தொகை காணப்படுவதோடு பின்வரும் அளவுகோல்களைக் கொண்டு செலுத்தப்படாதுள்ள

அத்தகைய தொகைகளுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடனாளிகளால் செலுத்தப்படாதுள்ள தொகை	ஒரு வருடத்திற்கும் குறைவான காலமாக செலுத்தப்படாதுள்ள	ஒரு வருடத்திற்கு மேற்பட்ட மற்றும் இரண்டு வருடங்களுக்கு குறைந்த காலமாக செலுத்தப்படாதுள்ள	இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட மற்றும் மூன்று வருடங்களுக்கு குறைந்த காலமாக செலுத்தப்படாதுள்ள	மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட மற்றும் நான்கு வருடங்களுக்கு குறைந்த காலமாக செலுத்தப்படாதுள்ள	ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செலுத்தப்படாதுள்ள
ஏற்பாட்டின் அளவு	ஏற்பாடுகள் இல்லை	கடனாளிகள் செலுத்த வேண்டிய தொகையில் 40%	கடனாளிகள் செலுத்த வேண்டிய தொகையில் 50%	கடனாளிகள் செலுத்த வேண்டிய தொகையில் 60%	100% வீதமான ஏற்பாடுகள்

1.3.2 கொடைகள்

1.3.2.1 கொடைகளை கணக்குப்பதிதல்

ஜி.எஸ்.எம்.பி.யினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை ஈடுசெய்யும் கொடைகள் குறித்த செலவுகள் இனங்காணப்பட்ட அதே காலகட்டத்தில் விரிவான வருமானக் கூற்றில் வருவாயாக இனங்கானப்படுகின்றன. ஒரு சொத்தின்

கிரயத்தினை ஜி.எஸ்.எம்.பி.க்கு ஈடுசெய்யும் கொடைகள் தொடர்புடைய சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் குறித்த முறையான அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் இனங்கானப்படுகின்றன.

1.3.3 பணியாளர் நன்மைகள்

(அ) இளைப்பாறல் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்

தகுதிவாய்ந்த அனைத்து ஊழியர்களுக்கும் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள நன்மை திட்டத்தை ஜிஎஸ்எம்பி ஏற்றுக்கொண்டுள்ளது. நன்மைத் திட்டத்திற்காக நிதியளிக்கப்படவில்லை. பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 - பணியாளர் நன்மைகளின் வழிகாட்டுதலை கருத்திற்கொண்டு ஜிஎஸ்எம்பியினால் பணிக்கொடைக்காக நிதி ஏற்பாடுகள் கணக்கிடப்படுகின்றது.

பொதுவாக வயது, சேவை ஆண்டுகள் மற்றும் இழப்பீடு போன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகளைச் சார்ந்து வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்களானவை ஒரு ஊழியர் இளைப்பாறும்போது பெறும் நன்மையின் அளவை மதிப்பிடுகின்றன.

(ஆ) வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது ஒரு வேலைவாய்ப்புக்குப் பிந்தைய திட்டமாகும் என்பதோடு இதன்கீழ் ஒரு நிறுவனம் நிலையான பங்களிப்பை புறம்பானதொரு தனி நிறுவனத்திற்குச் செலுத்துகின்றது. மேலும் கூடுதல் தொகையை செலுத்த சட்டரீதியான அல்லது அமைப்பு வழி பொறுப்பு ஏற்படமாட்டாது. வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்காக பங்களிப்புத் தொகை

செலுத்துவதற்கான பொறுப்புகள் அப்பொறுப்புகள் ஏற்படும் வகையில் மற்றும் ஏற்படும்போது விரிவான வருமானக் கூற்றில் செலவாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

(இ) ஊழியர் சேமலாப நிதி

ஜி.எஸ்.எம்.பி மற்றும் ஊழியர்கள் என்போர் ஊழியரின் சம்பளத்தில் முறையே 12% மற்றும் 10% ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிக்கின்றனர்.

இருப்பினும், ஊழியர்களின் பங்களிப்புகளின் சரியான விகிதத்தை பேணிச் செல்வதற்காக தொழில் திணைக்களத்துடன் ஜி.எஸ்.எம்.பி.கலந்துரையாடல் நடத்தியுள்ளது.

(ஈ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்திலும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ஜி.எஸ்.எம்.பி பங்களிக்கின்றது.

1.3.4 வர்த்தக மற்றும் பிற செலுத்த வேண்டியவை

வர்த்தக மற்றும் பிற செலுத்த வேண்டியவை கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன.

1.3.5 வரி விதிப்பு

2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டம் ஆகியவற்றின் படி வரிவிதிப்பு நோக்கங்களுக்காக சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்ட வகையில் ஆண்டிற்கான இலாபத்தின் அடிப்படையில் வரிவிதிப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 2018.04.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தமது மொத்த வருவாய் மீது பணியகம் வருமான வரி செலுத்த வேண்டிய பொறுப்புக்கு

உட்படுவதோடு நடைமுறைக்கு வரும் திகதிக்குப் பின்னர் வருவாய்க்கு 28% என்ற விகிதத்தில் வரிகள் கணக்கிடப்படும்.

பொறுப்புக்கு உள்ளாகும் வருமானத்தின் மீது பொருளாதார சேவைக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். ஜி.எஸ்.எம்.பி அனைத்து ஈ.எஸ்.சி பொறுப்புக்களையும் செலுத்தியுள்ளது. வருமான வரி பொறுப்புக்கு எதிராக ஈ.எஸ்.சி எதிரீடு செய்யப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.எம்.பி பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தும் (வற்) பொறுப்புக்கு உட்படுவதோடு பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட்டுள்ளது. செலுத்த வேண்டிய வற் மற்றும் / அல்லது மீட்டெடுக்கக்கூடிய தொகைகள் விரிவான வருமானக் கூற்றில் பிரதிபலிக்கின்றன.

1.3.6 பிற்போடப்பட்ட வரிவிதிப்பு

ஐந்தொகை தேதிக்கு பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு கிடையாது.

1.3.7 வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்

கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் நடைமுறையிலிருந்த அந்நியச் செலாவணி விகிதங்கள் மீது அனைத்து அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களும் அறிக்கையிடல் நாணயமாகிய இலங்கை ரூபாவாக மாற்றப்படுகின்றன.

1.3.8 மூலதன கடப்பாடுகள் மற்றும் நிகழ்தகு (பரிப்புகள்)பொறுப்புகள்

நிகழ்தகு பொறுப்புகள் என்பது சாத்தியமான கடப்பாடுகளாகும் என்பதோடு பொருளாதார நன்மைகளை மாற்றுவது சாத்தியமில்லாத அல்லது நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியாத அவற்றின் இருப்பு நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள்

அல்லது நிகழ்கால பொறுப்புக்கள் மூலம் மட்டும் உறுதிபடுத்தப்படுகின்றன. GSMB இன் மூலதன கடப்பாடுகள் மற்றும் நிகழ்தகு பொறுப்புகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி வெளிப்படுத்தப்படுகின்றன

1) உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கடந்த ஆண்டுகளில் வரித் தாமதங்கள் / வற் வரி ஏய்ப்புகளுக்கான மதிப்பீடுகள் / அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. ஆயினும், இந்த விடயம் தொடர்பாக ஜி.எஸ்.எம்.பி. மேன்முறையீடு செய்துள்ளது. இது இன்னும் பேச்சுவார்த்தைக்கு உட்பட்டுள்ளதால், நாங்கள் சரியான பொறுப்பினை மதிப்பிடும் நிலையில் இல்லை.

2) ஜி.எஸ்.எம்.பி 2010-2011 காலகட்டத்தில் பதுளை பிராந்திய அலுவலகத்திற்கான வளாகத்தை வாடகைக்குப் பெற்றிருந்ததோடு அங்கு தீ விபத்து ஏற்பட்டது. ஜி.எஸ்.எம்.பியின் கவனக்குறைவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டது என்பது காணி உரிமையாளரின் கருத்தாக அமைந்ததோடு 1,136,348 ரூபாய் இழப்பீடு கோரி வழக்கு இலக்கம் M 7523 இன் கீழ் பதுளை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்துள்ளார். எவ்வாறாயினும், தீ விபத்தால் கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதங்களுக்கு ஜி.எஸ்.எம்.பி பொறுப்பல்ல என்பது சட்டமா அதிபரின் கருத்தாக அமைந்துள்ளதோடு இந்த வழக்கின் நடவடிக்கைகள் இன்னும் இடம்பெற்று வருவதால், கணக்கப் புத்தகங்களில் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.

1.4 **விரிவான வருமானக் கூற்று**

1.4.1 வருமானம் இனங்காணப்படுதல்

ஜி.எஸ்.எம்.பி.க்கு பொருளாதார நன்மைகள் வரக்கூடிய மற்றும் அதை நம்பத்தகுந்த வகையில் அளவீடு செய்யக்கூடிய அளவிற்கு வருவாய் இனங்காணப்படும்.

வர்த்தக தள்ளுபடிகள் மற்றும் விற்பனை வரிகளின் பெறப்பட்ட அல்லது பெறத்தக்க நிகரத்தின் சீர் மதிப்பில் வருவாய் அளவிடப்படுகின்றது. வருவாயை இனங்காணபதற்கான நோக்கத்திற்காக பின்வரும் குறிப்பிட்ட அளவுகோல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(ஆ) வட்டி வருமானம்

சொத்துக்களின் பயனுள்ள வருமானத்தைக் கருத்திற்கொள்ளும் நேர விகித அடிப்படையில் வட்டி வருமானம் இனங்கானப்படுகின்றது.

(இ) வேறு வருமானம்

பிற வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்கானப்படுகின்றது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் பிற நடைமுறையல்லா சொத்துக்களை அகற்றுவதன் மூலம் ஏற்படுகின்ற வருவாய் இயல்பின் நிகர இலாபங்கள் மற்றும் நட்டங்கள் அவை அகற்றப்படும்போது கிடைக்கப்படுகின்ற தொகையிலிருந்து சொத்துக்கான முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி மற்றும் தொடர்புடைய விற்பனை செலவுகள் கழிக்கப்பட்டு கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(ஈ). அரச கொடைகள்

அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான அரசாங்கக் கொடைகள் வருவாய் மற்றும் பிற்போடப்பட்ட வருவாயின் தன்மையைக் கருத்தில் கொண்டு வருமான அணுகுமுறையின் கீழ் கணக்கிடப்படுகின்றன.

(உ) அரசுரிமை வருமானம்

துறைமுக நகர அரசுரிமை என்பது மாநகர, மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சு ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு புத்தக குறிப்பீடு இடப்படுதல் என்பதோடு மீளாய்வாண்டில் இது தொடர்பாக திரவநிலை நிதி கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் இடம்பெறவில்லை.

(ஊ) முதலீட்டு வருமானம்

ஆண்டில் ஒரு பங்கிற்கு 10 ரூபாய் பங்கிலாபமாக அறிவிக்கப்பட்ட பங்கிலாப வருமானம் துணை நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெற்றது.

1.**4.2 செலவினம்**

செலவினங்களுக்கும் வருமானத்தின் விசேட பொருட்களின் ஈட்டல்களுக்கும் இடையிலான நேரடி தொடர்பின் அடிப்படையில் வருமானக் கூற்றில் செலவுகள் இனங்காணப்படுகின்றன. ஆண்டுக்கான இலாபத்தைக்

கணக்கிடும்போது வினைத்திறன்மிக்க நிலையில் வணிகத்தை நடத்துவதற்கும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை பராமரிப்பதற்கும் ஏற்படும் அனைத்து செலவுகளும் வருமானத்திற்கு செலவுச் சுமையாக அமைந்துள்ளன.

1.5 நிதிப் பாய்ச்சல் கூற்று

இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 2 க்கு அமைவாக நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

செலுத்தப்பட்ட வட்டியானது தொழிற்பாட்டு நிதிப் பாய்ச்சலாக வகைப்படுத்தப்படுவதுடன் பெறப்பட்ட வட்டியானது முதலீட்டு நிதிப் பாய்ச்சலாக வகைப்படுத்தப்படுகின்றது.

1.6 அறிக்கையிடும் தேதிக்குப் பின்னர் இடம்பெறும்

நிகழ்வுகள்

அறிக்கையிடல் தேதிக்குப் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள் ஆராய்ந்து பார்க்கப்படுவதோடு தேவையான சந்தர்ப்பங்களில் பொருத்தமான மாற்றங்கள் கணக்குகளில் செய்யப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களில் அளவுசார் சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் தேவைப்படுத்தும் எந்தவொரு சூழ்நிலையும் அறிக்கையிடும் தினத்திலிருந்து உருவாகவில்லை.

1.7 தொடர்புடைய தரப்புகளின் கொடுக்கல் வாங்கல்கள்

அறிக்கையிடல் தேதியில் எந்தவொரு பணிப்பாளரும் பணியகத்துடன் ஒப்பந்தங்கள் மற்றும் / அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தங்களில் ஆர்வம் காட்டவில்லை. இருப்பினும், ஜி.எஸ்.எம்.பி.யின் தலைவர் துணை நிறுவனத்தின் (ஜி.எஸ்.எம்.பி தொழில்நுட்பச் சேவைகள் பிரைவேட் லிமிடெட்) தலைவராகவும் உள்ளார். ஜி.எஸ்.எம்.பி.யின் மூத்த சுரங்கப் பொறியியலாளர் SLRDC யின் சபைப் பணிப்பாளராக உள்ளார்; (அதாவது ஒரு பொது நிறுவனம்)

1.7.1 கருதப்படு கிரயமாக சீர் மதிப்புப் பெறுமதி அல்லது மீள்மதிப்பீடு

கிரய முறையைப் பயன்படுத்தி இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதி நிலைக் கூற்றில் இறையிலி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் காட்டப்படுகின்றன. சீர் மதிப்புப் பெறுமதியை கருதப்பட்ட கிரயமாகப் பயன்படுத்த ஜி.எஸ்.எம்.பி தெரிவுசெய்யவில்லை.

1.7.2 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

நிதிக் கூற்றுக்களை முன்வைக்கும்போது வருடத்தில் வழங்கப்பட்ட மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட நியமங்கள் ஜி.எஸ்.எம்.பி. யினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

நிதிநிலை பற்றிய கூற்று

நிதிநிலை பற்றிய கூற்று

புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம்				
இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பகிரங்கத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பணியகத்தை தொடர்ச்சியாக கொண்டு நடத்தும் ஆற்றலைத் தீர்மானிக்கும் பொறுப்பு முகாமைத்துவத்திற்கு உரியதாகவும், முகாமைத்துவம் பணியகத்தை ஒழித்துவிடக் கருதுமாயின் அல்லது வேறு மாற்றீடு இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலன்றி இடைவிடாத தொடர்ச்சியின் அடிப்படையில் கணக்குப் பதிவு வைத்தல் மற்றும் பணியகத்தின் இடைவிடாத தொடர்ச்சிக்கு ஏற்பான தகவல்களை வெளிப்படுத்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு நிர்வாகத் தரப்பிற்கு உரியதாகும்.

2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவுக்கமைய பணியகத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை இயலச் செய்வதற்கு அதன் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்களையும் பதிவேடுகளையும் பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எழுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் எனது அபிப்பிராயம் அடங்கிய கணக்காய்வு அறிக்கையினைச் சமர்ப்பித்தல் எனது பொறுப்பாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்ந்த மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைகின்றபோதிலும், இலங்கை கணக்கீட்டு

நியமங்களுக்கு அமைவாக கணக்கீட்டு நியமங்களை மேற்கொள்ளும்போது அது எல்லா சந்தர்ப்பத்திலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்திக்கொள்வதான உறுதிப்படுத்தலாக அமையாது. மோசடிகளும் தவறுகளும் தனியாக அல்லது கூட்டாக தாக்கத்தைச் செலுத்துவதால் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் உருவாக காரணமாக அமைவதோடு, இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளர்களால் எடுக்கப்படும் பொருளாதார முடிவுகளில் தாக்கம் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

நான் தொழில் ரீதியான முடிவுடனும், தொழில் ரீதியான ஐயப்பாடுகளுடனும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை மேற்கொண்டுள்ளேன். மேலும்.

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பீடு செய்யும்போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்கீட்டு நடைமுறைகளைத் திட்டமிடுவதால் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற ஆபத்தனை தவிர்த்துக்கொள்ளுதல், போதிய மற்றும் பொருத்தமான சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படுகின்ற தாக்கத்தினைவிட மோசடி காரணமாக ஏற்படுகின்ற தாக்கம் பாரதூரமானதோடு, கூட்டுச்சதி போலியான ஆவணங்களைப் புனைதல், வேண்டுமென்றே தவறவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைத் தவிர்த்தல் மோசடி நிகழ்வதற்கு ஏதுவாகிறது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் மற்றும் நிலைமைகள் காரணமாக பணியகத்தின் தொடர்ச்சி பற்றிய பொருண்மையாக ஐயப்பாடு உள்ளதா என்பது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனதின் தொடர்ச்சி பற்றிய அடிப்படையைக் கையாள்வதன் ஏற்புடைமை தீர்மானிப்படுகின்றது. பொருண்மையாக ஐயப்பாடு உள்ளதாக நான் முடிவு செய்வேனாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு

எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், அத்தகைய வொளிப்படுத்தல்கள் போதுமானவையாக இல்லாவிடின் என்னுடைய அபிப்பிராயம் மாற்றப்பட வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சி முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டதோடு அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமான முறையிலும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ள நிர்வாக குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வாகத் தரப்புக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் தேவைப்படுத்தப்பட்டுள்ளதற்கமைய, எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள கூற்றுக்களுக்கான அடிப்படையில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினாலான தாக்கம் தவிர்ந்த, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்களும் தெளிவுப்படுத்தல்களும் என்னால் பெறப்பட்டுள்ளதோடு, எனது விசாரணையின்படி பணியகம் உரிய நிதி அறிக்கைகளைப் பேணி வந்துள்ளது.

- 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1)(அ)(ஜை)ஆம் பிரிவில் தேவைப்படுத்தப்பட்டுள்ளதற்கமைய, பணியகத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் நேரொத்ததாக காணப்படுகின்றன.

- 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1)(ஈ)(ஸை)ஆம் பிரிவில் தேவைப்படுத்தப்பட்டுள்ளதற்கமைய, கடந்த ஆண்டில் என்னால் வழங்கப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கடைப்பிடிக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் அத்துடன் பொருண்மையான விடயங்களுக்கு வரையறை செய்கையில் கீழ்க் காணும் கூற்றுக்களை தெரிவிப்பதற்கான எதுவும் எனது அவதானிப்புக்கு உட்படவில்லை.

- 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் தேவைப்படுத்தப்பட்டுள்ளதற்கமைய, பணியகத்தின் ஆளும் குழுவின் எவரேனும் உறுப்பினர் பணியகத்துடன் தொடர்புடைய ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பொதுவான நடவடிக்கையினின்று விலகி அக்கறை கொண்டுள்ளாரென்பது.

- 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் தேவைப்படுத்தப்பட்டுள்ளதற்கமைய, கீழ்க் காணும் அவதானிப்புகள் தவிர்ந்த ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டத்துடன் அல்லது பணியகத்தின் ஆளும் குழுவினால் வழங்கப்பட்ட வேறு பொது அல்லது விசேட பணிப்புகளுடன் இணங்கியொழுகாதவாறு செயற்பட்டுள்ளதென்பது.

• சட்டம், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	விபரங்கள்
(அ) 1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டம்	
(ண) 28 (4)ஆம் பிரிவு	கருங்கல் உற்பத்திகளை ஏற்றிச்செல்வதற்கத உரிமம் வழங்கும் வழிமு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.
(ணை) 26(1) மற்றும் 44 (ஆ) ஆம் பிரிவு	அரசாங்த்தின் சார்பில் பணிய அறவிட்டுக்கொண்ட அரசுரிமைப் ப திறைசேரிக்கு அனுப்பவேண்டிய போதி மீளாய்வாண்டினுள் அறவிடப்பட்டிருந்த ரூ 4,326,254,835 ஆன அரசுரிமைப் பணத் ரூபா 605,060,173 திறைசேரிக்கு பணவனுப் செய்யப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தத பிந்திய 04 வருடங்களுக்கு ஏற்புடையத இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டிரு அரசுரிமைப் பணத்தின் மொத்தம் ரூ 1,530,541,421 ஆகவிருந்தது.
(ணை) 52 (2)ஆம் பிரிவு மற்றும் 1997	சுரங்கம் தோண்டப்பட்ட பின்னர்

	ஜனவரி 10ஆம் திகதிய 958ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் திருத்தப்பட்டவாறான 21(அ) சுரங்கம் மற்றும் அகழ்வு ஒழுங்கு விதி	மாதத்திலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதியினுள் காணிகளை மீட்டமைப்பு செய்யாத கைத்தொழில்சார் உரிமங்கள் 874 இலிருந்து பெற்றுக்கொண்ட பெறுமதியில் ரூபா 101,955,175 ஆன வங்கி பிணையை பணமாக்கிச் செலுத்த வேண்டிய மீதியாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.
	1997 ஜனவரி 10ஆம் திகதிய 958ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் திருத்தப்பட்டவாறான 33(4) சுரங்கம் மற்றும் அகழ்வு ஒழுங்கு விதி	சுரங்க உற்பத்திகளின் நிச்சயிக்கப்பட்ட சந்தைப் பெறுமதி, அனுமதிக்கக் கூடிய கழிப்பனவுகள் மற்றும் அரசுரிமைப் பணம் செலுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக செயலாளரிடம் விதப்புரைகளைச் சமர்ப்பித்து காலாகால திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் ஐஐஆம் பாகம் 6.2 (அ) பிரிவு	சட்டத்தின்படி அரை மாதச் சம்பளத்தின் அடிப்படையில் பணிக்கொடை கணிக்கப்பட வேண்டியபோதிலும் முழு மாதச் சம்பளத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளதால் 18 பணியாளர்களுக்கு ரூபா 7,296,846 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததோடு, ரூபா 81,445,551 தொகை பணிக்கொடைக்காக மேலதிகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அரச தொழில்முயற்சிகள் பணிப்பாளர் தலைமை அதிபதி தெரியப்படுத்தியுள்ளதற்கு அமைய கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 6,317,415 ஆன பணிக்கொடையை மீள அறவிட்டுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
இ	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்	
	(ஈ) நிதிப் பிரமாணம் 371 (5)	மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தித்

		தீர்க்கப்படாத கூட்டுத்தொகை ரூபா 10,271,083 ஆன உப பணி முற்பண மீதியை செலுத்தித் தீர்க்க நடவடிக்கை எடுக்காது ரூபா 9,070,105 வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய மீதியாகவும், ரூபா 1,200,978 ஆன தொகை காசு மற்றும் காசுக்குச் சமனான சொத்துக்களாகவும் கணக்குப் பதிவு வைக்கப்பட்டிருந்தது.
	(ஸை) நிதிப் பிரமாணம் 1646	06 வாகனங்களின் அனைத்து ஓட்டக் குறிப்புகளும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன் 38 வாகனங்களின் 03 மாத ஓட்டக் குறிப்புக்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.
(ஈ)	2003ஆம் ஆண்டின் ஜுன் 02ஆம் திகதிய 12ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை	
	(ஸை) 8.3.3ஆம் பந்தி	செலுத்த வேண்டிய அதியுச்ச ஊக்குவிப்புக் கொடுப்பனவு ∴ மிகையூதியக் கொடுப்பனவு 02 மாதத்திற்குரிய மொத்தச் சம்பளமாக இருந்தபோதிலும், அதற்கு முரணாக 9.6 மாதச் சம்பளத்திற்குச் சமமான கொடுப்பனவு திறைசேரியின் அங்கீகாரமின்றி பணியாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.
	(ஸை) 6.5.3ஆம் பந்தி	2015 தொடக்கம் 2017 வரையான வருடங்களின் ஆண்டறிக்கைகள் 2019 ஏப்பிறல் 30ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.
(உ)	2003 ஆண்டு ஒக்ரோபர் 28ஆம் திகதிய பீஈடி 17ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை	திறைசேரியின் அங்கீகாரமின்றி 04 வெளிநாட்டுப் பயணங்களுக்காக 19 அலுவலர்கள் பங்குபற்றச் செய்யப்பட்டுள்ளனர்.
(ஊ)	2000 ஆண்டு ஜுலை 19ஆம் திகதி 12.∴2000ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை	பயிலுனர்களுக்கான பணிப்பொறுப்புக்கள் ஒப்படைக்கக் கூடாதபோதிலும் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய

அலுவலகங்களில் 149 பயிலுனர்கள் அலுவலக கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

- 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்படி பணியகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்கியொழுகாது செயலாற்றப்பட்டுள்ளது.

- 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்படி கீழ்க் காணும் அவதானிப்புகள் தவிர்ந்த பணியகத்தின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் உரிய காலப்பகுதியினுள் ஏற்புடைய சட்ட விதிகளுக்கு அமைவாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை.

- பெறுகைத் திட்டத்திற்கு மூலதனம் அல்லாத பொருள் வழங்கல் மற்றும் சேவைப் பெறுகை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், வரவு செலவுத் திட்டத்திற்கு அமைவாக பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. பெறுகைத் திட்டம் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் பெறுகை நிகழ்ச்சித் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு அங்கீகரிக்கப்படாத பெறுகைத் திட்டத்தையும் விஞ்சி 94 கணினிகள், 77 அச்சு இயந்திரங்கள் மற்றும் 48 மடிக்கணினிகளை கொள்வனவு செய்ய ரூபா 18,027,184 செலவிடப்பட்டிருந்தது.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்துவதற்கு செயல் நிறைவேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட வழிமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் கனிப்பொருள் அகழ்வு வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை செலுத்தவேண்டிய போதிலும் ரூபா 12,678,745 ஆன கள பரிசோதனை வருமானத்தையும் ரூபா 5,487,000 ஆன பரீட்சார்த்த வெடிவைத்தல் (வுநளவ டீடயளவ) வருமானத்தையும் அடிப்படையாகக் கொண்டு ரூபா 110,166,984 ஊக்குவிப்புக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. ஜீஎஸ்எம்பி தொழில்நுட்ப சேவைகள் கம்பனியிலிருந்து பணியிடத்திற்கு இணைக்கப்பட்டிருந்த 99 பணியாளர்களுக்கு ரூபா 9,588,514 ஆன ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இருபத்தைந்து பதவிகளுக்காக ஒப்பந்த மற்றும் பணி ஒப்படைப்பு அடிப்படையில் 248 பணியாளர்களுக்கு ஏற்புடைய அங்கீகாரம் பெறப்படாமல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததோடு, அதில் 17 பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணிக்குரிய பதவிகளாக இருக்கவில்லை. மீளாய்வு ஆண்டின்

இறுதியில் பணியகத்தில் காணப்பட்ட 87 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன் புவிச்சரிதவியல் பிரிவில் 08 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையில் 11 வெற்றிடங்கள் காணப்பட்டன. கனிப் பொறியியலாளர் மற்றும் நிலப்படவாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அலுவலர்களுக்கு தேவையான அடிப்படை தகைமைகள் இருக்கவில்லை. ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 11 நிரந்தர பணியாளர்களின் நியமனங்கள் பிற்திகதி இடப்பட்டிருந்ததோடு, அதற்கான காரணங்கள் அவதானிப்புக்கு உட்படவில்லை. பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு உடன் முந்திய திகதிவரை பிற்திகதி இடப்பட்டிருந்த சந்தர்ப்பங்களையும் காண முடிந்தது. மேலும், பணியகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளை விஞ்சி 02 பதிவாளர் பதவிகளும், 32 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளும், 04 கனப் பொறியியலாளர் பதவிகளும் வெற்றிடமாக இருந்த நிலையில் ஒப்பந்த அடிப்படையில் 20 பணியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

(இ) கருங்கல் அகழ்வின் அளவினைக் கணிப்பதற்கு விஞ்ஞானபூர்வமான வழிமுறை கடைப்பிடிக்கப்படவில்லை. 2011ஆம் ஆண்டில் உள்ளக சுற்றறிக்கையொன்றை அடிப்படையாகக் கொண்டு சந்தை விலை ரூபா 1,500 எனக் கருதி அரசுரிமைப் பணம் கணிக்கப்பட்டிருந்ததுடன், நிகழ் காலத்திற்கு ஏற்றவாறு சந்தை விலையை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கருங்கல் அகழ்வு உரிம நிபந்தனைகளை மீறி நிலத்தின் அடிப்பகுதியைத் தோண்டுதல், தோண்டி முடித்த பின்னர் நிலத்தை மீட்டமைக்காமை, உரிமமின்றி தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருத்தல், சுற்றாடல் மறுசீரமைப்பிற்கான பிணைமுறி அல்லது பிணையைப் பெற்றுக்கொள்ளப்படாமை, அங்கீகாரம் பெறவேண்டிய நிறுவனங்களில் அங்கீகாரம் பெறாமை, உண்மையாக தோண்டப்பட்ட அளவுக்கான அரசுரிமைப் பணம் பெறாமை போன்ற குறைபாடுகளை அவதானிக்க முடிந்தபோதிலும், அவற்றுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(ஈ) கனிம படிவுகளின் கொள்ளளவை அளவீடு செய்வதற்காக 2016ஆம் ஆண்டில் ரூபா 795,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட இலத்திரனியல் தூர அளவை சாதனம் இரண்டு வருடங்களாக பயன்பாட்டுக்கு எடுக்கப்படவில்லை.

(உ) யான் ஓயா மணல் படிவில் மணல் அகழ்வை மேற்கொண்ட தொழிலாளர்கள் அகழ்வு உரிமத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனைகளை மீறி சுற்றாடலுக்கு தீங்கு விளைவித்திருந்தமை தொடர்பில் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. யான் ஓயா நீர்த்தேக்க கருத்திட்ட நிர்மாணத்திற்காக

பயன்படுத்தப்பட்ட 1,343,810 கியூப் மண்ணுக்காக ரூபா 26.876.200 வும், 3,397 கியூப் மணலுக்காக ரூபா 543,490 வும் என மொத்தமாக ரூபா 27,419,690 அரசுரிமைப் பணம் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக் கம்பனியிலிருந்து அறவிட பட்டிருக்கவில்லை.

(எ) அங்குணுகொலபெலெஸ்ஸ பிரதேச செயலகத்தின் அதிகாரப் பரப்பில் உரிமம் பெற்ற நான்கு நபர்களினால் எல்லையை மீறி தோண்டியிருந்த 31,772 கியூப் கருங்கற்களுக்காக அறவிட வேண்டியிருந்த ரூபா 1,906,320 அரசுரிமைப் பணம் அறவிடப் பட்டிருக்கவில்லை.

(ஏ) 2017 மே மாதம் 22ஆம் திகதி அமைச்சரவையினால் அறிவிக்கப்பட்டதற்கமைய கனிம வளங்கள் தொடர்பான தேசிய கொள்கை ஒன்றை வகுத்து அதற்கான அங்கீகாரத்தை பெற பணியகத்தில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட திகதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2018 ஏப்பிறல் மாதம் 05ஆம் திகதி அகு.∴.17.∴.0629.∴.704.∴.001ஆம் இலக்க அமைச்சரவை முடிவின்படி படிகக் கற்கள் அதிகூடிய வகையில் பெறுமதி சேர்க்கப்பட்ட பின்னர் ஏற்றுமதிசெய்ய வேண்டியபோதிலும், 09 மாவட்டங்களில் 29 நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அகழ்வு உரிமங்களின்படி தோண்டப்படும் படிகக் கற்கள் பெறுமதி சேர்க்கப்படாது ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ்வாறு வெல்லவாய கொட்டிகம்பொக்க பிரதேசத்தில் படிகக்கல் அகழ்வுக்காக வழங்கப்பட்டிருந்த 03 உரிமங்கள் மூலம் தோண்டப்பட வேண்டிய அளிவினை விஞ்சி 10,914 கியூப் படிகக்கற்கள் தோண்டப்பட்டிருந்ததோடு, வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான வளாகம் மற்றும் அதற்கு அருகிலுள்ள தனியார் காணியில் தோண்டப்பட்டிருந்த 22,094 கியூப் படிகக்கற்களுக்காக அறவிடப்படவேண்டிய உரிமத் தொகை உரிமம் பெறுனர்களிடமிருந்து அறவிடப்படவில்லை.

(ஒ) 1992ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க கனிப்பொருட்கள், சுரங்கங்கள் சட்டத்தை வலுப்படுத்துவதற்கான அதிகாரங்கள் பணியகத்திற்கு வழங்கப்பட்டிருந்தபோதிலும் மீறல்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான வழிமுறைகளைத் தயாரிக்க பணியகம் தவறியிருந்தது.

டப்ளியு. பீ. சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில

2021.01.18
உங்களின் இலக்கம் :- ஐஈஎன்/டீ/ஜிஎஸ்எம்பி/1/18

கணக்காய்வாளர் தலைமை அதிகதி,

கணக்காய்வாளர் தலைமை அதிகதி திணைக்களம்,

இலக்கம் 306/72, பொல்தூவ வீதி,

பத்தரமுல்லை.

புவிச்சரிதவியல் ஆராய்ச்சி மற்றும் சுரங்கப் பணியகத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பில் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

வரைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பந்திகள் தொடர்பிலான விடைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1.2 முனைப்பளியுள்ள கருத்துக்கான அடிப்படை

(அ) புளூஆடீ தொழில்நுட்பச் சேவைகள் கம்பனியின் நிதிக் கூற்றுக்களை பணியகத்தின் நிதிக் கூற்றுக்களுடன் ஒன்றிணைக்க முடியாமைக்கான விடயங்கள் இறுதிக் கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) துறைமுக நகரக் கருத்திட்டத்தின் கீழ் அரச பங்குலாபமாக குறிப்பிடப்பட்டுள்ள தொகை நிதிசார் கொடுக்கல் வாங்கல் அல்ல என்பதுடன் உங்களின் கணக்காய்வு வினாவில் குறிப்பிபடப்பட்டுள்ளவாறு அது காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கல் செய்யப்படாமையானது அது நிதியல்லாத விடயமாக இருப்பதனாலாகும். நிதியல்லாத விடயங்கள் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கு ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படுவதில்லை.

எனவே இத்தொகை செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் சீரூக்கல் செய்யப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குவதில்லை.

மேலும் பணிக்கொடை செலுத்துவதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 1,958,859 ஆன தொகையில் உள்ளடங்குவது பணிக்கொடை செலுத்தும் போது அறவிட்டுக் கொள்ள வேண்டிய தொகையை அறவிட்டுக் கொண்ட பின்னர் செலுத்தப்பட்டுள்ள தொகை, காசுப் பாய்ச்சலாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும் இது உள்ளடக்கப்பட்டிருப்பது நிதிச் செயற்பாடுகளின் கீழாகும் என்பதுடன், எதிர்காலததில் கணக்காய்வு அவதானிப்பின் அடிப்படையில் இதனை செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் குறிப்பிட நடவடிக்கை எடுக்கப்படும்.

ரூபா 5,514,806 ஆன தொகை முதலீடு அல்ல. இது ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டியிருந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் தொகையில் கடும் நோய்கள் மற்றும் வேறு நலன்புரி நடவடிக்கைகளுக்கு மாற்றப்பட்ட தொகையாகும். மேலும் அதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 3,572,000 ஆன தொகையும் மேற்படி ரூபா 5,514,806 ஆன

தொகையும் சீராக்கல் செய்யப்பட்டிருப்பது நிதிச் செயற்பாடுகளின் கீழாகும். இது எவ்வகையிலும் பிழையான சீராக்கல் அல்ல.

முன்னைய ஆண்டுக்குச் செய்யப்பட்ட சீராக்கல் 173,929,704 ஆன தொகை தவறாக காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்ல. மேற்படி தொகை உள்ளடக்கிய செலவினம் ஒவ்வொரு வருடமும் செயற்பாட்டு நடவடிக்கையாக முன்னைய ஆண்டுகள் முதல் தொடர்ந்தும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

ரூபா 1,500,000,000 ஆன சீராக்கல் தொடர்பில் செயற்பாட்டு நிதிச் செயற்பாடுகளின் கீழ் சீராக்கல் செய்யப்பட்டுள்ளது.

(இ) வெளித்தரப்பினர்களினால் பணியகத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழங்குகளின் நிதிசார் தாக்கம் ஏற்படுகின்ற வழக்குகள் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டு 1.3.8 பந்தியின் (2) ஆம் இலக்க பந்தியின் கீழ் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

(ஈ) கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(உ) நிறுனத்தின் பணிப்பாளர் சபை தீர்மானம் மேற்கொண்டிருப்பது மீளாய்வு ஆண்டில் பொதுத் திறைசேரிக்குச் செலுத்தப்பட்ட தொகையில் ரூபா 200,000,000 ஆன தொகையை 2019 ஆம் ஆண்டுக்குச் செலுத்துமாறாகும். அவ்வாறு கணக்கீட்டு அலுவலரின் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதும் 2019 அம் ஆண்டுக்கான கொடுப்பனவாக கருத நடவடிக்கை மேற்கொள்ளுமாறாகும். அவ்வாறே அமைச்சின் தீர்மானமாக இருப்பது இதனை 2019 ஆம் ஆண்டுக்காகச் செலுத்திய கொடுப்பனவாக கருதுவதாகும். பிரதம கணக்கீட்டு அலுவலரின் 2019.01.03 ஆம் திகதிய கடிதம் மூலமும் திறைசேரிக்கு குறிப்பிடப்பட்டிருப்பது இது 2019.01.02 ஆம் திகதி நடைபெற்ற தொலைபேசி கலந்துரையாடலுக்கு அமைய குறித்த கருத்திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டுக்குச் செலுத்தப்பட்ட கொடுப்பனவு என்றாகும். எனவே இது தொடர்பில் கணக்காய்வின் அவதானிப்பு மாற்றமடைதல் வேண்டும்.

(ஊ) ரூபா 10,703,148 ஆன தொகை கிடைத்திருப்பது சுனாமி உபகரணங்களின் அவசர செலவினங்களை செய்வதற்கு முற்பணமாகவாகும். எனவே இது முன்னைய ஆண்டுகள் முதல் நடைமுறை பொறுபபாகக் காட்டப்பட்டுள்ளது.

(எ) வருமான வரி கணிப்பிடப்பட முன்னர் நாம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அறிவுரைகளை கோரினோம். இதற்கான காரணம் இந்த நிறுவனம் முதற் தடவையாக வருமான வரி செலுத்த வேண்டும் என்று வரிச் சட்டத் திருத்தம் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதனாலாகும். இது தொடர்பிலான வெளிப்படுத்தல்களின் கீழ் 1.3.5 பந்தியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எமக்கு அறியத்தந்திருப்பது ஆண்டுக்குரிய வரியை கணிப்பிடும் போது வரி தொடர்பிலான சகல செலவினங்களும் ஆண்டுக்கு கணிப்பிடப்பட்டு குறைப்பதற்கு இடமளிக்கப்படும் என்றாகும். உதாரணமாக ஊயிவையட யடடழறயஎந இன் கீழான தொகை ஒன்பது மாதங்களுக்கு அல்ல என்பதுடன் முழு ஆண்டுக்கும் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்பட்டு குறைப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. எனவே வரியை கணிப்பீடு செய்யும் போது அதிகரிப்பு ஏற்படுவதில்லை. கணக்காய்வு வினாவிக் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வரி அதிகரித்து வெளிப்படுத்துவது இடம்பெற்றிருக்கவில்லை.

(ஏ) விடை தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஐ) இந்தப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் பணியகத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டது. இதன் போது இது நிதியமொன்று அல்லது என்றும் குறித்த அலுவலர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ளப்பட்ட தொகை வங்கியிலிடப்பட்டுள்ள தொகை மாத்திரமாகும் என்றும், இவ்வாறு வங்கியிலிடப்பட்ட தொகைக்கு வட்டித் தொகையும் கிடைத்ததுடன், அதற்கமைய கணக்காய்வு வினாவுக்கு அமைய வைப்புச் செய்யப்பட்ட தொகை ஒரு சொத்தாகவும், அலுவலர்களுக்குச் செலுத்த வேண்டியுள்ள தொகை பொறுப்பொன்றாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் ஏற்பாடுகின்ற தேறிய பெறுபேறுக்கு அமைய இறுதிக் கணக்குகளுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படுவதில்லை என்றும் மேற்படி கூட்டங்களின் போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொகைகளை முறையான கட்டுப்பாடு ஏற்படும் வகையில் பேணிவரும் நோக்கத்துடன் மேலே தெளிவுபடுத்தப்பட்டுள்ளவாறு கணக்குகளில் பதிவு செய்வதற்கு மேலுள்ள காரணங்கள் அடிப்படையாக அமைந்தது என்றும் மேலும் அக்கூட்டங்களில் சுட்டிக்காட்டப்பட்டது. எவ்வாறாயினும் இது தொடர்பில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சமமானதாக இருத்தல் வேண்டும் எனினும் கணக்காய்வுப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சிறிய மாற்றம் வெளிப்படுத்தப்படுவது வங்கி வைப்புக்களுக்கு வட்டித் தொகை தனியான கணக்குகளில் பதிவு செய்து அது தவறுதலாக பணியகத்தின் வருமானத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்ததனாலாகும். எதிர்காலத்தில் வட்டித் தொகை கிடைப்பது பணியகத்தின் அலுவலர்களுக்கு உரித்தாக வேண்டிய தொகையாக இருப்பதனால் இதன் போது குறித்த பொறுப்புத் தொகைகளை உரியவாறு சீராக்கல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டங்கள், விதிகளுக்கு இணங்கியொழுகாமை

(அ) (ஈ) 28 (4) ஆம் பிரிவு

பணியகம் கருங்கல் உற்பத்திகளை கொண்டுசெல்வதற்கு உரிமப்பத்திரம் வழங்கும் முறையியலை தற்போது தயார் செய்துள்ளது.

(ளை) 26 (1) மற்றும் 44 (ஆ) பிரிவு (ை)

சுரங்கம் மற்றும் கனியப் பொருட்கள் சட்டத்திற்கு அமைய பணியகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதுனட், இதன் போது பணியகத்திற்கு நிதிகளைப் பேணிவர முடியும் என்பதுடன், பணியகத்தின் செலவினங்களை அதன் மூலம் ஈடுசெய்துகொள்வதற்கும் தத்துவமுள்ளது. எவ்வாறாயினும் பணியகம் ஒவ்வொரு வருடமும் திறைசேரிக்கு மேலதிக நிதிகளை அனுப்ப செயற்படுகின்றது.

(ளளை) 52 (2) பிரிவு

தற்போது அகழ்வு செய்த பின்னர் புனரமைப்புச் செய்யப்படாத குழிகளுக்காக பணியகத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள வங்கிப் பிணையை கைப்பற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் முறையியல் ஒன்று தயார் செய்யப்பட்டுள்ளது.

(ஈ) இது தொடர்பில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆ) பணியகம், பணிக்கொடை சட்டத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், அது தொடர்பில் தொழில் திணைக்களத்தினாலும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. அதற்கமைய மிகைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதனால் அறவிட்டுக் கொள்ள வேண்டியதில்லை.

இ) **(ை)** இது தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ளை) சகல வாகனங்களுக்கும் பயணக் குறிப்புக்கள் தற்போது வழங்கப்பட்டுள்ளன.

ஈ) **(ை)** பீஈடு 12 இல் குறிப்பிடப்பட்டிருப்பது ஊக்குவிப்புக் கொடுப்பனவு (ஐஎநவெளைந) தொட்பில் அன்றி மிகையூதியம் (டிழரௌ) தொடர்பிலாகும்.

(ளை) 2015 மற்றும் 2016 ஆண்டறிக்கைகள் ஏற்கெனவே அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

உ) குறித்த அலுவலர்களுக்கு அமயக் கொடுப்பனவு, வீசா கட்டணம், குளிருக்கான ஆடைக் கொடுப்பனவு மற்றும் பாடநெறிக் கட்டணம் மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளதுடன், இணைந்த கொடுப்பனவு செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் வெளிநாடு செல்லும் காலஎல்லை 30 நாட்களைத் தாண்டாதிருப்பதனால் திறைசேரியின் அங்கீகாரம் அவசியமில்லை.

ஊ) போதியளவு நிரந்தர பதவியணியினர் இல்லாமையினால் நிரந்தரமல்லாதவர்களுக்கும்

பல்வேறு பொறுப்புக்களை கையளிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. தற்போது இந்த நிலை சீரடைந்துள்ளது.

- 2019 ஆம் ஆண்டு முதல் பெறுகைத் திட்டத்திற்கு மூலதனமல்லாத பொருட்களை பெறுதல் மற்றும் சேவைகளைப் பெறுவதும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டு ஆய்வுகூடத்திற்கு 49.5 மில்லியன் ரூபா ஆன தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இவ்வாறு ஒதுக்கப்பட்ட தொகையில் புவிச்சரிதவியல் ஆய்வுகூட உபகரணம் தவிர ஏனைய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- பொது மக்களுக்கான சேவைகளை மென்மேலும் வினைத்திறன்மிக்கதாக்கும் பொருட்டு ழநெ ளவழி கருத்திட்டம் மற்றும் பசுமைமணல் இறங்குதுறை எண்ணக்கரு அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக 2018 ஆம் ஆண்டில் சேவைகளின் தேவைகளுக்காக கணினிகளைக் கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டது.
- லேசர் அச்சு இயந்திரங்கள் பரவலாக 2012 முதல் 2017 ஆம் ஆண்டு வரை உரிமப்பத்திரம் அச்சிட பயன்படுத்தப்பட்டதுடன், இவ்வாறு அச்சிடப்பட்ட உரிமப்பத்திரங்களின் எழுத்துக்கள் குறுகிய காலத்தில் அழிந்ததன் காரணமாக உரிமப்பத்திரங்களின் செல்லுபடியானதன்மை பற்றிய சிக்கல் எழுந்துள்ளது. அதன் காரணமாக பணியகத்தின் கணினிப் பிரிவினால் 2018 ஆம் ஆண்டில் லேசர் அச்சு இயந்திரங்களுக்குப் பதிலாக ஐமே - துநுவு அச்சு இயந்திரங்கள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய சேவைசார் தேவை மற்றும் இந்த அச்சு இயந்திரங்களைப் பயன்படுத்தும் போது அலகுக்கான செலவினம் ஒப்பீட்டு ரீதியில் குறைவாக இருப்பதனால் இந்த அச்சு இயந்திரங்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- 2018 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட புதிய அலுவலர்களுக்கு மற்றும் வெளிக்கள கடமைகளில் ஈடுபடுகின்ற அலுவலர்களின் சேகைளை வினைத்திறன்மிக்கதாக்குவதற்கு மேற்படி லெப்ரொப் கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டன.

13.(அ) வெளிக்கள வருமானம் மற்றும் பரிசேதனை வெடிக்கச் செய்யும் கட்டணம் ஆகிய பகுதிகள் இரண்டும் கனிய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டின் வருமானமாக கொள்ளப்பட்டுள்ள வெளிக்களப் பரிசோதனை வருமனம் இதில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி உரிமப்பத்திரம் பெற்றுக் கொடுப்பதற்காக மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் அல்ல என்பதுடன், இது கனிய ஆராய்ச்சிக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானமாகும். இதற்கமைய, பரிசோதனைக்காக வெடிக்கச் செய்யும் கட்டணமும் கனிய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றது.

(ஆ) கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள பல பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேலும் பணியகத்தின் அவசர சேவைசார் தேவைகளின் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் பல்வேறு பதவிகளுக்கு ஆட்சேர்ப்பும் செய்யப்பட்டுள்ளது.

மேலும், பணியகத்தின் பணியாட்டொகுதியின் ஒழுங்கமைப்பு 2013 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையானது 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி ஆட்சேர்ப்புச் செய்வதற்கு குறிப்பிடத்தக்களவு காலம் எழுத்துள்ளது. இதன் மூலம் உள்ளக பதவி உயர்வுகளுக்கு உரிமைபெற்றிருந்த அலுவலர்களுக்கு இந்தத் தாமதம் காரணமாக அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இவ்வாறு நேர்முகப் பரீட்சைத் திகதி முதல் மேற்படி நியமனம் பெற்றுக் கொடுக்கப்பட்டதனால் அவர்களுக்கு ஓரளவுக்கு நிவாரணம் கிடைத்துள்ளது. இவர்கள் நிறுவனத்தினுள் சேவையாற்றி வருவதன் காரணமாக இவ்வாறு அத்திகதி முதல் நியமனம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், பணியகத்தின் ஆரம்பம் முதல் இவ்வாறான சந்தர்ப்பங்களில் மேற்படி முறையியல் பின்பற்றப்பட்டுள்ளது.

அவசர சேவைசார் தேவைகளுக்கு அமைய பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்டன.

இ) தற்போது மொரட்டுவை பல்கலைக் கழகத்தினதும் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டு கருங்கல் உட்பட சகல கனிய அகழ்வுகளின் போதும் அகற்றப்படுகின்ற கியுப் அளவுகளை தீர்மானிப்பதற்கான தொழில்நுட்ப முறையியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

(ஈ) கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இலத்திரனியல் தூரத்தை அளவிடும் உபகரணம் புவிச்சரிதவியல் பிரிவினால் பின்வரும் ஆய்வு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

- வட மாகாணத்தின் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வல்லிபுரம் மற்றும் சம்பியன்பற்று

பிரதேச கரையோரப் பகுதியில் சிலிகா மணல் ஆய்வு 2018 அறிக்கை இலக்கம் - ஆசு.்.னு.்.20.்.2018

- முல்லைத்தீவு மாவட்டத்தின் அலம்பில் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட நில மணல் ஆய்வு
- முல்லைத்தீவு மாவட்டத்தின் சிலாவத்துறை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட நில மணல் ஆய்வு அறிக்கை இலக்கம் - ஆசு.்.பு.்.149.்.2019
- வவுனியா மாவட்டத்தின் கற்குழிகளின் அளவைகளை மதிப்பீடு செய்யும் ஆய்வு வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்காய்வுப் பிரிவுடன் மேற்கொள்ளப்பட்ட கூட்டு ஆய்வு

தற்போது இந்த உபகரணம் அகழ்வுப் பிரிவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

உ) யான் ஓயா கருத்திட்டத்தின் மணல் அகற்றுவதற்காக நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் சிபாரிசுகளுக்கு உட்பட்டு உரிமப்பத்திரம் வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட உரிமப்பத்திரங்கள் தொடர்பில் அகழ்வு செய்யும் நிலப்பிரதேசத்தை புனரமைப்புச் செய்வது தொடர்பில் வங்கிப் பிணை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பில் அநுராதபுரம் மாவட்ட செயலாளரின் தலைமையில் அதற்குரிய நிறுவனங்களின் பங்கேட்புடன் இந்த அகழ்வு நிலப்பிரதேசத்தை புனரமைப்புச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அறிவுறுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக யான்ஓயா நீர்த்தேக்க கருத்திட்டத்தை நிர்மாணிக்க பயன்படுத்தப்படுகின்ற கற்கள் மற்றும் மணலுக்கும் ஏற்கெனவே அரச ஆக்கவுரிமையை அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஊ) பணியகமானது, சுரங்கம் மற்றும் கனியப்பொருட் சட்டத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொண்டு வருவதுடன், அதற்கமைய பணியகத்திற்கு நிதியங்களைப் பேணிவர முடியும். இதன் மூலம் பணியகத்தின் செலவினங்களை ஈடுசெய்துகொள்வதற்கும் தத்துவமளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு வருடமும் திறைசேரிக்கு மிகையான தொகைகளைப் பெற்றுக் கொடுப்பதும் இடம்பெறுகின்றது.

எ) இந்த அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலுக்கு அமைய கனிய வளம் பற்றிய தேசிய கொள்கை தயார் செய்யப்பட்டு சுற்றாடல் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஏ) அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய பெறுமதி சேர்க்காது திருவானா கனியத்தை

ஏற்றுமதி செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்படுவதில்லை. அகழ்வு உரிமப்பத்திரம் பெற்றுள்ளவர்களினால் திருவானா ஏற்றுமதி செய்யப்படுவதில்லை என்பதுடன், வியாபார உரிமப்பத்திரம் பெற்றுள்ள ஏற்றுமதியாளர்கள் இந்த திருவானாவை கொள்வனவு செய்கின்றார்கள். இதன் போது உரிய பெறுமதி சேர்க்கப்பட்ட பின்னர் மகவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல்துறை அமைச்சுச் செயலாளரின் கைஒப்பத்துடன் கனிய முதலீட்டு உடன்படிக்கைக்கு அமைய திருவானா ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

வெல்லவாய் கொட்டம்பொக்க பிரதேசத்தில் திருவானா அகழ்வு செய்ய வழங்கப்பட்டிருந்த உரிமப்பத்திரம் பெறுமதி சேர்க்கப்பட்ட பின்னர் ஏற்றுமதி செய்யப்படும் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன், சுரங்கம் மற்றும் கனியப் பெருட் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய அதற்குரிய அரச ஆக்கவுரிமை அறவிட்டுக் கொள்ளப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

ஐ) தற்போது பணியகத்தின் சட்டப் பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டு சுற்றிவலைப்புப் பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன், சட்டத்தை மீறுவது தொடாபிலான மேற்படி சுற்றிவலைப்புக்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 2018 ஆம் ஆண்டு பணியகத்தினால் நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவலைப்புக்களின் போது சட்டத்தை மீறுவது தொடர்பில் 9000 இற்கும் மேற்பட்ட சுற்றிவலைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் திணைக்களம் அறிக்கையிட்டுள்ளது.

அநுர வல்பொல,

தவிசாளர்,

புவிச்சரிதவியல் ஆராய்ச்சி மற்றும் சுரங்கப் பண

கணக்காய்வுக் குழு அறிக்கை

கணக்காய்வுக் குழு அறிக்கை

"இயற்கை வளங்கள் மற்றும் சுற்றாடலை பாதுகாக்கும் பணியில் இடையறாத ஈடுபாட்டைக் கொண்ட, மக்கள் நம்பிக்கை வைத்துள்ள நல்லாளுகைச் செயற்பாட்டு வரம்பினுள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒழுங்குபடுத்தல் நிறுவனமொன்றைக் கட்டியெழுப்புதல்."

நல்லாட்சிக்கான அரச தொழில் முயற்சி வழிகாட்டியின் தொழிற்பாட்டு நெறிமுறைகளை ஆதாரமாகக் கொண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பட்டயத்தில் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் கணக்காய்வுக் குழுவினது விதிகளும் பொறுப்புக்களும் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழு முகாமைத்துவச் சபைக்குப் பொறுப்புக் கூறுவதுடன் அதன் நடவடிக்கைகளை சபைக்கு அறிக்கையிடுகின்றது.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் கணக்காய்வுக் குழுவானது முகாமைத்துவ சபையின் 03 உறுப்பினர்களைக் கொண்டமைந்துள்ளதோடு திறைசேரியை பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர் இக்குழுவிற்கு தலைமை தாங்குவார். இக்குழுவின் உறுப்பினர்களது பெயர்கள் பின்வருமாறு,

1. **தலைவர் -திருமதி.பியங்கா என் கமகே**
(பணிப்பாளர் – தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்)

2.**உறுப்பினர் - திரு.எம்.பீ.டீ.யூ.கே.மாப்பா பத்திரண**
(மேலதிகச் செயலாளர், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு)

3.**உறுப்பினர் - திரு.மாஷங்க எச்.லியனகே**
(உதவிப் பணிப்பாளர் – கொள்கை அபிவிருத்தி - கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு)

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் விதிகள் மற்றும் பொறுப்புகள்

கம்பெனியின் நிதி மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய நடவடிக்கைகளை பயன்மிக்க வகையில் நிறைவேற்றுவதற்காக கணக்காய்வு

முகாமைத்துவக் குழுவானது பணிப்பாளர் சபைக்கு தொடர்ச்சியாக பங்களிப்பு வழங்கி வருகின்றது.

கணக்காய்வு முகாமைத்துவ குழுவுக்கு பின்வரும் பணிகளை ஆற்றுவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது

1. சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள், திறைசேரி சுற்றறிக்கைகள் மற்றும் விடுக்கப்படும் பணிப்புரைகளின் இணக்கத்தை மீளாய்வு செய்தல்.
2. குழுவின் விதப்புரைகளை முகாமைத்துவ சபைக்கு ஆற்றுப்படுத்தல்.
3. புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தை செலவினக் கூருணர்வு மற்றும் பயனுறுதி வாய்ந்ததொரு நிறுவனமாக மாற்றி அமைக்கும் நோக்கத்துடன் நிறுவனத்திற்கான பதவியணியினரின் ஒழுக்கம், செயலாற்றுகை, அவசியமற்ற செலவுகள், ஊழல் ஒழிப்பு போன்ற விடயங்களுடன் சம்பந்தப்பட்டதான விடயங்களை மீளாய்வு செய்தல்.
4. மோசடி தொடர்பான அபாயங்களைக் குறைத்துக் கொள்வதற்காக பொருத்தமான புலனாய்வுகளை மேற்கொள்ளுதல்.
5. குழுவின் பரிந்துரைகளை மேலாண்மை வாரியத்தில் சமர்ப்பித்தல்
6. புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்தின் ஒழுங்கு, செயல்திறன், தேவையற்ற செலவுகள் மற்றும் ஊழல் நடைமுறைகள் மற்றும் தொடர்புடைய விஷயங்களை மதிப்பாய்வு செய்தல், இது செலவு உணர்திறன் மற்றும் உற்பத்தி நிறுவனமாக மாற்றும் நோக்கத்துடன்.
7. மோசடி அபாயத்தைக் குறைக்க தகுந்த விசாரணைகளை மேற்கொள்ளுங்கள்.

குழுக் கூட்டங்கள்

201**8** ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற நிதியாண்டில் நான்கு குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. குழுக் கூட்டங்கள் தொடர்பான விடயங்கள் போதியளவில் அறிக்கையிடப்பட்டு பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு ஒழுங்காக கொண்டு வரப்படும். இவ்வாறு நடத்தப்படும் கூட்டங்களில் உறுப்பினர்களின் பங்கேற்றல் பின்வருமாறு அமையும். குழுவின் அழைப்பின் பேரில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பிரதிநிதி இந்த ஆண்டில் நடத்தப்பட்ட கூட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

2018ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அமைப்பு

	2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற மொத்த கூட்டங்களில் பங்கேற்ற மொத்த கூட்டங்களின் எண்ணிக்கை
திருமதி.பியங்கா என் கமகே	4
திரு.எம்.பீ.டீ.யூ.கே.மாப்பா பத்திரண	4
திரு.மாஷங்க எச்.லியனகே	4

உள்ளக கணக்காய்வு

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகமானது உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரின் தலைமையின் கீழ் இயங்கும் கணக்காய்வுப் பிரிவொன்றைக் கொண்டுள்ளது. உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டதோடு இந்தக் குழு தொடர்ச்சியாக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மீளாய்வு செய்து கண்காணிப்பதுடன் அதன் பணிகளையும் பரீட்சிக்கின்றது.

வெளிவாரியான கணக்காய்வு

இயைபுறாமை, முறைசாரா கணக்கீடு மற்றும் அறிக்கையிடல் தொடர்பான பிரச்சினைகளுக்கு உரிய காலத்தில் தீர்வு காணும் வகையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் மீளாய்வு செய்யப்படுகின்றன.

முடிவு

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் உள்ளகக் கட்டுப்பாட்டை பயனுறுதியாக நடைமுறைப்படுத்தியுள்ளமை தொடர்பாகவும், நிறுவனத்தின் சொத்துக்கள் முறையாக பாதுகாத்துள்ளமை தொடர்பாகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு திருப்தியடைகின்றது. அத்துடன் உள்ளக கணக்காய்வுப் பிரிவு ஆண்டு பூராகவும் பயனுறுதி மற்றும் சுயாதினமாக இயங்கியுள்ளதாகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு திருப்தியடைகின்றது. மேலும், கணக்கீட்டுக் கொள்கைகளின் பயன்பாடு தொடர்பிலும் குழு திருப்தியடைவதோடு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப்

பணியகத்தின் நிதிக்கூற்றுக்கள் நம்பகத்தன்மையுடன்கூடியவை என்பது அதனூடாக நியாயமான முறையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இயைபாக செய்யப்பட்டுள்ளது என்பது பணியகத்தின் இணக்கப் பணிச்சட்டகம் உறுதிப்படுத்தப்படுவதாக குழு திருப்தியடைகின்றது. மீளாய்வு ஆண்டினுள் அறிக்கையிடப்பட்டுள்ள இயைபுறாமை தொடர்பில் நிவர்த்தி செய்தல்களும் தவிர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 2019.01.30 ஆம் திகதி இந்த அறிக்கையை அங்கீகரித்தது.

திருமதி.பியங்கா என் கமகே
தவிசாளர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

நிறுவனரீதியான சமூகப் பொறுப்பு

நிறுவனத்தின் சமூகப் பொறுப்புகள்

சுரங்கப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகளும் தேசிய பொருளாதாரத்திற்கான பங்களிப்பும்

புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகமானது சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான சுரங்க அகழ்வு என்பவற்றை செயல்படுத்துவதில் சில விசேட நடவடிக்கைகளை எடுத்தது. வனரோபா மற்றும் ஜல நிம்ன ஹரித அரண போன்ற கருத்திட்டங்களாவை சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் பொதுமக்களையும் தனியார் அமைப்புகளையும் ஊக்குவிக்கவுமான பிரதான இயக்கமாகக் கருதமுடியும். "பசுமை மணல் படகுத்துறைக் கருத்திட்டம்" என்பது இலங்கையில் நிலைபேறான சுரங்க அகழ்வினை மேம்படுத்துவதற்கான ஒரு விசேட நிகழ்ச்சித்திட்டமாகும். மேலும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை வளர்ப்பதற்கான ஒரு படியாக ஜி.எஸ்.எம்.பி மேலும் பல சமூதாயங்களைக் கட்டியெழுப்புவதற்கான கருத்திட்டங்களை மேற்கொண்டன.

1. **பசுமை மணல் படகுத்துறை கருத்திட்டம்**

இலங்கையின் பொது மக்களின் கருத்தின் பிரகாரம் சட்டவிரோதமாகவும், அதிகப்படியாகவும் முறையற்ற வகையில் இடம்பெறுகின்ற நதி மணல் அகழ்வின் மூலம் ஆற்றுப் படுக்கை ஆழமடைதல், ஆற்றங்கரை அழிவடைதல், ஆற்றங்கரைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சரிவுகள் அரிப்புக்கு உள்ளாகி ஸ்திரத்தன்மை பாதிக்கப்படுதல், உவர்தன்மை ஏற்படுதல் உள்ளடங்கியதாக நாட்டின் நதிச் சூழல் முறைமைகளுக்கு மிகவும் கடினமான சிக்கல்கள் ஏற்படுத்தப்படுகின்றன. பௌதீக, இரசாயன மற்றும் புவி தொழில்நுட்ப தாக்கங்களுக்கு மேலதிகமாக மறைமுக சமூகவியல் தாக்கங்களும் இனங்காணப்பட்டுள்ளன.

மேற்படி சிக்கலான சுற்றுச்சூழல் அவலங்கள் அனைத்தையும் அடையாளம் காண்பதன் மூலம் நடைமுறையில் உள்ள இயற்கை மற்றும் நடத்தை ரீதியான தாக்கங்களுக்கு எதிராக எதுவித தாமதமுமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் தேவை உணரப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட பசுமை மணல் படகுத்துறை கருத்திட்டமானது ஒரு பொருத்தமான மற்றும் கால ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த செயல்படுத்தக்கூடிய சுற்றுச்சூழல் மற்றும் சமூகவியல் தீர்வுக் கருத்தாகும் என்பதோடு அதனை திறம்பட செயற்படுத்தவும் முடியும்.

மீள் மர நடுகை, வழமை நிலைமைக்குக் கொண்டுவருதல் மற்றும் புணர்வாழ்வளிப்பதற்காக நாடு தழுவிய ரீதியில் பாரிய அளவிலான பரந்த கருத்திட்டமாக நதி மணல் அகழ்வு உரிம்மப்பத்திரதாரர்களுக்கு மத்தியில் அனைத்து ஆற்றுப் படுக்கைகளிலும் உத்தேசிக்கப்பட் பசுமை மணல் படகுத்துறை எனும் ஆக்கபூர்வமான சுற்றுச்சூழல் நிறைவினை ஏறப்டுத்தும் திட்டமாக வெற்றிகரமாக செயல்படுத்த முடியும்.

துல்ஹிரியாவில் அமைந்துள்ள மாஸ் ஃபேப்ரிக் பூங்காவில் ஆகஸ்ட் 29 மற்றும் 30 ஆம் தேதிகளில் “பசுமை மணல் படகுத்துறை” கருத்தியல் குறித்த ஒரு செயலமர்வு நடத்தப்பட்டது. பின்னர் பிரிவு வாரியாகவும் பிராந்திய வாரியாகவும் உரிமம் பெற்றவர்களுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. அதன் பிரகாரம் ஜீஎஸ்எம்பீ விற்கு சுமார் 3000 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

சுமார் 3000 விண்ணப்பப்படிவங்கள் GSMB க்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.









2. வனரோபா

"வனரோபா" நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக "ஜல நிம்ன ஹரித அரண" நிகழ்ச்சித்திட்டம், சுற்றாடல் பிரதி அமைச்சர் திரு. அஜித் மானப்பெரும மற்றும் புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தின் தலைவர் திரு.அசேல இத்தவெல அவர்களின் அனுசரணையின் கீழ் மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மல்வத்து ஓயா அரிப்பு பாலத்தின் அருகில் 2018 அக்டோபர் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது .






சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம் ஏற்பாடு செய்த "வனரோபா" நிகழ்ச்சித்திட்டம், இசுருமுனி விஹாரைக்கான தோட்டத்தில், 2018 அக்டோபர் 6 ஆம் திகதி நுவரகம்பலாத்தவின் தலைமை விகாராதிபதி வண.மாதவ ஸ்ரீ சுமங்கல நாயக்க தேரர் அவர்களின் அனுசரணையின் கீழ் ஆரம்பமானது.

நிகழ்ச்சித்திட்டமானது புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தின் தலைவரின் பங்கேற்பில் கௌரவ சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் அனுசரணையின் கீழ் 2018 நவம்பர் 02 ஆம் திகதி வரலாற்று ரீதியில் பெருமைவாய்ந்த சோமாவதி புனிதத் தளத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

3. RO விளையம்

RO கருத்திட்டம் என்பது வடமத்திய மாகாணத்தில் சிறுநீரக நோயினை இல்லாதொழிப்பதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும். அதன் மூலம் அனுராதபுரம் மிஹிந்து மடாலயத்தில் அமைத்துள்ள ஜி.எஸ்.எம்.பி இனால் நன்கொடையளிக்கப்பட்ட சிவில்ஸ் ஆஸ்மோசிஸ் தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் நீர் சுத்திகரிப்புப் பொறியினை மூலம் கிராமங்களுக்கு நீர் நன்கொடையளிக்கப்படுகின்றது.

500 வது RO பொறிக்கான நன்கொடையானது 21/09/2018 அன்று, அதிமேதகு ஜனாதிபதியின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டதோடு அங்கு 500 RO பொறிகளால் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் ஜெய ஸ்ரீ மகா போதிக்கும் அளிக்கப்பட்டது

4.கடவல வாவியின் மறுசீரமைப்பு

கிராமவாசிகளின் பாசன நடவடிக்கைகளை எளிதாக்கும் பொருட்டு பொலனறுவை, தமன்கடுவ, கடவர வாவியின் மறுசீரமைப்பானது ஜி.எஸ்.எம்.பி தொழில்நுட்பச் சேவைகள் கம்பெனி, இலங்கை கடற்படை, ஜி.எஸ்.எம்.பி மற்றும் தமன்கடுவை மணல் அகழ்வுச் சமுதாயத்தின் உதவியுடன் 19/08/2018 ஆம் திகதி நடைபெற்றது.











5.புத்தாண்டு விழா

அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் மன்னம்பிட்டி மணல் அகழ்வில் ஈடுபடும் மக்களது பங்கேற்புடன் 2018 மே 05 ஆம் திகதி புத்தாண்டு விழா பொலனறுவை தேசிய விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்டது. பொதுமக்களின் முயற்சிகளை நினைவுகூரந்து கொண்டாடுவது இந்த விழாவின் நோக்கமாக அமைந்தது.

6. பிராந்திய அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்கள்

சுரங்க நடவடிக்கைகள் தொடர்பான பிரதான தொழில்துறை சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், நிலையான சுரங்க செயன்முறைக்கு வழிகாட்டுவதற்கும் சுரங்கப் பிரிவு பல்வேறு மாவட்டங்களில் பல கருத்தரங்குகளையும் மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தியுள்ளன.



செயலமர்வு/விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்	திகதி	நோக்கம்
1. பதுளை பிராந்திய அலுவலகத்தில் மரக்கன்று விநியோக நிகழ்ச்சித்திட்டம்	05.10.2018	"வனரோபா" மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக
2. மொனராகலை நூலக கேட்போர்கூடத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் 3. மொனராகலை பிராந்திய அலுவலகத்தில் மரக்கன்று விநியோக நிகழ்ச்சித்திட்டம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம். நில்கலவின் பம்மதில்ல ஓயாவைச் சுற்றி மர நடுகை	07.08.2018 28.11.2018 20.12.2018	பசுமை மணல் படகு போட்டிக்காக உரிமதாரர்களை அறிவூட்டி ஊக்குவித்தல். "வனரோபா" மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக

செய்யப்பட்டுள்ளது		
4. கேகாலியில் புனர்வாழ்வு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்	05.10.2018	சர்வதேச சுற்றாடல் தினத்திற்கு இணையாக
5. களுத்துறை டீ.எஸ் அலுவலகத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் 6. களுத்துறை டீ.எஸ் அலுவலகத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் 7. மில்லனியவின் உடுவாரவில் களு கங்கையைச் சுற்றி மரம் நடுகை நிகழ்ச்சித் திட்டம்	13.03.2018 06.10.2018 06.11.2018	சரியான தொழில்நுட்பங்களுடன் உலோகம், காரீயகம் மற்றும் படிகக்கல் என்பவற்றை அகழ்வு செய்வதற்காக உரிமம் வைத்திருப்பவர்களை அறிவூட்டுதல். பசுமை மணல் படகு போட்டிக்காக உரிமதாரர்களை அறிவூட்டி ஊக்குவித்தல். புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டம்



GSMB

No. 569, Epitamulla Road, Pitakotte, Sri Lanka
gsmb.gov.lk